www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

தினமுரசு வாரமலர்

பக்கம் 20

மார்ச்.03–09,1996

ரூபா 11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TA... ...LY முரசு 143

## வெளிவராத தகவல்கள்





## முல்லைக் கடலில் முத்தாரப்பு நாடகம்



யுத்தகளத்தில் பெண்கள்

சிறைக்குள் பயங்கரவாதம்

கிரிக்கெட் காய்ச்சல்

வினோதமான ஷில்பா

இவ்வார அதிஷ்டசாலி



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## அவநம்பிக்கை விதைகள்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

'83 ஜுலை
வெலிக்கடைச் சிறையில்
மனித வேட்டை-
வரலாறு மறக்காத
மாபெரும் அநியாயம்!

காவலுக்கு இருந்தவர்களே
காட்டுமிராண்டித்தனத்துக்கு
கைதிகளை ஊக்குவித்தனர்.
கண்களைத் தோண்டி,
அங்கங்களை வெட்டி
இனவாத மிருகம் பசியாறிக்கொண்டது.

அன்றைய ஜனாதிபதி,
'தார்மீகவாதி'
காட்டுமிராண்டித்தனத்துக்கு
காரணமானவர்களை கைதுசெய்து
தண்டனைவழங்க
அவரது இரக்க சுபாவம்
இடம்கொடுக்கவில்லை.

"சிறைச்சாலையா?
சவச்சாலையா?" என்று
வெளியிலிருந்து எவராவது
கேட்டுவிடக்கூடாது என்பதால்
ஏனோதானோ விசாரணைகள்
கண்துடைப்புக்காய் நடத்தப்பட்டன.

ஒரு மோசமான குற்றவாளி
தப்பிக்கொள்ள அனுமதிக்கும் போது,
மேலும் நூறு குற்றச்செயல்கள்
நடைபெறுவதற்கு
வழிசெய்யப்படுகிறது
என்றுதான் அர்த்தம்!

வெலிக்கடைச் சிறையில்
'83 ஜுலை வேட்டையின்
சூத்திரதாரிகள்
தக்கமுறையில் தண்டிக்கப்பட்டிருந்தால்,
மகசீன் சிறையில்
சமீபத்தில் நடந்த
கோழைத்தனமான தாக்குதல்
நடைபெற்றிருக்காது!

'83 ஜுலையில்
வெலிக்கடைச் சிறையில்
தமிழ் கைதிகள் கொல்லப்பட்டபோது
அதன் அருகில் இருந்த
மகசின் சிறையிலும்
தமிழ் கைதிகள் தாக்கப்பட்டார்கள்.

'83 ஜுலைக்குப் பின்னர்
மீண்டும் ஒரு தடவை,
மகசீன் சிறையில்,
வேலிகளே பயிரை மேய்ந்துள்ளன.
தண்டனை கிடைக்காது
என்ற உறுதியான நம்பிக்கை,
தவறு தொடரக் காரணமாகிறது.

இப்போது அரசு
என்ன செய்யப்போகிறது?
"குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள்;
விசாரணைகள் நடக்கின்றன"
என்பதெல்லாம் பழைய பல்லவி.

காலம் கடத்தாமல்
குற்றவாளிகளுக்கு தண்டனை
தரப்படவேண்டும்.
பயிரை மேயும் வேலிகள்
மீண்டும் மீண்டும்
தோன்றாமல் செய்யவேண்டும்!

மூதூர் சம்பவமும்
மகசீன் சிறைத்தாக்குதலும்
தமிழ் பேசும் மக்களிடம்
அவநம்பிக்கைகளை
ஆழவிதைக்கத் தொடங்கிவிட்டன.
அதனை அரசாங்கம்
புரிந்துகொள்வதாகத் தெரியவில்லை.

"அரசாங்கம்-
சொல்லியா நடக்கிறது?"
என்று கேட்கலாம்.
இல்லைத்தான், ஆனால்
கடிவாளம் யாரிடம்?

பதவிக்கு வந்த
பொது ஜன முன்னணி
கொலை யுகம் முடிந்தது
என்று சூளுரைத்தது!

தமிழ் பேசும் மக்களைப்
பொறுத்தவரை
கொலையுகம் முடிந்ததாய்
குதூகலிக்க முடியவில்லை.
அந்த நம்பிக்கையை
ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு
அரசையே சேரும்!

பாதுகாப்புக்கான உத்தரவாதம்
தமக்கிருப்பதாக
தமிழ் பேசும் மக்கள்
நம்பிக்கை கொள்ளும் வகையில்
அரசின் அணுகுமுறைகள்
அமைவது மட்டுமே
சாலப் பொருத்தமாக இருக்கும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை-

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## ஆன்மீகம்

### வேலை செய்யும் பொழுது...

உலகில் வேலைக்கொள்வோர் இருப்பதால் வேலை செய்வோர் உள்ளனர். இவ்வாறு தொண்டு செய்வோர் ஆன்மீக நிலை எவ்வாறு தொண்டு செய்யவேண்டும் என்பதைப் பற்றி வேதாகமம் போதிக்கின்றது.

"வேலைக்காரரே, சரீரத்தின்படி உங்கள் எஜமான்களாய் இருக்கிறவர்களுக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்து நீங்கள் மனுஷருக்குப் பிரியமாயிருக்கிறவர்களாய், பார்வைக்கு ஊழியம் செய்யாமல், தேவனுக்குப் பயப்படுகிறவர்களாக கபடமில்லாத இருதயத்தோடே ஊழியஞ்செய்யுங்கள்" (கொலோ 3:22)

வேலைக்காரர்கள் எந்தவிதத்தில் வேலை செய்ய வேண்டும் என்பது மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஆம். வெளிப்பார்வைக்கு, ஆர்வமில்லாமல், ஏதோ வேலைசெய்கிறோம் என்ற எண்ணத்தோடு வேலை செய்யாமல் நெஞ்சத்துக்கு வஞ்சகமில்லாமல் நேர்மையாக, உண்மையாக, முழுமனத்தோடு செய்தல் வேண்டும்.

எனவேதான்-

"எதைச் செய்தாலும் அதை மனுஷருக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள். நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவை சேவிக்கிறதினாலே சுதந்திரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்கள்." (கொலோ-3:23-24)

ஆம்- எதைச் செய்தாலும் கடவுளின் நாமத்தினாலே தொடங்கினால் வெற்றி நமதே என்று பிரகடனப்படுத்தப்படுகிறது. கடமையைச் செய்வோம். பலனைக் கடவுளுக்கு விட்டு விடுவோம்.

ஏ.பி.வி.கோமஸ்-



### ஏந்தல் நபி கூறிய ஏழை

ஒரு மனிதன் கியாமத்து நாளன்று அல்லாஹ்விடம் வருவான். அவன் தொழுகை, நோன்பு, சதக்கா போன்ற நற் செயல்களை நிறைவேற்றியவனாக இருப்பான். ஆனால் அவன் எவரையாவது திட்டியோ, எவர் மீதாவது அவாதூறு கூறியோ, யாரையாவது அடித்தோ இருப்பான்.

இதனால் இவனுடைய நற் செயல்கள் அனைத்தும் இவன் செய்த அநீதிக்காக இவனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுவிடும்.

இப்போது இவன் செய்த நற் செயல்கள் பகிர்ந்தளிக்கப்பட்டவர்களின் பாவங்கள் அனைத்தும் இவன் மீது போடப்பட்டு அந்தப் பாவக் குவியல் காரணமாக அவன் நரகத்திற்கு சென்று விடுவான். இவன்தான் என் உம்மத்தினரின் ஏழை என்பதாக ஏந்தல் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

உத்தம நபியின் உம்மத்தினர்கள் நற்செயல்கள் செய்யும்போது நற் போதனையாக இவை இருக்கட்டும்.

எம்.சி.கலீல், கல்முனை-05

## கவிதைப்போட்டி இல-140

### பரிசுக்குரிய கவிதை

#### ஓடி விளையாடாதே பாப்பா!

ஓடி விளையாடாதே பாப்பா!- போர்
ஒரு நாளும் ஓயாது பாப்பா!
கூடி விளையாட நினைத்தால்- குண்டு
உயிரைத் தின்றுவிடும் பாப்பா!

செல்வி.சித்திரா செல்வவடிவேல், சுவிற்சர்லாந்து.

### இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

#### செல்வருது ஓடிவா!!

செல்வருது செல்வருது செல்வமே!
சல் என்று விழுந்துவிடும் ஓடிவா!!
சோகத்தில் ஆழ்த்திவிடும் செல்வமே!
பங்கருக்குள் போய்விடுவோம் ஓடிவா!!

நஸபியா பஹுர்தீன், கொத்தான்தீவு, புத்தளம்.

#### அவருக்கு ஏது நேரம்...?

அந்தரத்தில் இரு கரங்கள்
ஆண்டவனா நீட்டுகிறார்?
ஆண்டவனுக்கெங்கே
அதற்கெல்லாம் நேரமுண்டு?

ச.வித்யசாகரன், ஹட்டன்.

#### ஏழை!

ஏழை நம் நிலையை
எண்ணி நொந்தாயோ...?
மாடிமனை வேண்டாம்,
கோடி செல்வம் வேண்டாம்
வளரும் பிறையே நீ போதுமடா.

தர்ஷினி மூர்த்தி, மட்/கல்லடி உப்போடை.

#### பாதுகாப்பு

வேகமாய்
வந்துவிடு
ஊரைச்சுற்றி
'தேடுதல்'
வேட்டையாம்...!

சிவா, பிரதானவீதி, கொழும்பு-11.

#### விதை

யுத்தம் இட்டது விதை!
அமோக விளைச்சல்!
தேசமெங்கும் அநாதைகள்?

பொ.சுதாகர், சின்னச்சிப்பிக்குளம், வவுனியா.

#### விரைந்து வா

வீறு கொண்ட யுத்தமதால்
வீதியிலே யாருமில்லை;
சீறுகின்ற தேட்டாக்கள்
சீவனைதைப் போக்கிவிடும்;
வீட்டினுள்ளே விளையாட
வேகமுடன் வந்திடடா.

முஸ்தபா-இஸ்ஸத், ஏறாவூர்

#### அகதி.

இந்தப் பூவின்
தேசம்
போர்த்தீயில்!
இது
நாசமாவதற்குள்
ஒரு நேசக்கரம்
கொடுங்கள்!

வை.சித்தி கிருஷ்ணா, பாண்டிருப்பு-01.

#### ஆறுதலைத் தந்துவிடு.



பாலுக்கு நான் அழுதும்
பருக்கிவிட யாருமில்லை;
பார் செய்த போரதனால்
பாசங்கள் நாசமிங்கே!
அழைக்கும் கரமே!
அனாதை எனக்கின்று
ஆறுதலைத் தந்திடனும்
அம்மாவாய் நீ எனக்கு!

தர்ஷிகாகனகசிங்கம், கல்லடி, மட்டக்களப்பு.

#### அழைக்கும் கரம்

கோரவழி பாதை தன்னில்
ஓலமிடும் என்மகனே!
அன்னை கரம் அடைக்கலமே
அழைக்கின்றேன் வந்துவிடு.

தெ.லோஜனா, கொழும்பு.04

#### பெறுமதி.

வந்துரு ராசா...
நீ-
ஒருத்தன் செத்தா
எனக்கு
நூறு பேர்
செத்த மாதிரி!

கொக்காகல, எஸ்.பிரபா.

#### உரம்

யார்-
போட்ட உரத்தில்
பூத்தது யுத்தம்?
வேர்
அற்ற மரமாய்
வீழ்ந்தது வாழ்க்கை!

எம்.சி.எம்.சுபைர், கல்முனை.

#### பேதமில்லை.

முற்றமும் சுற்றமுமின்று
சிரிக்காது சின்னக் கண்ணா;
மரத்தோடு செடியும்தான்
சேர்ந்தே மடியுது கண்ணா;
குழந்தை நீயென- வெடிக்கும்
குண்டோ பாராது கண்ணா!

பீ.எம்.எம்.அன்ஸார், பு.தெ-வெலிகம.

## கவிதைப் போட்டி இல-143



### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி 09.03.1996.

—முகவரி—

கவிதைப் போட்டி இல: 142. தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## வாசக(ர்) சாலை

★ மறைந்த "மர்மக்கதை மன்னன்" ராஜேந்திர குமாரின் "நீ நீயா?.." திகில் தொடர்; ஆஹா! அட்டகாசமான ஆரம்பம்....!

கூடவே, அபிமான ரசிகனின் வித்தியாசமான வார வரவான "ஒரே ஒரு கொலை!"... அபாரம்!

"சுடச்சுட, சுவைபட!..." தொடர்கள் தரும் "இனிய முரசுக்கு" நேச நன்றிகள்.

கோட்டைமுனை முத்துமணி, பதுளை.

0-0-0



★ அரசியல் மட்டுமல்ல அனைத்தும் அறிந்து அலசுபவர் 'இராஜதந்திரியார்' என்பதை கிரிக்கெட் அலசல் மூலம் நிரூபித்துவிட்ட இராஜதந்திரியாருக்கு பாராட்டுக்கள் பல.

எஸ்.பத்மா, உமாஜினி, நவ்சாத், கொழும்பு-10.

0-0-0

அறிமுகம்.

★ காதிலை பூ கந்தசாமியின் கற்பனைச் சந்திப்பு சிரிக்க மட்டுமா, சிந்திக்கவும் வைக்கிறதே. 20ம் பக்க "இளம் இரத்தம்" அதைத் தந்த விதம் முரசிற்கே உரிய தனிப்பாணி. வொண்டர்புல்...!

என்.கேதீஸ்வரன், கண்டி.

0-0-0

★ வாரம் ஒரு முறை மலர்ந்தாலும் ஒரு வாரத்திற்கு வாசிப்பதற்கு தேவையான சகல அம்சங்களும் முரசில் நிறைந்துள்ளன.

ஜெ.ஹிலேரியன், மட்/தாண்டவன்வெளி.

0-0-0

★ தினமுரசு வாரமலரில் தொடர்ந்து வெளிவரும் இராமாயணத் தொடர் படிக்கவும் பாதுகாக்கவும் வேண்டிய சிறந்த தொடராகும். சுவையாக எழுதிவரும் இராஜகுமாரனுக்கும் வாரவாரம் வெளியிட்டு வரும் எமது அபிமான தினமுரசு வாரமலருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

கே.எஸ்.தேவி, திருமதி. இந்திராணி பாலகிருஷ்ணன், டெல்மார் குறூப், ராகலை.

0-0-0

★ அன்பின் தினமுரசே! வாரம் ஒரு பட்டுச் சேலை கொடுத்து அசத்துகின்றீர்கள். தேன் கிண்ணம் வரவர மெருகேறுகின்றது. உன் பணி என்றும் தொடர வாழ்த்துக்கள்.

எஸ்.ரி.நஸ்ரா, றுசீல், அக்கரைப்பற்று-06.

0-0-0

★ எமது இனிய அன்பு முரசே!

வாரம் தோறும் மலரும் அத்தனை அம்சங்களும் சூப்பர். குறிப்பாக இராமாயணம், பாப்பாமுரசு கவிதைப் போட்டி, சினிவிசிட், வாரந்தோறும் மெருகேறுகிறது. உனது சேவை தொடர வாழ்த்தும் ரசிகர்கள்.

ஜீவா, நாதன், வனிதா- செங்கலடி.

0-0-0

★ 'புலிகளின்' கப்பலாவது வடகடலுக்கு வருவதாவது என்றுதான் முன்னர் முரசு செய்தியை படித்துவிட்டு நினைத்திருந்தேன். முல்லைத் தீவில் நடைபெற்ற சம்பவத்தின் பின்னர் முரசு முரசுதான் என்று மனதார பாராட்டினேன். இப்போது மடல் மூலம் பாராட்டுகிறேன்.

எம்.பாலேந்திரன், வந்தாறுமூலை, மட்டக்களப்பு.

★ என்னையா நாரதரே! கடலில் விடுதலைப்புலிகளது கப்பல் விவகாரம் பற்றி ஒரு வருடத்திற்கு முன்னரே நீர் எழுதியிருந்தீர்! நாம் மறக்கவில்லை. இப்போது உமது தகவலின் நம்பகம் புரிகிறதய்யா! யார் உமக்கு செய்தி தருகிறார்கள்? சொல்லாவிட்டால் உமது தலை வெடித்துவிடும்.

வி.ஜவாஹர், புத்தளம்.

0-0-0

★ புதுத்தொடர் அசத்தல்

ராஜேந்திர குமாரின் நாவல் முதல்வாரமே உச்சக்கட்ட ஓட்டம். அவர் மறைந்துவிட்டதற்காக (ராஜேந்திரகுமார்) உண்மையகவே வருத்தப்பட்டேன். என்ன அற்புதமாக எழுதுகிறார்.

ஏ.அம்பிகா, கொழும்பு-13

0-0-0

★ மூச்சைப்பிடித்துக் கொண்டு அத்தியாயம் முழுக்கவும் வாசித்து முடித்தபின்னர்தான் ஒரு திருப்தி. ராஜேந்திரகுமாரின் நாவலை சொல்லுகிறேன்.

எம்.என்.அன்வர், கல்முனை.

0-0-0

★ மர்மக்கதை மன்னனின் திகில் தொடரை வெளியிடும் முரசுக்கு வாழ்த்துக்கள். ஆரம்பமே ஜோர்.

ஆர். சிவராம், திருமலை.

0-0-0

★ 'ஒரே ஒரு கொலை,' உண்மைச் சம்பவத்தை சூடான தனிநடையில் தரும் ரசிகனுக்கு பாராட்டுக்கள்.

வே. தம்பிராசா, கொழும்பு-5.

**மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்பட முடிந்தவர்கள்:**

* சபா-நாகராஜன், கல்முனை-2.
* நஸீம் தமயந்தி, குட்டிக்கரச்சி.
* செல்வி-அனுஷா, பாணந்துறை.
* கெஸ்டன் பர்னாந்து, கொழும்பு-13.
* தீபனா கணேசமூர்த்தி, கொழும்பு-15.
* ஜே.எம்.கியாஸ், கிண்ணியா-04.
* பி.கே.தமயந்தி, மட்டுநகர்.
* ரி.சசிகலா, சாம்பல்தீவு.
* மு. பரந்தாமன், வெளிமடை
* வி.விவேகானந்தன், நுவரெலியா வீதி, நுவரெலியா.
* வி.சுமதி, கல்முனை-02.
* எம்.கறீமா சனூன், புத்தளம்.
* வே.ரொஷான், ஹட்டன்.
* எம்.எச்.எம்.ஹம்ஸா, களுத்துறை தெற்கு.
* எஸ்.வித்யாசாகர், கலஹா.
* ப.பிறேமானந்தன், கல்முனை-01
* செல்வி ஜெயா செல்லத்தம்பி, கிண்ணியா-01.
* செல்வி.சு.நளினி, மட்டக்களப்பு.
* நா.இதயசீலன், தோப்பூர்.
* செ. சுந்தரி, கொழும்பு.
* என்.எம்.பாரி தீன், ஹொரவப்பொதான.
* இ.இ.இர்பான், மூதூர்.
* பா.சர்வேந்திரன், வவுனியா.
* எல்.கணேசதாஸ், சுவிற்ஸர்லாந்து.



படிப்பகம்

www.padippakam.com

# "இலங்கை அரசு–இலங்கைப் படைகள்–இலங்கைக் கொடி மேற்குறிப்பிட்ட சொற்பிரயோகங்கள் வேண்டாம்"

## தமிழ் பிரசார சாதனங்களுக்கு புலிகள் அறிவித்தல்

"இலங்கை அரசு, இலங்கைப் படைகள், இலங்கை தேசியக்கொடி என்ற சொற்பிரயோகங்களை தமிழ் பிரசார, வெகுஜன தொடர்பு சாதனங்கள் பயன்படுத்தக்கூடாது" என்று புலிகள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக புலிகள் வெளியிட்டுள்ள அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"இலங்கைத்தீவில் இரண்டு தேசிய இனங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்கின்றனர்.

தமிழ் தேசிய இனத்துக்குரிய அரசு தமிழீழ அரசு. தமிழ் தேசிய இனத்தின் நாடு தமிழீழம். தமிழ் தேசிய இனத்தின் படைக்குப் பெயர் தமிழீழ விடுதலைப் புலிகள். தமிழ் தேசிய இனத்தின் கொடி புலிக்கொடி.

சிங்கள தேசிய இனத்தின் அரசு சிறீ லங்கா. நாடு சிறிலங்கா. படை சிறிலங்காப் படை. சிங்கள தேசிய இனத்தின் தேசியக் கொடி சிங்கக்கொடி.

மேற்குறிப்பிட்டவாறான சொற்பிரயோகங்களைப் பாவிப்பது இன்று மிக அவசியமாகும். காரணம்: தமிழீழத்தேசியத்தை சீரழிப்பதில் சிறிலங்கா அரசும் அதன் பிரசார சாதனங்களும் முனைப்புடன் ஈடுபட்டுள்ளன. அதனால் இக்காலத்தில் வெளிவரும் தமிழ் சார்ந்த, தமிழீழ தேசியம் சார்ந்த பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள் அனைத்தும் தமது பிரசாரங்களில் இலங்கைத் தீவில் வாழும் இரண்டு தேசிய இனங்களின் அடையாளங்களைப் பிரித்துக் காட்டுவதில் தீவிரமாக ஈடுபடவேண்டும்.

நாம் ஒரு தேசிய இனம். எமக்கென்று ஒருநாடு, மொழி, பண்பாடு, பொருளாதாரக் கட்டமைப்பு உண்டு என்பதையும் சுயநிர்ணயத்தை பாவித்து இழந்துபோன தமிழீழ தேசத்தை மீளப்பெற உரித்துடையவர்கள் என்பதையும் வெளிப்படுத்த வேண்டும்.

இலங்கை அரசு, இலங்கை ஜனாதிபதி, இலங்கை தேசியக்கொடி போன்ற பொதுவான சொற்பிரயோகங்கள் தமிழீழ தேசியத்திற்கு காயம் விளைவிப்பவையாகும்.

இதனை அனைவரும் கவனத்தில் கொண்டு செயற்படுவது இக்காலத்தில் அவசியமாகிறது." இவ்வாறு புலிகள் தமது அறிவித்தலில் தெரிவித்துள்ளனர்.

# "இனி பேச்சுக்கு இடமில்லை–வா படைக்கு!"

## யாழுக்கு மக்களை அனுப்பும் எண்ணம் இல்லை

### ஆட்களைத் திரட்டி படைகளை முற்றுகையிடத் திட்டம்

யாழ்ப்பாணத்திற்குள் குறைந்தது ஒரு வருட காலத்திற்கு மக்கள் திரும்பிச் செல்ல முடியாது என்று புலிகளின் பிரசாரங்கள் மூலமாக அறியமுடிகிறது. இயக்கத்தில் போதுமானளவு ஆட்களைத் திரட்டி, யாழில் நிலைகொண்டுள்ள படையினரை முற்றுகையிடுவதே தமது நோக்கம் என்று புலிகளின் பிரமுகர்கள் தெரிவித்துவருகின்றனர். வடபுலப் போரின் பிரதான கட்டம் புலிகளின் யாழ்ப்பாண முற்றுகையாக இருக்கும் என்று கூறுகின்றனர்.

**வன்னியில் பாதுகாப்பு**

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்த மக்களை தமது சொந்தப்பகுதிகளுக்கு திருப்பியனுப்புவதற்கு நீண்டகாலம் பிடிக்கும் என்பதை புலிகள் மறை முகமாகக் கூறி வருகின்றனர்.

வன்னி நிலப்பரப்பில் யாழ்ப்பாண மக்கள் குடியேறியுள்ளது மூலமாக போராட்டத்தில் புதிய மாற்றம் ஏற்பட்டுள்ளதாக புலிகள் கூறுகின்றனர்.

குடியேற்றத் திட்டங்களால் வன்னி பறிபோவது தடுக்கப்பட்டுள்ளது. வன்னியில், இடம்பெயர்ந்த மக்கள் விவசாயத்தில் ஈடுபடத் தொடங்குவதால், சொந்தப் பொருளாதார பலம் ஏற்படப்போகிறது.

சொந்தப் பொருளாதாரம் வளரத் தொடங்குவதால், அரசின் பொருளாதாரத் தடைகளால் பாதிப்பு ஏற்படாமல் போகும், என்றெல்லாம் புலிகள் அமைப்பினர் கூறிவருகின்றனர்.

**முற்றுகை**

யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டுள்ள படையினரை முற்றுகையிடுவது; அவர்களது ஆயுதங்கள் மற்றும் கனரக ஆயுதங்களை கைப்பற்றுவது என்பவைதான் தமது நோக்கம் என்று புலிகள் தெரிவிக்கின்றனர். அதற்கு நீண்டகாலம் எடுக்கலாம். அதுவரை யாழில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் திரும்பிச் செல்ல முடியாது. அப்படித் திரும்பிச் சென்றால் பாரிய மோதல்களுக்குள் சிக்க வேண்டியிருக்கும்; உயிரிழப்புக்கள் ஏற்படும் என்று புலிகள் விளக்கமளித்து வருகின்றனர்.

இதேவேளையில் யாழில் இருந்து படைகள் வெளியேறும்வரை பேச்சுக்கு இடமில்லை என்பதை புலிகள் வெளியிட்டுள்ள பிரசுரங்கள் தெரிவிக்கின்றன.

"பிரபாகரன் படைகள் பெரு நெருப்பு. இனி பேச்சுக்கு இடமில்லை, வா, படைக்கு" என்று தலைப்பிட்டு இயக்கத்திற்கு ஆள் சேர்க்கும் பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

வடபகுதியில் புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இருந்து வெளியே செல்ல நினைக்கும் இளைஞர்களுக்கு பின்வருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது:

**போக வேண்டாம்**

"தாண்டிக் குளத்தை தாண்டியோட வழி தேடித் தவிக்கின்ற இளைஞனே! கொஞ்சம் நில்! போர்த் தலைவன் அழைக்கின்றான்–கண்ணன் போன்று, புறப்படடா களம் நோக்கி ஆணையேற்று" என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்த மக்கள் மத்தியில் இருந்து ஆட்கள் திரட்டுவதில் தற்போது சிரமங்கள் இருக்கின்றன. காலப் போக்கில் அந்தச் சிரமங்கள் மறைந்துவிடும். தாமாக முன்வந்து பலர் இயக்கத்தில் சேருவார்கள் என்று புலிகள் நம்புகிறார்கள்.

**அடுத்த கட்டம்**

வடபகுதியில் மற்றொரு பாரிய நடவடிக்கைக்கு படைகள் தயாராகிவருவதாக புலிகளும் நம்புகின்றனர்.

இலண்டனில் உள்ள புலிகளது சர்வதேச செயலகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்று பின்வருமாறு தெரிவித்துள்ளது: "வடக்கே பாரிய நடவடிக்கையில் ஈடுபட சிறீலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் திட்டம் வைத்திருக்கிறார். சிறீலங்கா படை அதிகாரிகள் அத்திட்டத்திற்கு உடன்பட தயக்கம் காட்டுகின்றனர். அதனால்தான் இராணுவ நடவடிக்கை தாமதமடைந்துள்ளது" என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

## புலிகளின் புதிய நீரடிப்படகு?

இலங்கை கடற்பரப்பில் சமீபகாலமாக நீர்மூழ்கிகள் காணப்படுவதாக மீனவர்கள் கூறிவருகின்றனர்.

புலிகள் அமைப்பினரின் நீரடிப் படகுகள் அவ்வாறு நடமாடக்கூடும் என்று படைத்தரப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஒருவர் அல்லது இருவர் செல்லக்கூடிய சிறியரக நீரடிப்படகுகளை புலிகள் வைத்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

நீர் மூழ்கிக் கப்பலும், நீரடிப் படகும் ஒன்றல்ல. போர் விமானத்தையும் கிளைடர் மென்ரக விமானத்தையும் எப்படி ஒப்பிட முடியாதோ அப்படித்தான் நீரடிப்படகையும், நீர்மூழ்க்கிக் கப்பலையும் ஒப்பிட முடியாது. நீரடிப்படகை ஆங்கிலத்தில் 'அண்டர் வோட்டர் குருசர்' என்று அழைப்பர்.

ஆனால் நீருக்குள் மறைந்து வந்து கடலில் தற்கொலைத் தாக்குதல் நடத்துவதற்கு நீரடிப்படகை புலிகள் பயன்படுத்தக்கூடும் என்று கருதப்படுகிறது.

இதேவேளை இலங்கை கடற்பகுதியில் இந்திய அரசின் நீர்மூழ்கிக்கப்பல்கள் நடமாடுவதாக புலிகள் அமைப்பின் சர்வதேசச் செயலகம் கூறியுள்ளது.

இந்திய நீர்மூழ்கிக்கப்பல்கள்தான் இலங்கை மீனவர்களது கண்களில் தட்டுப்படுகிறதா என்று தெரியவில்லை.

இந்தியா தனது கடற்பரப்பையும், இலங்கைக் கடற்பரப்பையும் கண்காணித்துக் கொண்டிக்கக்கூடும். அதற்காக நீர்மூழ்கிகளையும் பயன்படுத்தக்கூடும். படைத்தரப்பினர் அது தெரியாமல் புலிகளது நீரடிப் படகுகள் என்று சந்தேகம் தெரிவிக்கின்றனரா என்றும் கேள்வி எழுந்துள்ளது.

இதேவேளை இலங்கை கடற்படையினர் நவீன ரகமான ரோந்துப் படகுகளை மேலும் கொள்வனவு செய்ய உள்ளதாக தெரிகிறது.

## நீர் மூழ்கியால் தடை

இந்தியாவின் நீர்மூழ்கிக் கப்பல்கள் இலங்கை கடற்பகுதியில் நடமாடுவது உண்மையானால் புலிகளின் ஆயுதக் கப்பல்கள் வருவது தடைப்படும்.

நீர் மூழ்கிக் கப்பல்களை ஏமாற்றிவிட்டு இலங்கை கடற்பரப்பில் நுழைவது கஷ்டமாக இருக்கும்.

எப்படியாவது கனரக ஆயுதங்களை பெறவேண்டிய அவசியம் புலிகள் அமைப்பினருக்கு இருக்கிறது.

இந்தியாவுடன் பகையை தவிர்க்க புலிகள் விரும்பியதற்கு கடற் பரப்பில் உள்ள தடையை நீக்குவதும் ஒரு காரணமாகும். எனினும் தற்போது மீண்டும் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, புலிகளது அயுதக் கப்பல்களின் போக்குவரத்தில் பாதிப்பு ஏற்படவே செய்யும்.

## தாயும் மகளும் எங்கே? திருமலையில் தீராத சந்தேகம்!

(சஞ்சீவன்)

15.2.96 அன்று இரவு 7.30 மணி. திருமலை பஸ் நிலையத்தில் வந்திறங்கினார்கள் ஒரு தாயும் மகளும். ஏதோ ஒரு விலாசத்தை தேடிக்கொண்டிருந்தார்கள்.

அதன்பின்னர் அன்று இரவு திருமலை நகரில் ஒரு விடுதியில் இருந்து பெண் ஒருவரது மரண ஓலம் கேட்டது. அயலவர்கள் பயத்தில் வெளியே வரவில்லை. மறுநாள் காலையில் அந்த விடுதியருகே இரத்தம் தோய்ந்த உள்ளாடையும், கைக்கடிகாரமும் கிடந்தன. அதனைக் கண்ட அயலவர்கள் பொலிசில் அவற்றை ஒப்படைத்தனர். இரவு கேட்ட சத்தம் குறித்தும் புகார் செய்தனர்.

பொலிஸ் அந்த விடுதிக்குச் சென்று விசாரித்தது. விபசாரத் தொழில் அந்த விடுதியில் நடைபெறுவது வழக்கம். அன்று ஒரு விபசாரியுடன் வாடிக்கையாளருக்கு ஏற்பட்ட தகராறுதான் கூச்சல் கேட்க காரணமாகும் என்று பொலிசார் தெரிவித்தனர்.

ஆனால் மக்கள் பொலிசார் கூறியதை நம்பமறுக்கின்றனர். விபச்சாரியென்றால் இரத்தம் தோய்ந்த ஆடை யாருடையது? என்பதும் மக்களது சந்தேகத்துக்கு ஒரு முக்கிய காரணம். 15.2.96 அன்று இரவு பஸ் நிலையத்திற்கு வந்து விலாசம் தேடியலைந்த தாயும் மகளும்தான் கடத்தப்பட்டு பலாத்காரம் செய்யப்பட்டு, கொல்லப்பட்டனர் என்ற செய்தி திருமலையெங்கும் பரவிவிட்டது.

கல்முனையில் இருந்து திருமலை வந்த அந்த தாயும் மகளும் அதன்பின்னர் யார் கண்ணிலும் படவில்லை என்பதால் சந்தேகம் மேலும் வளர்ந்துவிட்டது.

இதற்கிடையே இன்பமலர், தேவராணி என்று இரண்டு விபச்சாரிகளை பொலிசார் கைதுசெய்துள்ளனர். அவர்கள்தான் 15.2.96 இரவு திருமலை நகர விடுதியில் பிரச்சனைப் பட்டவர்கள் என்று பொலிசார் கூறுகின்றனர். குறிப்பிட்ட பெண்களும் அதனை ஒப்புக் கொள்கின்றனர்.

இதேவேளை இந்தச் செய்திகளை அடுத்து குறிப்பிட்ட விடுதி நீதிபதிகள் முன்பாக சோதனையிடப்பட்டு மூடப்பட்டுள்ளது.

கல்முனையில் இருந்து வந்த அந்த தாயும் மகளும் யார்? அவர்கள் உயிரோடு இருக்கிறார்களா? என்ற விபரங்கள் அறியப்படும்வரைதிருமலை மக்களின் சந்தேகம் தீரப்போவதில்லை.

## கனடாவில் புலிகள் நிதி திரட்டல்

### 'தமிழீழ நிர்மாண நிதியம்' என்று பெயர்

'தமிழீழத்தை கட்டியமைக்கும் தேவைகளுக்கான நிதியம்' என்ற பெயரில் கனடாவில் புலிகள் அமைப்பினர் நிதி திரட்டலில் ஈடுபட்டுள்ளனர்.

கனடாவில் உள்ள விடுதலைப் புலிகளது கிளையான உலகத் தமிழர் இயக்கம் மூலமாக நிதி திரட்டல் அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

மண் மீட்பு நிதி, தமிழீழ பாதுகாப்பு நிதி என்ற பெயர்களில் முன்னர் விடுதலைப் புலிகளது நிதிதிரட்டல்கள் நடைபெற்றுவந்தன.

தற்போது 'தமிழீழ நிர்மாண நிதியம்' என்ற பெயரில் நிதிதிரட்டல் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இதுதொடர்பாக புலிகள் வெளியிட்டுள்ள வேண்டுகோளில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

"அன்பான கனடா வாழ் தமிழீழ மக்களே! இன்று பெரியதொரு தேசியக் கடமை எம் முன்னால் உள்ளது. எமது மண்ணையும், மக்களையும் பாதுகாக்கும் கடமையில் ஈடுபட்டுள்ளவர்களின் கரங்களை நாம்தான் பலப்படுத்த வேண்டும்.

ஒரு தேசத்தின் உருவாக்கத்துக்கு தேவைகள் பல. இவற்றுக்காக பெருமளவான நிதி தேவைப்படும் என்பது நீங்கள் அறியாதது அல்ல. ஆனால் இந்த நிதி மிக மிக அவசரமாக இன்று தேவைப்படுகிறது.

தமிழீழ தேசத்தின் தலையெனக் கருதப்பட்ட யாழ்ப்பாணம் இராணுவ படையெடுப்பால் சின்னாபின்னமாகியுள்ளது. சிறீலங்கா அரசு புதிய பாதுகாப்பு வரிகளை விதித்து ஆயுதக் கொள்வனவிற்கு நிதி சேகரித்துக் கொண்டிருக்கிறது.

சந்திரிக்காவின் வெற்றி மூலம் சமாதானம் வரும் என்று நம்பிய எம் உடன்பிறப்புக்களுக்கு சந்திரிக்கா தந்த பரிசு பசி, பட்டினி, இடம்பெயர்வு; சொத்தழிப்பு என்பவைதான்.

எனவே– இனிமேல் நாம் யாரையும் நம்பமுடியாது. தமிழீழ அரசு நோக்கிய நிர்மாணப் பணிகளை கட்டி வளர்த்து, காப்பாற்ற வேண்டியது எம் முன்னால் உள்ள பெரும்பணி. இதற்கு நிதி வேண்டும்.

இந்த நிதித் தேவையின் ஒரு பகுதியைப் பூர்த்திசெய்ய "தமிழீழ தேசத்தின் நிர்மாணத்திற்கான நிதிப் பங்களிப்பை" ஆரம்பித்துள்ளோம்.

நீங்கள் ஒவ்வொருவரும் 50 கனடிய டொலர்களுக்குரிய நன்கொடைப்பத்திரத்தைப் பெற்று பங்களிப்பு செய்ய வேண்டும்.

இன்றைய உங்கள் பங்களிப்புக்கள் ஒவ்வொன்றும் எமது எதிர்கால சந்ததியின் சுபிட்சமான எதிர்கால வாழ்வை தமிழீழ மண்ணில் உறுதி செய்யும் என்பது திண்ணம்.

ஆரம்பிக்கப்பட்டுவிட்ட தமிழீழ தேச நிர்மாணப்பணிகள் கைவிடப்படாது தொடர்ச்சியாக செய்யப்படுவதற்கு எமக்கும் பங்கு இருக்கிறது.

எம் அனைவருக்கும் தமிழீழமே தாய் நாடு. தமிழீழ தேசத்தின் நிர்மாணப்பணிகள் தொடர வாரி வழங்குவோம். விடுதலைப் புலிகளின் பின்னால் அணி திரள்வோம்."

இவ்வாறு விடுதலைப் புலிகள் தமது வேண்டுகோளில் தெரிவித்துள்ளனர்.

## முதற் கட்டமாக 400 இலட்சம்

(காரைதீவு நிருபர்)

கல்முனைப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் வடிகான் அமைப்பு வேலைகள் 40 லட்சரூபா செலவில் மேற்கொள்ளப்படவிருக்கிறது. நீண்டகாலமாக இருந்துவந்த வடிகான் இல்லாப் பிரச்சனை, புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சரின் முயற்சியினால் தீர்த்துவைக்கப்படவிருப்பதாக இணைப்புச் செயலர் வை.எல்.எஸ். ஹமீத் 'முரசுக்கு' தெரிவித்தார்.

மேலும் நீலாவணை– காரைதீவு– அக்கரைப்பற்று பிரதானவீதியை அகலமாக்கும் திட்டத்திற்கு 400 இலட்சரூபா முதற் கட்டமாக ஒதுக்கப்பட்டு, மதிப்பீட்டு வேலை ஆரம்பமாகியுள்ளதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை மீள்குடியமர்த்தப்பட்ட மல்வத்தை தமிழ்க்கிராமத்திற்கு 150 வீடுகள் வீடமைப்புத் திட்டத்தில் அமைத்துக் கொடுக்கப்படவிருப்பதாக அம்பாறை மாவட்ட எம்.பி.-யூ.எல்.எம்.மொகைதீன் தெரிவித்தார்.

## "குடியேற்றம் மீது தாக்கினோம்"

"மட்டக்களப்பில் கிண்ணையடி இராணுவ முகாம்மீதான தாக்குதலில் 14 புலிகள் பலியானார்கள்." விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேற்கண்ட விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தாக்குதல் 22.02.96 அன்று நடைபெற்றது.

மீண்டும் 25.02.96 அன்று கிண்ணையடி இராணுவ முகாம் புலிகளால் தாக்கப்பட்டது. அதே தினத்தன்று அனுராதபுரம் கெப்பிட்டிப்பொல என்னும் இடத்திலும் புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தியிருந்தனர். அது தொடர்பாக புலிகள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

"அனுராதபுரம் கெப்பிட்டிப் பொலவில் மாணிக்கவெவ என்னும் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழ் கிராமத்தில் அமைந்திருந்த இராணுவக் காவலரண் மீது விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் நடத்தினார்கள். இத்தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர், இரண்டு பொலிசார், ஐந்து ஊர்காவல் படையினர் ஆகியோர் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலின்போது ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

தமிழ் மக்களுக்கு சொந்தமான இக் கிராமத்தில் தமிழ் மக்களை விரட்டிய படையினர் குடியேற்றங்களை நடத்தி பாதுகாப்பு வழங்கியிருந்தனர். இத்தாக்குதலை அடுத்து அங்கு குடியேறியிருந்த ஆயுதபாணிகள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்கின்றனர்.

கடந்த மாதம் 22ம் திகதி பராக்கிரமபுர காவலரண்மீது நடந்த தாக்குதலில் வீர மரணம் அடைந்த கப்டன் அன்புக்கினியானின் நினைவாகவே இத்தாக்குதல் நடத்தப்பட்டது." என்று புலிகளின் செய்திக்குறிப்பு தெரிவித்துள்ளது.

## கப்பல் தாக்குதலுக்கு கண்டனம்

முல்லைத்தீவுக் கடலில் புலிகளது ஆயுதக் கப்பல் தாக்கப்பட்டதில்.. இந்தியாவுக்கும் பங்கிருப்பதாக தமிழக அரசியல் கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

இம்மாதம் 28ம் திகதி முதல் தமிழ்நாடு முழுவதும் கண்டனக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. புலிகளது தீவிர ஆதரவாளரான நெடுமாறன் இக்கூட்டங்களை ஒழுங்கு செய்து நடத்தி வருகிறார். "இந்திய அரசின் கபடத்தனத்தை தோலுரித்துக் காட்டுவோம். இலங்கையுடன் இந்தியப் படையும் இணைந்து நடத்திய சதித்திட்டத்தை அம்பலப்படுத்துவோம்" என்று நெடுமாறன் கூறியுள்ளார்.

இதேவேளை ஹொரிசோன் கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவத்தின் பின்னர் புலிகள் அமைப்பினர் இந்திய அரசுக்கு எதிரான பிரசாரத்தை மீண்டும் ஆரம்பித்துள்ளனர். குறிப்பாக வெளிநாடுகளில் இந்திய எதிர்ப்பு பிரசாரம் சூடுபிடித்துள்ளது.

## தளபதியின் பதவிக்காலம் நீடிப்பு?

இராணுவத் தளபதி ஜெரி டி. சில்வாவின் பதவிக்காலம் எதிர்வரும் மே மாதத்துடன் முடிவடைகிறது.

அவருடைய பதவிக்காலத்தை மேலும் நீடிக்க ஜனாதிபதி முன்வரலாம் என்று நம்பப்படுகிறது.

அவ்வாறு பதவி நீடிப்பு வழங்கப்படாவிட்டால் இராணுவத் தளபதியாக ரோகான் டி தலுவத்தை நியமிக்கப்படுவார். ஏற்கெனவே இராணுவத் தளபதி ஜெரி டி. சில்வாவும், ரோகான் டி.எஸ். தலுவத்தையும் சேவை நீடிப்பு வழங்கப்பட்ட நிலையில்தான் இருக்கின்றனர்.

இருவருக்கும் மேலும் சில காலம் பதவி நீடிப்பு வழங்க அரசாங்கம் முன்வரலாம் என்று விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ரோகான் டி.எஸ். தலுவத்தை யுத்தப் பிரதேசம் முழுவதற்கும் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பானவராக நியமிக்கப்படலாம். ஜெரி டி சில்வா இராணுவத்தளபதியாக பதவி நீடிக்கப்படலாம் என்று நம்பப்படுகிறது.

## "நீலனுக்கு விசா கொடாதீர்!"

### எல்லாளன் படை கோரிக்கை

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கிய பிரமுகரும், பாராளுமன்ற உறுப்பினருமான நீலன் திருச்செல்லம் மீது புலிகள் அமைப்பினர் அதிருப்தியோடு இருக்கின்றனர்.

அரசின் தீர்வுத் திட்ட யோசனையை தயாரித்தவர்களில் நீலனும் ஒருவர் என்று புலிகள் கூறியுள்ளனர்.

இதனையடுத்து நீலன் திருச்செல்வத்தின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் அவர் வவுனியா சென்ற போது ஒரு அமைச்சருக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இலங்கையில் உள்ள ஜப்பான் தூதரகத்திற்கு எல்லாளன் படை கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

'நீலன் திருச்செல்வத்திற்கு ஜப்பான் செல்ல விசா கொடுக்க வேண்டாம்' என்று கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

# ஆதரவு அலை யார் பக்கம்?
# தமிழ் நாட்டில் கருத்துக் கணிப்பு!
## ரஜினிக்கு 45 வீதமான மக்கள் ஆதரவு

தமிழ்நாட்டில் நடிகர் ரஜினிகாந்த் அரசியலில் ஈடுபட்டால் முதல்வராவது உறுதி. சென்னையில் உள்ள கிறிஸ்தவ கல்லூரி மாணவர்கள் நடத்திய கருத்துக் கணிப்பில் மேற்கண்ட உண்மை வெளியாகியுள்ளது.

கிறிஸ்தவ கல்லூரி புள்ளியியல் துறை மாணவர்கள் 160 பேர் 750க்கு மேற்பட்ட கிராமங்கள், சிற்றூர்கள், நகரங்கள் ஆகியவற்றுக்கு சென்றார்கள். ஏறக்குறைய 5000 வாக்காளர்களைச் சந்தித்தனர். ஒருவாரமாக இந்தக் கருத்துக் கணிப்பு நடைபெற்றது.

கருத்துக் கணிப்பில் இருந்து பெறப்பட்டுள்ள முடிவுகள் பின்வருமாறு:

அ.தி.மு.கவுக்கும், தி.மு.க.வுக்கும் தமிழக மக்களிடம் கிட்டத்தட்ட சரிசமமான செல்வாக்கு இருக்கிறது.

அ.தி.மு.க.வுக்கு 30.8 சதவீத மக்களும், தி.மு.க.வுக்கு 30.5 சதவீத மக்களும் ஆதரவளிக்கிறார்கள்.

காங்கிரஸ் கட்சிக்கு 16.5 சதவீத



மக்களும், வை.கோபால்சாமியின் ம.தி.மு.க வுக்கு 5.5. சதவீத மக்களும், ஆதரவாக உள்ளனர்.

அ.தி.மு.க.வுக்கு கிராமப் புறத்திலும், தி.மு.க.வுக்கு நகர்ப்புறத்திலும் ஆதரவு அதிகமாக உள்ளது.

30 வயதுக்கு குறைந்தவர்களிடம் தி.மு.க வுக்கு செல்வாக்கு உள்ளது. 30-50 வயதிற்கு உட்பட்டவர்களிடம் அ.தி.மு.க.வுக்கு செல்வாக்கு இருக்கிறது.

அ.தி.மு.க.வுக்கு ஏனைய கட்சிகளைவிட பெண்களிடம் செல்வாக்கு அதிகமாக இருக்கிறது.

கருத்துக்கணிப்பில் கலந்து கொண்டவர்களில் 45 சதவீதத்தினர் தாங்கள் ரஜினி இரசிகர்கள் என்று தெரிவித்துள்ளனர்.

"ரஜினி யாருக்கு வாக்குப் போடச் சொல்கிறாரோ அவருக்குத்தான் வாக்குப் போடுவோம்" என்று 32 சதவீத மக்கள் தெரிவித்துள்ளனர். மொத்தமாக 45 சதவீத மானவர்கள் ரஜினியை ஆதரிக்கின்றனர்.

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கட்சிகளின் கூட்டணி அமைவதைப் பொறுத்தே வெற்றிவாய்ப்புக்கள் இருக்கும்.

ரஜினிகாந்த் தனிக்கட்சி தொடங்கி காங்கிரஸ் கட்சியோடு கூட்டுச் சேர்ந்தால் அந்த அணி வெற்றி பெறுவது உறுதி என்று நம்பலாம்.

ரஜினி இரசிகர்களில் 28 சதவீதத்தினர் அவர் தனிக்கட்சி தொடங்குவதை விரும்புகின்றனர்.

ரஜினி அரசியலில் ஈடுபடாவிட்டாலும் அவர் ஏதாவது ஒரு கட்சியை ஆதரித்து வாக்குப்போடுமாறு சொன்னால்கூட ஏனைய கட்சிகளுக்கு பெரிய பாதிப்பு ஏற்படும்.

## ஜெயலலிதாவின் புதிர்

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் 48 வது பிறந்தநாள் பெப்ரவரி 24 இல் தமிழ்நாடெங்கும் கொண்டாடப்பட்டது.

தமிழ்நாடு முழுவதும் நடைபெற்ற பிறந்தநாள் நிகழ்ச்சிகளில் தமிழக அமைச்சர்கள் பங்கேற்றார்கள்.

எதிர்வரும் தமிழக சட்டமன்றத் தேர்தல், மற்றும் பாராளுமன்றத் தேர்தலில் ஜெயலலிதா கட்சி யாருடன் கூட்டுச் சேரும் என்பது இதுவரை தெரியவில்லை.

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ், ரஜினி அரசியலுக்கு வராவிட்டால் ஜெயலலிதாவுடன் கூட்டுவைக்க விரும்புவதாகச் சொல்லப்படுகிறது.

"அரசியலில் நிரந்தர நண்பர்களும் கிடையாது, எதிரிகளும் கிடையாது" என்று ஜெயலலிதா சமீபத்தில் கூறியிருப்பது அரசியல் வட்டாரங்களின் புதிராக நோக்கப்படுகிறது.

## தோழியுடன் நடிகை தற்கொலை

தனது உயிர்த்தோழியுடன் துணை நடிகை ஒருவர் தற்கொலை செய்துகொண்டார்.

தமிழ்நாட்டில் சென்னையில் மேற்படி சம்பவம் நடந்துள்ளது.

சினிமாவில் துணை நடிகையாகவும், நடனக் காட்சிகளிலும் நடித்து வருபவர் லட்சுமி. வயது 18. லட்சுமிக்கு மலர்நிஷா என்னும் தோழி ஒருவர் இருந்தார். இருவரும் ஒன்றாகவே தங்குவார்கள்.

லட்சுமி குடும்பத்தோடு விரோதம் உள்ள சேது என்பவர் லட்சுமியையும், அவரது தோழியையும் வாய்க்கு வந்தபடி வசைபாடியிருக்கிறார்.

அதனால் மனமுடைந்த லட்சுமி அரளி விதையை அரைத்து தனது தோழிக்கும் கொடுத்துவிட்டு, தானும் சாப்பிட்டார், இருவரும் இறந்துபோனார்கள்.


- அக்குறணையில் -

உங்கள்
நண்பர்களை,
உறவினர்களை,
அன்பர்களை
வாழ்த்தி மகிழ்ந்திட

உள்நாட்டு
வெளிநாட்டு
★ பெருநாள் வாழ்த்து
★ பிறந்த தினம்
திருமணவாழ்த்து
கார்டுகளையும்

பாடசாலை புத்தகங்கள், பேக் வகைகள், சுத்தமான அத்தர் முதலான்வற்றையும் மலிவு விலையில் மனநிறைவுடன் பெறகத்தான இடம்-

| | |
|---|---|
| * பஜ்ரியாஸ் பள்ளி வீதி, அக்குறணை-6. | * நிவ் பஜ்ரியாஸ் அஸ்னா மார்கட், அக்குறணை-6. |

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இதயங்கனிந்த ஈத் வாழ்த்துக்கள்.




மூதூரில் குமாரபுரத்தில் படுகொலை வேட்டையில் இருந்து படுகாயங்களுடன் தப்பியவர்களில் சிலர். வேலியே பயிரை மேய்ந்தது.

## பிரிகேடியரிடம் வீதிக் கொடுமை பற்றி விவரிப்பு விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு பணிப்பு!

(ஏறாவூர் நிருபர்)

'சின்னக் கிளாலி' என்று கேலியாக அழைக்கப்படும் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கொம்மாதுறையில் பயணத்தின்போது ஏற்படும் துன்பநிலைகுறித்து முரசு செய்தி வெளியிட்டிருந்தது தெரிந்ததே.

இப்போக்குவரத்துச் சீர்கேட்டினால் மக்கள் படும் கஷ்டங்கள் குறித்து உடனடியாக மாவட்ட பிரிகேடியரிடமும், கொம்மாதுறை இராணுவ முகாம் இணைப்பதிகாரி மேஜர் சமரதுங்காவிடமும் பா.உ. அலிஸாஹிர் மௌலானா புகார் தெரிவித்ததையடுத்து அவ் வீதியை, முகாமைச்சுற்றிப் பயணத்திற்கு ஏற்றமுறையில் தார் போட்டு அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

மேலும் சமீபத்தில் (21.02.96) மைலம்பாவெளி இராணுவ முகாம் முன்னாலும் சேற்றுப் பகுதியில் உபபாதையொன்று அமைத்து அதனூடாக பொதுப் போக்குவரத்து திருப்பிவிடப்பட்டுள்ளதால் கொம்மாதுறைப் பயணத்தின் கொடுமையே அங்கும் தோன்றியுள்ளது. இது குறித்தும் அலிஸாஹிர் மௌலானா அவர்கள் பிரிகேடியரின் கவனத்திற்குக் கொண்டுவந்ததுடன் இது போன்ற வீணான தொல்லைகளை பொதுமக்களுக்கு ஏற்படுத்தாதிருக்க நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

ஏற்கனவே இருந்த வீதியைவிட 25 அடி தூரம் தள்ளியே அடுத்த உபவீதி பொதுப்போக்குவரத்திற்கு அமைக்கப்பட்டுள்ளது. இது உண்மையிலேயே பாதுகாப்புக் காரணங்களைமுன்னிட்டே செய்யப்பட்டது என்று எவ்வகையிலும் கூற முடியாதுள்ளது. பொதுமக்களைத் துன்பப்படுத்துவதாகவே அமைந்திருக்கிறது. இதை மௌலானா எம்.பியும் தனது புகாரில் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாகவும் தான் மாற்று நடவடிக்கை எடுக்க உத்தரவிடுவதாகவும் பிரிகேடியர் உறுதியளித்தார்.




33 வருட கடும் சேவைக்கு பின் உலக மாந்திரீக சக்ரவர்த்தி என பட்டமெடுத்த எமது நிர்வாகத்தில் தெட்டத்தெளிவான சேவை என்னவென்றால் மலையாள மாந்திரீகமோ அல்லது ஜோதிட ஆயுள் கணிப்போ வீட்டுக்கு வீடு வாசல்படி உண்டு. பல மொழிக்கு ஒப்ப எனது நிர்வாகத்தில் எத்தனையாம் திகதி எத்தனை மணிக்கு என்ன கிழமை உங்கள் உந்தன் விடயம் சரிவரும் என்று கருதி உறுதிமுத்திரையுடன் வாங்கும் பணத்திற்கு அத்தாட்சி வழங்கி பெயர் வாங்கிக் கொண்டிருப்பது அரசு அங்கிகாரம் பெற்ற திரு.பி.கே.சாமி (ஜே.டி.ஜீ.என்)ஜே.பி.யின் பி.கே.சாமி அசோசியட் தனியார் நிறுவனம் உண்மை பொய் அறிய நேரில் வந்து காணலாம் திரு.பி.கே.சாமி அவர்களை காலை ஆறு முதல் மாலை 2.00 மணிவரையே சந்திக்கலாம். நேரில் மட்டுமே அவரின் ஆலோசனை பெறலாம். தெளிவுரையாளர் மூலமே தொலைபேசியில் பேசலாம். ஆலோசனைக் கட்டணம் ரூபா 250. வெளிநாட்டவர்கள் ஆலோசனைக் கட்டணம் ரூபா 2000. அவர் அவர் கையிலேயே மாந்திரீகப் பார்சலை ஒப்படைக்க அவர்களது உண்மையான தொலைபேசி சரியான இலக்கத்தை குறிப்பிட்டு அங்கத்தவர் கட்டணம் 2000 ரூபா அனுப்பினால், அவர் இல்லத்திலேயே அவர்களது கையிலேயே எமது பிரதிநிதி பார்சலை ஒப்படைப்பார். வெளிநாட்டவரோ உள்நாட்டவரோ மலையாள மாந்திரீக சக்தி உதவி தேவையென்றால் உண்மை சேவையான எமது ஸ்தாபனத்திற்கு வருகை தரலாம்.

**நேரிலோ, அல்லது தொலைபேசியிலோ, கடிதத்தொடர்புகளுக்கோ**

திரு.பி.கே.சாமி (J.D.G.A.N) JP
ஸ்ரீ துர்க்காதேவி ஸ்தானம்,
162, கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு-13.

தொலைபேசி வரிகள்:- 01-342463, 342464, 344432, 344431.
நுவரெலியா:- 052 3093, 2508, 3570, 3336.

இன்னும் உண்மை விளங்க எமது விளம்பர சேவை 'ஜோதிடம் பார்ப்போம்' நிகழ்ச்சி பிரதி சனிக்கிழமைதோறும் காலை 10.45 மணிக்கு FM 99இல் நடைபெறும் கேட்டு உண்மை அறியலாம்.



★ எட்டியாந்தோட்டை
அருள்மிகு கதிர்வேலாயுத சுவாமி
மாசி மக வேல் விழா
03-03-1996 ஞாயிற்றுக்கிழமை
நடைபெற திருவருள் பாலித்துள்ளது.
இவ்வண்ணம்,
(Advt) ஆலய பரிபாலனசபை.



## மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHIATRIST)

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி, உங்களை நீங்களே வெற்றி கொள்ள பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

இளம் சமுதாயததினர் மெலிந்து, சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்களை மனோதத்துவ சிகிச்சை மூலம் உடனே நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 11/2 மணித்தியாலத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் ஹிஸ்டீரியா ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளையேறுதல், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு.

மார்ச் 18 முதல் 28 வரை Dr.P. ARUMUGAM, AHMED TOURIST INN. BANG BANG BULDING NO: 10, RECLAMATION ROAD, (ENTRANCE BANKSHALL ST.) COLOMBO 11. T.P. 436383, 436390 மார்ச் 3,4 Dr. முகைதீன் டிஸ்பென்ஸரி ஒட்டமாவடியிலும், மார்ச் 9,10,11 கல்முனை T.M.M. பாமசியிலும், மற்ற நாட்களில் DR. P. ARUMUGAM No: 50, TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD, BATTICALOAவிலும் சந்திக்கலாம்.



விளம்பரப் பகுதி



1996ஆண்டுஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ளஆண்டு 5 புலமைப்பரிசில் போட்டிப் பரீட்சைக்கான BRIGHT ன் வெற்றிக்கனி இதழ் 7முதல் 12வரை முன்னோடிப் பயிற்சி நூல் மாதந்தோறும் வெளி வருகின்றது.

மாணவர்களின் நலன் கருதி 1995 ஆண்டு வினாப்பத்திர வினாக்களை போல தயாரிக்கப்பட்டு மாதந்தோறும் வெளி வரும். ஆண்டு 5 மாணவர்கள் பரீட்சையில் கூடிய புள்ளிகள் பெற்றுக்கொள்ள பாவிக்க வேண்டிய நூல்

வெற்றிக்கனி யாகும்.

வெற்றிக்கனி இதழ் 7 முதல் 12 வரை பெறவிரும்பும் மாணவர்கள் 5 இதழ்களுக்கும் 250/= ரூபாவை செலுத்தி தொடர்ந்து பெற்றுக்கொள்ளமுடியும். இதழ் 1முதல் 6 வரையான வெற்றிக்கனிக்களஞ்சியமும் 250/= செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். கட்டணத்தை காசுக் கட்டளையாக The Director - BBC எனும் பெயருக்கு SEA STREET SPO தபாற்கந்தோரில் பெறக்கூடியதாக பதிவுத் தபாலில் விண்ணப்பத்துடன் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

முழுப்பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................
காசுக்கட்டளை இல : ..............................

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S - 27 FIRST FLOOR, P.O. BOX - 162
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX
COLOMBO - 11 T.P : 434770



சிங்கார ஆடைகளில் சிறப்புத் தேர்ச்சி

திருமண பட்டுப் புடவைகள்
(காஞ்சிபுரம், பனாரிஸ், தஞ்சூர்),
பட்டு வேட்டிகள், சல்வார் கமீஷ்,
சேர்ட்டிங்ஸ், சூட்டிங்ஸ்
அத்துடன்

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சிங்கம் மார்க் (Lion Brand) சாரங்கள்

மற்றும் அனைத்து ஜவுளித் தெரிவுகளுக்கும் தலைநகரின் தலை சிறந்த இடம்

HYDRA

சிங்கம்ஸ் டெக்ஸ்டைல்

(முற்றிலும் குளிரூட்டப்பட்டது)
241. பிரதான வீதி, கொழும்பு-11.
☎ 324153, 440463




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# முல்லைக்கடலில் முத்தரப்பு நாடகம்

**"ஆகக் குறைந்தது 60 கோடி ரூபாய்கள் புலிகளுக்கு நஷ்டம். எனினும் மேலும் இரண்டு கப்பல்கள் புலிகளிடம் இருக்கின்றன. அரசு நிம்மதிப்பட முடியாது"**

யானைக்கும் அடி சறுக்கும். புலிகள் விடயத்திலும் அது பொருந்தும்.

14.2.96 அன்று முல்லைக் கடலில் தமது ஆயுதக் கப்பலை புலிகள் பறிகொடுத்ததும் ஒரு சறுக்கல்தான்.

புலிகளுக்கு ஆயுதங்கள் வந்து சேரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படும் தருணத்தில் கப்பலை வரவைத்தது புத்திசாலித்தனமல்ல.

இந்தியாவில் மர்ம விமானம் ஆயுதம் போட்டதையடுத்து இந்தியா கண்களில் விளக்கெண்ணெய் விட்டுக் கொண்டு எந்நேரமும் விழிப்பாக இருக்கிறது.

தனது கடற்பரப்பையும், வான் பரப்பையும் அலசிப் பார்க்கும் நவீன ராடர் வசதிகள் இந்தியாவிடம் இருக்கின்றன.

மர்ம விமான ஆயுத விவகாரத்தின் பின்னர் இந்திய பாதுகாப்புத்துறை ராடர் திரையில் இருந்து கண்களை எடுக்காமல் கவனித்துக் கொண்டே இருக்கிறது.

தமது கடல், வான் எல்லையில் மட்டுமல்ல, அவற்றுக்கு சமீபமாக உள்ள பரப்புக்களிலும் இருக்கக்கூடிய நடமாட்டங்களை இந்தியா எட்டிப் பார்த்துக் கொண்டுதான் இருக்கும்.

அதனையெல்லாம் கவனத்தில் கொள்ளாமல் தமது ஆயுதக்கப்பலை புலிகள் தருவித்ததுதான் முதல் தவறு.

புலிகள் சில கணக்குகளைப் போட்டிருந்தார்கள்.

கொழும்பில் பாரிய குண்டு வெடிப்பு நடைபெற்றிருப்பதால் படைகளது கவனம் வடக்கில் இருக்காது என்றே புலிகள் எதிர்பார்த்தார்கள்.

முன்னர் ஒரு தடவையும் அப்படிச் செய்யப்பட்டிருந்தது.

ஜனாதிபதி வேட்பாளர் காமினி திசாநாயக்கா கொழும்பில் கொல்லப்பட்டார். தலைநகரமே பதட்டமாக இருந்த அந்த நேரத்தில் ஏப்ரல் 13-1995 அன்று புலிகளது ஆயுதக் கப்பல் வடமராட்சிக்குள் புகுந்தது. ஆயுதங்களை இறக்கி விட்டு திரும்பிச் சென்றது.

விமான எதிர்ப்பு ஏவுகணைகள் அக் கப்பல்மூலம் தான் புலிகளிடம் வந்து சேர்ந்தன.

இம்முறையும் கொழும்பு குண்டுத் தாக்குதலுக்கு குறிக்கப்பட்ட திகதியை ஒட்டியதாகவே பாங்கொக்கில் இருந்து கப்பல் புறப்பட்டது.

கொழும்புக் குண்டுத் தாக்குதலுக்கு முன்னரே கப்பல் புறப்படவேண்டிய சிக்னல் புலிகளது தலைமையால் கொடுக்கப்பட்டுவிட்டது.

அதாவது, கொழும்புத் தாக்குதலுக்கு திட்டத்தோடு ஆட்களையும் அனுப்பி வைத்தபோதே, பாங்கொக்கில் இருந்து கப்பல் புறப்படலாம் என்ற உத்தரவும் வன்னியில் இருந்து பறந்துவிட்டது.

கொழும்புத் தாக்குதலை அடுத்து ஏற்படக்கூடிய விளைவுகளை மேலும் அதிகமாக புலிகள் கணக்கிட்டிருக்கலாம்.

பெருமளவில் மக்கள் பலியாகக்கூடிய தாக்குதல் என்பதால், தலைநகரில் கலவரம் ஏற்படாவிட்டாலும், ஒரு பதட்டச் சூழ்நிலை ஏற்படலாம் என்று புலிகள் எதிர்பார்த்திருப்பார்கள்.

அவ்வாறு பதட்டமான சூழ்நிலையில் படைகளது கவனமும் தலைநகரில் குவிந்திருக்கும். ஆகவே, வடகடலில் ரோந்துகளும் பெரியளவில் இருக்காது என்பதுதான் புலிகளது கணிப்பு.

அதுதவிர, வடபகுதி கடலில் கடற்கரும்புலிகளது தாக்குதல்கள் காரணமாக கடற்படையின் ரோந்துகளும் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில்தான் இருக்கின்றன.



முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு புலிகளின் படகுகள் தடைகள் இல்லாமல் சென்று வருகின்றன.

யாழ்-குடாநாட்டில் உள்ள தீவுப் பகுதிகளில் புலிகள் ஊடுருவித் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். படகுகள் மூலமாக செல்லும் புலிகளின் அணிகளே அவ்வாறு ஊடுருவுகின்றன.

எனவே-கடற்படையினரது ரோந்துகள் மிகப் பலவீனமானநிலையில்தான் இருக்கின்றன என்பது தெளிவு.

அப்படியிருந்தும் கூட ஆயுதக்கப்பலான 'ஹொரிசோன்' முல்லைக் கடலுக்குள் பிரவேசிக்க இருந்த 14ம் திகதி இரவு புலிகள் ஒரு நாடகத்தை அரங்கேற்றினார்கள்.

14ம் திகதி இரவு பத்துக்கு மேற்பட்ட படகுகளில் சென்ற புலிகள் யாழ் தீவுப் பகுதிகளுக்குள் ஊடுருவித் தாக்குதல் நடத்தினார்கள்.

புலிகளும், ஈ.பி.டி.பி.யினரும் ஊர்காவற்துறைப் பகுதியில் மோதிக்கொண்டனர்.

புலிகள் தீவுப்பகுதிகளுக்குள் ஊடுருவிய செய்தி அறிந்தவுடன் கடற்படைரோந்துப் படகுகள் தீவுப்பகுதிகளுக்கு செல்லும்.

உள்ளே போன புலிகள் படகுகள் மூலமாக திரும்பி வருவார்கள். தாக்கலாம் என்று கடற்படையினர் காத்திருப்பார்கள்.

தீவுப்பகுதிகளை சுற்றிய கடற்பகுதியில் கடற்படைக் கப்பல்களும், ரோந்துப் படகுகளும் கவனம் செலுத்திக் கொண்டிருக்க, முல்லைக் கடலில் தொல்லையே இருக்காது. ஆயுதங்ளை இறக்கி முடித்துவிடலாம் என்பதுதான் புலிகளது உத்திகளில் ஒன்று.

பத்தொன்பதாம் திகதி அமாவாசை. கப்பல் முல்லைக் கடலுக்குள் வந்தது 14ம் திகதி. அதாவது தேய்பிறைக்காலம்.

கடற்பகுதி இருட்டாக இருக்கும். வானிலையையும் கணக்கிட்டுத்தான் கப்பல் வந்து சேர்ந்தது.

எல்லாம் சரி. ஆனால் தமது கணிப்புக்கள் யாவற்றிலும் இலங்கைப் படைகளை குறிப்பாக கடற்படையை மனதில் வைத்துத்தான் புலிகள் திட்டம் போட்டார்கள். இந்தியா என்ற ஒன்று இருப்பதை மறந்துவிட்டார்கள்.

இலங்கை கடற்படையிடம் உள்ள வசதிகளைவிட இந்திய கடற்படையின் வசதியும், வலுவும் பல மடங்கு அதிகம்.

இலங்கை கடற்பரப்பு விடயத்தில் இந்தியா இரண்டு விடயங்களை கவனிக்கிறது.

ஒன்று: புலிகளுக்கு வந்து சேரக்கூடிய உதவி.

இரண்டு: இலங்கை அரசுக்கு எங்கெங்கு இருந்து உதவிகள் கிடைக்கின்றன என்பது.

எப்படித்தான் நட்பு இருந்தாலும், இலங்கை அரசுக்கு இந்தியாவுக்கு விரோதமான சக்திகளிடம் இருந்து உதவிகள் கிடைக்கிறதா என்பதை இந்தியா இரகசியமாக கண்காணிக்கவே செய்யும்.

அதேபோல புலிகளுக்கும் இந்திய விரோத சக்திகளது உதவிகள் வந்து சேரலாம் என்ற சந்தேகம் இந்தியாவுக்கு இருக்கவே செய்யும்.

அதுவும், மேற்கு வங்காளத்தில் மர்ம விமானம் ஆயுதம் போட்ட பின்னர் தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை தீவிரமாக கவனிக்கத் தொடங்கியுள்ளது இந்தியா.

இந்தப் புதிய சூழலை புலிகள் ஏன் கணக்கில் எடுக்கத் தவறினார்கள் என்று தெரியவில்லை.

புலிகளது ஆயுதக் கப்பல் முல்லைக் கடலுக்குள் பிரவேசிக்கும்வரை பத்திரமாக மோப்பம் பிடித்து, இலங்கைக்கு தகவல் சொன்னது இந்தியாதான்.

இல்லை என்று இந்தியா மறுத்திருக்கிறது. ஆனால் அது பலவீனமான மறுப்பு.

தமது கப்பல் தாக்கப்பட்டவுடன் புலிகள் இந்தியாமீது குற்றம் சாட்டினார்கள். இந்திய கடற்படைக் கப்பல்களும் இலங்கை கடற்படைக் கப்பல்களும் இணைந்து தாக்கியதாக புலிகள் கூறியிருந்தார்கள்.

இந்திய கடற்படைக் கப்பல்கள் தாக்குதலில் பங்கு பற்றியதை மட்டுமே இலங்கை மறுத்தது.

"இந்தியாவுக்கு இந்த விவகாரத்தில் ஒரு தொடர்பும் கிடையாது. நாமே தகவலறிந்தோம். நாம் மட்டுமே சாதித்தோம்" என்று இலங்கை அரசோ, பாதுகாப்புத் தரப்போ மார்தட்டவில்லை.

'உடனே கருத்துக் கூறமுடியாது' என்று கழுவிய நீரில் நழுவிய மீனாகவே நடந்து கொண்டன.

தாம் மட்டுமே தனித்துச் செய்திருந்தால் அதனை நேரடியாகவும், உடனடியாகவும் சொல்ல இலங்கை தயங்க வேண்டியதில்லை.

மத்திய வங்கித் தாக்குதலுக்கு பதிலடியாக சித்தரிக்கக்கூடிய ஒரு தாக்குதலை தனது சாதனையாக சொல்லிக் கொள்ள அரசு ஏன் தயங்கவேண்டும்?

இந்தியாவும் முதலில் மேலோட்டமாக மறுத்துவிட்டு, பின்னர் புலிகளது குற்றச்சாட்டு பரவலாகியநிலையில்தான் உரத்து மறுத்திருந்தது.

அதன் பின்னர்தான் இலங்கை அரசும் இந்தியாவின் சம்பந்தத்தை மறைக்கும் விதமாகப் பேசத் தலைப்பட்டது.

இந்தியா மறுக்கக் காரணம் என்ன? இந்தியாவில் விரைவில் தேர்தல்கள் வர இருக்கின்றன.

இந்த நேரத்தில் இலங்கை அரசோடு இணைந்து புலிகளுக்கு எதிராக இந்திய அரசு செயற்படுவதாகக் கருதப்பட்டால் தமிழகத்தில் எதிர்ப்பு ஏற்படும். தேர்தலில் பாதிப்பு வெளிப்படும்.

அதுதவிர, இலங்கைத் தமிழ் மக்கள் முன்பாக, இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகளில் தானும் ஒரு பங்காளி என்று காட்டிக்கொள்ள இந்தியா விரும்பாது.

எனவேதான், புலிகளது ஆயுதக் கப்பல் விவகாரத்தில் தனக்கு தொடர்பில்லை என்று இந்தியா மறுத்திருக்கிறது என்று நம்பலாம்.

சரி, இந்தியா புலிகளது ஆயுதக்கப்பலை எப்படிக் கண்டறிந்தது? இது தொடர்பாக இரண்டு விதமான கருத்துக்கள் சொல்லப்படுகின்றன.

இந்தியாவில் மர்ம விமானம் ஆயுதம் போட்டது தொடர்பாக இந்திய புலனாய்வுப் பிரிவுகள் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றன.

சர்வதேச ஆயுத வியாபார மையங்கள், கறுப்புச் சந்தைகள் போன்றவற்றில் இந்திய புலனாய்வாளர்கள் விபரங்ளை திரட்டி வருகிறார்கள்.

அவ்வாறு தகவல்களை தேடிக்கொண்டிருந்த நேரத்தில் புலிகளது ஆயுதக் கப்பல் புறப்படும் தகவலும் இந்தியப் புலனாய்வுப் பிரிவினரின் காதில் விழுந்திருக்கலாம்.

வெளிநாடுகளில் கடந்தசில மாதங்களாக புலிகள் தீவிரமாக நிதிதிரட்டியதும், ஆயுதங்களை கொள்வனவு செய்து கொண்டிருப்பதாக புலிகளது வெளிநாட்டு கிளைகள் மட்டத்தில் செய்திகள் அடிபட்டதும் இந்திய புலனாய்வாளர்களது காதுகளில் விழாமல் இருந்திருக்காது.

புலிகளுக்கு வெளிநாடுகளில் நெருக்கமாக உள்ளவர்களில் பலர் இந்தியாவின் நட்பை விரும்புபவர்கள். இந்தியாவை பகைத்தது தவறு என்று நினைப்பவர்கள். அவர்கள் மூலமாக கதையோடு கதையாக சில தகவல்கள் கசியக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன.

1993இல் கிட்டு ஆயுதங்கள் ஏற்றிவந்த டொங்நோவா கப்பலை இந்தியா மறித்தது. கிட்டு உட்பட பத்துப் பேர் 16.1.93இல் கப்பலுடன் தம்மைத் தாமே மாய்த்துக் கொண்டனர்.

முன்கூட்டியே கிடைத்த தகவலின் அடிப்படையில்தான் 'டொங்நோவா' கப்பலை எதிர்பார்த்து இந்திய கடற்படை காத்திருந்தது.

மாத்தையாவின் விசுவாசிகளில் ஒருவர் மூலமாகவே இந்தியா தகவல் பெற்றுக் கொண்டது என்று நம்பப்பட்டது.

அதேபோல 'ஹொரிசோன்' கப்பல் புறப்படும் தகவலையும் இந்திய அரசு முன்கூட்டியே அறிந்துவிட்டது.

கிட்டு வந்த கப்பலை மறித்தபோது ராஜீவ் கொலை விவகாரத்திற்கு பழிக்குப் பழி என்று இந்தியாவால் மறைமுகமாக நியாயப்படுத்த முடிந்தது.

இப்போது ராஜீவ் கொலை விவகாரம் ஆறிய கஞ்சி நிலையில் இருக்கிறது. அதுதவிர, இலங்கைத் தமிழர்கள் மீதான அனுதாபமும் தமிழ்நாட்டில் மறுபடியும் எழத் தொடங்கியிருக்கிறது.

எனவே- இந்தக் கால கட்டத்தில் கப்பலை தாம் வழிமறிப்பதைவிட, இலங்கை அரசிடமே தகவலைச் சொல்லி காரியத்தை முடிக்க இந்தியா நினைத்திருக்கலாம்.

கப்பல் நடமாட்டத்தைக் கவனித்து தமக்கு கிடைத்த தகவலை முதலில் உறுதி செய்து கொண்டது இந்தியா. பின்னர்தான் இலங்கைக்கு அறிவித்தது. முல்லைக் கடலில், கப்பல் பிரவேசிக்கத் தொடங்கியபோதே இலங்கை விமானப் படையும், கடற்படையும் உஷார்படுத்தப் பட்டுவிட்டன.

மேற்கண்ட கருத்தைத்தான் வெளிநாடுகளில் இருந்து குறிப்பாக பாங்கொக்கில் இருந்து வெளியான செய்திகள் தெரிவிக்கின்றன.

இன்னொரு தகவல் என்ன சொல்கிறது பார்ப்போம்.

கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த இந்தியக் கடற்படையின் ராடர் கண்களில் சந்தேகத்துக்கிடமாக மாட்டியது ஹொரிசோன் கப்பல்.

அதனைத் தொடர்ந்துதான் இந்திய கடற்படை உஷாராகிக் கவனித்தது. கப்பல் இலங்கையின் முல்லைக் கடல் பக்கம் செல்லத் தொடங்கியவுடன் அது புலிகளது கப்பல் என்று தெரிந்துவிட்டது. அதன் பின்னரே இலங்கைக்கு தகவல் சொல்லப்பட்டது என்று விபரிக்கிறது மற்றொரு தகவல்.

ஆனால், நமக்கு கிடைத்த தகவல்களை வைத்து ஆராயும்போது முதலாவது கருத்தே சரியானது என்று தெரிகிறது.

ஆயுதக் கப்பல் பாங்கொக்கில் இருந்து புறப்பட்ட தகவல் பலாப்பழம் போல இந்தியாவுக்கு கிடைத்துவிட்டது.

என்ன செய்யலாம் என்று தீவிரமாக ஆராய்ந்து, இறுதியாக இலங்கை மூலமாகவே கப்பலை தகர்ப்பது என்று இந்தியா முடிவு செய்துவிட்டு காத்திருந்தது என்பதுதான் நடந்த கதை என்று நம்ப முடிகிறது.

ஹொரிசோன் கப்பலை தாக்கியதில் இந்திய கடற்படை கப்பல்கள் பங்கு கொண்டதாக புலிகள் கூறுவது சரியல்ல.

ஆனால், தமது கப்பல் பற்றிய தகவலை இந்தியா கொடுத்து உதவிய விபரத்தை புலிகள் தெளிவாக அறிந்து கொண்டார்கள்.

ஹொரிசோன் கப்பலில் இருந்தவர்களுக்கு இந்தியக் கப்பல்கள் தம்மை பின்தொடர்ந்தமை தெரிந்திருக்கலாம். தகவல் தொடர்பு சாதனங்கள் மூலமாக தலைமைக்கு அதனை தெரிவித்திருப்பார்கள்.

கப்பல் தாக்கப்பட முன்னரே அதிலிருந்தவர்கள் கடலில் குதித்து நீந்திச் சென்றதாகத் தெரிகிறது. அவர்கள் மூலமாக சகல விபரங்களையும் அறிந்த புலிகளது தலைமைக்கு இந்தியா மீது கோபம் வந்துவிட்டது.

அதனால்தான் இந்தியக் கப்பலும் இணைந்து தாக்கியதாக குற்றம் சாட்டத் துணிந்தனர்.

திட்டவட்டமாக தெரிந்துவிட்ட இலக்கை பரந்த கடல் நடுவே வைத்து தாக்குவதற்கு இலங்கை கடற்படைக்கு வேறு உதவிகள் தேவையில்லை.

கரும்புலிப் படகுகள் எதிர்பாராத நேரத்தில் கடற்படைக் கப்பல்களோடு மோதலாமே தவிர, தாக்குதலை எதிர்பார்த்து வரும் கடற்படைக்கப்பல்களை ஒன்றும் செய்ய முடியாது.

முன்கூட்டியே தயாராக வரும் கடற்படைக் கப்பல்களை எதிர்த்து போரிடும் அளவுக்கு புலிகளது கடற்புலிகளது வசதிகள் போதாது.

அதனால்தான் கடற்கரும்புலிகளால் ஹொரிசோன் கப்பலைக் காப்பாற்ற முடியவில்லை.

கப்பலில் வெடிமருந்து நிரப்பி வந்ததாக புலிகள் கூறியிருப்பது தவிர்க்க முடியாத பொய்! ஆயுதக் கப்பல் என்று பகிரங்கமாக ஒத்துக் கொள்வதால் புலிகளுக்கு பல பாதகங்கள் ஏற்படலாம். அதனால்தான் அப்படி ஒரு பொய்.

கப்பலில் இருந்து ஒரு தொகுதி ஆயுதங்கள் கூட இறக்கப்படும் சந்தர்ப்பமும் கிடைக்காமல் போனதுதான் புலிகளுக்கு வருத்தம்.

ஆகக் குறைந்தது 60 கோடி ரூபாய்கள் புலிகளுக்கு நஷ்டம் என்று மதிப்பிடலாம். 5 புலிகள் பலியாகியுள்ளனர்.

ஆனாலும், அதனால் அரசாங்கம் நிம்மதிப் பெருமூச்சுவிட முடியாது. ஏனெனில் புலிகளிடம் மேலும் இரண்டு கப்பல்கள் இருக்கின்றன. மேலும் வாங்கவும் முடியும்.

— நாரதர் —

## அதிரடி அய்யாத்துரை



மூதூர் விவகாரத்திலை நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பத்திரிகைச் செய்திகள் சொல்லுகுது. சனம் ஓட, ஓட 'டுமில்' 'டுமில்' செய்தவர் ஒருவர் எந்தப் பிரச்சனையும் இல்லாமல் அரணில் நிற்கிறாராம், பயணிகளை சோதனை செய்கிறாராம். அதைக் கண்ட மூதூர் சனம் கலங்கிப் போச்சதுகளாம். அப்ப யாரைப் பிடிச்சு உள்ளே வைச்சிருக்கினம்?

ரெண்டு எழுத்தார் தாக்கினால் 'எங்கள் தரப்பும் உணர்ச்சி வசப்படுவது தவிர்க்க முடியாதது' எண்டு திருவானமலையில் ஒரு பச்சை தரப்பு முக்கிய அதிகாரி சொன்னவராம். அப்படியானால் 'இனம் தெரியாதோர் கட்டனர்' எண்ட செய்தியை தேசிய தொலைக் காட்சியிலை தொடர்ந்து கேட்கலாம் போலத்தான் கிடக்கு.

பச்சை கட்சிக்காரர்கள் தமிழ் கட்சிகளைச் சந்திக்கிறதும் ஒரு அரசியல் சாணக்கியம்தானாம். சந்திப்புக்கு முன்னரே அறிக்கை ரெடியாக இருக்குமாம். சந்திப்பு முடிஞ்சவுடனை அறிக்கை பத்திரிகைகளுக்கு கொடுக்கப்படுமாம். "சந்திப்பு திருப்தியாக இருந்தது. தொடர்ந்து பேசுவோம்." எண்ட வழக்கமான வார்த்தையோடு அறிக்கை வெளியாகும். சந்திக்கிற கட்சிகளுக்கும் தங்கள் பெயர்கள் வந்தால் போதும்தானே பாருங்கோ.

வடக்கு-கிழக்கு இணைப்புப் பற்றிய பேச்சுக்களை தற்போது எடுக்க வேண்டாம் எண்டு கூட்டான கட்சியின் நீலமானவர் மூலம் அதிகாரத் தரப்பு தமிழ் கட்சிகளுக்கு சொல்லியிருப்பதாகத் தகவல். தமிழில் வேண்டுமானால் பேசங்கோ வெகுஜன சபையிலோ அல்லது ஆங்கில பத்திரிகைகளிலோ அந்தப் பேச்சை எடுக்க வேண்டாம் எண்டு சொல்லப்பட்டிருக்குதாம்.

தலைநகர பிதா ஆளும்தரப்பின் தீர்வு யோசனையை ஆதரிச்சுப் பேசிவருகிறார். விஷயமறிஞ்ச பச்சைக் கட்சி பிரமுகர்கள் சிலர் அவர் மீது காய்ச்சலில் இருப்பதாகக் கேள்வி. கணேசா, நல்லதுக்கு காலமில்லையப்பா.

கிழக்கின் ரெண்டு எழுத்துப் பிரமுகர் காலன் விடயத்தில் அங்குள்ள ரெண்டு எழுத்தாருக்கு சில கசப்புக்கள் இருக்குதாம். சமீபத்தில் அவரைச் சந்தித்த பத்திரிகையாளர் ஒருவரிடம் 'தலைவருக்கு அடுத்த இடத்திலை இருப்பது நான்தான்' எண்டு காலன் சொன்னவராம். அப்படியெண்டால் 'செல்வ'னின் நிலை மாற்றப்பட்டுவிட்டது எண்டல்லோ அர்த்தமாகிப்போகும்.

தேசிய தொலைக்காட்சியிலை தமிழுக்கு தரப்படும் மரியாதையைப் பார்த்தா அடிக்கடி புல்லரிக்குது. தமிழில் நிகழ்ச்சி நடக்கும்போது தடங்கல் ஏற்பட்டால் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் மட்டும்தான் வருத்தம் தெரிவிக்கப்படுகுது. தமிழில் வருந்தினால் நாகரிகமாக இருக்காது எண்டு யார் சொன்னது? அதுமட்டுமோ, கிரிக்கெட்டை பற்றிப் பேட்டி. தமிழ் பேசவே சரியாத் தெரியாத ஒரு மனுசனைப் பேட்டி எடுத்து கிரிக்கெட்டின் அருமை பெருமைகளை விளக்கிய ரூபவாஹினி தமிழ் பிரிவுக்கு கோடி நன்றி! தமிழில் தரமான நிகழ்ச்சிகளை தயாரிக்கவே கூடாது எண்ட முடிவிலை இருக்கினமாக்கும்.

ஆளும்தரப்புக்குள் உள்ள போக்குவரத்து அதிகாரத்தலைவியின் அணி அடிக்கடி முரண்டுபிடிக்குதாம். சகல அதிகாரமும் உள்ள சக்தி போக்குவரத்து அம்மணியை அழைத்து வெட்டு ஒன்று, துண்டு ரெண்டாக சொல்லிப்போட்டாவாம். "பிரச்சனை பண்ணாமல் இருக்கிறது எண்டால் இரும். இல்லாவிட்டால் இடத்தைக் காலி பண்ணலாம்" எண்டுதான் சொல்லப்பட்டதாம்.

ஒரு பஸ் தன்னைப் பற்றி அறிமுகம் செய்கிறது இப்படி.

**பஸ்**

"என்னுள் அறுபதுபேர்
அடக்கம்.
என்னால் அறுபது பேர்
அடக்கம்."

(விஜி)



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

**68**

**அரசியல் தொடர்**

**அற்புதன்**

### ஒரு கட்சி

ரெலோ இயக்கத்தை தடை செய்த பின்னர் 'இந்தியா டுடே' ஆங்கில சஞ்சிகைக்கு பிரபாகரன் அளித்த பேட்டியின் ஒரு பகுதியை சென்ற வாரம் தந்திருந்தேன்.

1986 இல் பிரபாவின் மனோபாவம் எத்தகையதாக இருந்தது என்பதை இப் பேட்டி புலப்படுத்துகிறது.

பேட்டியிலிருந்து மேலும் சில முக்கிய பகுதிகள்:

**கேள்வி:- கம்யுனிச நாடுகளில் இருந்து நீங்கள் ஆயுத உதவி பெறுவதாக ஜயவர்த்தனா குற்றம் சாட்டுகிறாரே?**

பிரபா:- கம்யுனிஸ்ட் நாடுகளில் இருந்து எனக்கு ஆயுதங்கள் கிடைத்தால் இந்தப் பேட்டியை சுதந்திர தமிழீழத்தில் இருந்து தந்திருப்பேன்.

**கேள்வி:- தமிழ் ஈழத்துக்கு எந்த விதமான அரசியலமைப்பு இருக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள்?**

பிரபா:- தமிழீழ அரசு ஒரு சோசலிச அரசாக அமைந்திருக்கும். மக்களால் ஆதரிக்கப்படும் ஒரே ஒரு அரசியல் கட்சியே அங்கு இருக்கும். பலகட்சி ஜனநாயகத்தை நான் விரும்பவில்லை. ஒரு கட்சி அரசு மூலமே விரைவில் தமிழீழத்தை வளர்ச்சியடைந்த ஒரு நாடாக மாற்றியமைக்க முடியும்.

**கேள்வி:- பாராளுமன்ற ஜனநாயகம் இருக்குமா?**

பிரபா:- மக்கள் ஜனநாயகக் குடியரசாக, யூகோஸ்லேவிய அமைப்பு முறையில் ஒரு கட்சியை மக்கள் தெரிவு செய்வார்கள்.

**கேள்வி:- தமிழீழ வெளிவிவகாரக் கொள்கை எப்படியிருக்கும்?**

### அங்குதான் யுத்தம்

பிரபா:- நாம் சோசலிச அணிகளுடன் இருப்போம். ஏனெனில் அப்படியான நாடுகள்தான் இன்று எமக்கு உதவி புரிகின்றன.

**கேள்வி:- அண்மைக்காலத்தில் நீங்கள் யாழ்ப்பாணம் போனதுண்டா?**

பிரபா:- என்னுடைய நடவடிக்கைகள் இரக்சியமானவை. எனது நம்பிக்கைக்குரிய தளபதிகள் என்னோடு தினமும் தொடர்புகொள்வார்கள்.

**கேள்வி:- ஜயவர்த்தனா உங்கள்மீது சுமத்தும் குற்றச்சாட்டு என்னவெனில், இந்திய மண்ணிலிருந்து உங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்கிறீர்கள் என்பதாகும். அது பற்றி என்ன கூறுகிறீர்கள்?**

பிரபா:- எமது போராட்டம் எமது மண்ணான தமிழீழத்திலேயே நடைபெறுகிறது. எமது யுத்தத்தை அங்கேயே நடத்துகிறோம். தேவையேற்படும் போது நாமும் அங்கு செல்வோம். இங்கிருந்து போராடும் எண்ணம் நமக்கு இல்லை. நாம் இங்கிருப்பது சர்வதேச அளவில் அரசியல் பிரசாரம் செய்வதற்காகவே.

**கேள்வி:- இந்திய அரசின் ஈடுபாட்டை எவ்வளவு தூரம் போற்றுகிறீர்கள்?**

பிரபா:- எமது இலட்சியத்திற்கு இந்திய அரசின் அனுதாபம் உண்டு. எம்மை இங்கு தங்குவதற்கு அனுமதித்துள்ளதே இந்திய அரசின் மிக உயர்ந்த மனப்பான்மைக்கு எடுத்துக் காட்டு. இந்தியா தலைமறைவாக வாழும் சகல அரசியல் தலைவர்களுக்கும், இலட்சக்கணக்கான ஈழமக்களுக்கும் அடைக்கலம் தந்துள்ளது.

**கேள்வி:- இந்தியா ஐக்கிய இலங்கை என்ற அமைப்புக்குள் தீர்வைக் காண முயல்கிறது. நீங்கள் ஈழம் தவிர வேறு எதனையும் ஏற்பதில்லை என்கிறீர்கள். இதிலே முரண்பாடு இல்லையா?**

பிரபா:- நாம் எமது மக்களின் அரசியல் அபிலாசைகளையே பிரதிபலிக்கிறோம். எமது மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு எதிராக இந்திய அரசு நடக்காது என்று நம்புகிறோம். எமது அரசியல் அபிலாசைகளை நிறைவேற்ற இந்தியாவின் ஆதரவு தேவை. அதே சமயம் எமது தமிழீழ மக்களுக்கு இறைமையும், சுயநிர்ணய உரிமையும் உண்டு.

அதுதான் பிரபா அளித்த பேட்டி. ஒரு கட்சி முறைக்கு ஆதரவு, பல கட்சி ஜனநாயகத்திற்கு எதிர்ப்பு போன்ற அம்சங்கள் பிரபாவின் பேட்டியில் ஏனைய இயக்கங்களை அச்சுறுத்துவதாக இருந்தன.

### எதிர்ப் பிரசாரம்

ரெலோவுக்கு நடந்தது தமக்கும் நடக்கும் என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப்., புளொட் போன்ற அமைப்புக்கள் நம்பத் தொடங்கிவிட்டன.

"யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் உள்ள ஈ.பி.ஆர்.எல்.எஃப். முகாம்களை புலிகள் உளவறிகிறார்கள்; விபரம் திரட்டுகிறார்கள்" என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். தமிழ்நாட்டில் அறிவித்தது.

'ஈழப்போராளி' என்றொரு பத்திரிகை தமிழ்நாட்டிலிருந்து ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பால் வெளியிடப்பட்டது.

வரதராஜப்பெருமாள்தான் அதன் பொறுப்பாளராக இருந்தார்.

அதுவரை காலமும் தமிழ்நாட்டில் பிரசார வேலைகளை கவனித்துவந்த டேவிற்சன் யாழ்ப்பாணம் திரும்பினார். பத்திரிகை வேலைகளுக்கு பொறுப்பாக இருந்த ரமேஷுக்கும் பத்மநாபாவுக்கும் இடையே பிரச்சனைகள் ஏற்பட்டன. அதனால் வரதராஜப்பெருமாள் தமிழ்நாட்டிலிருந்து ஈழப்போராளி என்னும் பத்திரிகையை பொறுப்பேற்கச் செய்தார்.

புலிகளுக்கு எதிரான கடும் பிரசார ஏடாக 'ஈழப்போராளி' வெளிவந்தது.

'ஈ.பி.ஆர்.எல்.எஃப். மீது தாக்குதல் நடத்த புலிகள் திட்டம்' என்று தலைப்புச் செய்தியும் வெளியிடப்பட்டது.

டக்ளஸ் தேவானந்தாவும் அவரது பக்கம் நின்ற ரமேஷ், டேவிற்சன், இப்ராகீம், போன்றவர்கள் புலிகளுக்கு சார்பானவர்களாகக் கருதப்பட்டனர்.

பத்மநாபாவும் அவருடன் நின்ற சுரேஸ் பிரேமச்சந்திரன், வரதராஜப்பெருமாள் போன்றோர் தீவிர புலி எதிர்ப்பாளர்களாக கருதப்பட்டனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். பிரச்சனையில் கிட்டுவின் உதவியோடு டக்ளஸ் தேவானந்தா அணியினர் இயக்கத்தை கைப்பற்றத் திட்டம் என்றும் ஒரு பிரசாரம் செய்யப்பட்டது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். உள் இயக்கப் பிரச்சனையை பேசித்தீர்க்கவும், வெளிநாட்டு சந்தையில் ஆயுதம் வாங்கவும் இந்தியா செல்லப் புறப்பட்டார் டக்ளஸ் தேவானந்தா.

## "ஈழத்தில் ஒரு கட்சி ஆட்சி. பல கட்சி ஜனநாயகம் எனக்குப் பிடிக்காது"

**-பிரபா-**

### படகுப் பயணம்

யாழ்ப்பாணம் குருநகரில் இருந்து படகு புறப்பட்டது.

காலநிலை சீராக இல்லை. கடலின் நீரோட்டம் மோசமாக இருந்தது. படகும் அதன் கொள்ளளவுக்கு மீறிய சுமையோடு சென்றது.

நடுக்கடலில் பயங்கர அலையொன்று சுழன்றடிக்க படகு கவிழ்ந்தது. கவிழ்ந்த படகில் தொற்றிக் கொண்டு நின்றனர் சிலர்.

சுகிர்தன், அசோக், அகிலன், எட்வேர்ட் என்னும் நான்கு பேரும் தம்மால் நீந்திக் கரை சேரமுடியாது என்று நினைத்து விட்டனர்.

கழுத்தில் கட்டியிருந்த சயனைட்டைக் கடித்துக்கொண்டு படகின் பிடிப்பை விட்டனர். கடலில் விழுந்தனர்.

ஏனையோர் படகில் பிடித்தபடி தத்தளித்துக்கொண்டிருந்தனர்.

யாராவது ஒருவர் கரைக்குச் சென்றால்தான் வேறு படகுகளை உதவிக்கு அழைக்கவும் முடியும்.

நடுக்கடலில் இருந்து கரை நோக்கி நீந்தத் தொடங்கினார் டக்ளஸ் தேவானந்தா.

கிட்டத்தட்ட பத்துமணி நேர நீச்சல். திசை தெரியாமல் அலைகளில் சிக்கித் தடுமாறி நீந்திவர நீண்ட நேரமானது. அவரோடு சேர்ந்து படகின் ஓட்டியாகச் சென்ற கென்னடி என்னும் உறுப்பினரும் கரைக்கு வந்து சேர்ந்தார்.

அதன் பின்னர்தான் கரையில் இருந்து படகுகள் உதவிக்கு விரைந்தன.

ஆனால் அதற்கு முன்ரே படகில் தொங்கிக் கொண்டிருந்த ஏனைய மூன்று உறுப்பினர்கள் கடலில் விழுந்து காணாமல் போய்விட்டனர்.

ஜீவன், கலீல், காமினி, ரமணன் ஆகிய நான்கு பேர் மட்டுமே படகில் தமது பிடியை தளரவிடாமல் தொங்கிக்கொண்டிருந்தனர்.

அவர்களை மீட்டுக்கொண்டு, கடலில் விழுந்தவர்களை பல படகுகளில் தேடினார்கள். பலன் இல்லை.

மறுநாள்தான் சடலங்கள் கரை ஒதுங்கின. சயனைட் கடித்த உறுப்பினர்களது சடலங்கள் நீலம்பாலித்த நிலையில் கரை ஒதுங்கியிருந்தன.

மொத்தம் ஏழு பேர் கடலில் பலியானார்கள். அத்தனை பேரும் டக்ளஸ் தேவானந்தாவின் மெய்ப் பாதுகாவலர்கள். மக்கள் விடுதலைப் படையின் முன்னணி உறுப்பினர்கள்.

எட்வேட் (கோப்பாய்), இமாம் (சாவகச்சேரி), சுகிர்தன் (மன்னார் தளபதி), நடராஜா (திருமலை), அசோக் (இளவாலை), ஞானம் (மட்டக்களப்பு) ஆகியோரே கடலில் பலியானவர்கள் ஆவர்.

ஆயுதம் வாங்குவதற்காக கொண்டு செல்லப்பட்ட-கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் பெறுமதியான தங்கக் கட்டிகளும் கடலில் தொலைந்து போயின.

### இறுதிச் சடங்குகள்

கடலில் பலியான ஏழுபேரினதும் இறுதிச் சடங்குகள் யாழ்ப்பாணத்தில் மிகப் பாரியளவில் நடத்தப்பட்டன.

பலியான உறுப்பினர்களுக்கு இறுதி ஊர்வலம் நடத்தி பொதுக்கூட்டம் நடத்தும் முறையை யாழ்ப்பாணத்தில் முதன் முதலில் சிறப்பாகச் செய்தது ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புத்தான்.

டேவிற்சன்தான் இறுதிச் சடங்கு நிகழ்ச்சிகளைப் பொறுப்பேற்று திறம்படச் செய்து வந்தார்.

ஏழு பேரின் இறுதிச் சடங்கும் எழுச்சிகரமாக நடத்தப்பட்டது. மானிப்பாயில் வெள்ளம் போல் மக்கள் திரண்டிருக்க ஏழு பேரின் உடல்களுக்கும் இறுதி மரியாதை செலுத்தப்பட்டது. சிதைகளுக்கு டக்ளஸ் தேவானந்தா தீமூட்டினார்.

மதசார்பற்ற இறுதிச் சடங்காக உணர்ச்சிகரமாக நடந்து முடிந்தது. ஈ.பி.ஆர்.எல்.எஃப். நடத்திய மிகப்பெரிய இறுதி அஞ்சலி நிகழ்ச்சியும் அதுதான்.

### அதிரடித் தாக்குதல்

இதற்கிடையே இக் கட்டுரைத் தொடரில் தவறவிட்ட ஒரு முக்கிய மோதல் ஒன்றை சொல்ல வேண்டும்.

யாழ்ப்பாணம் சுதுமலையில் புலிகளது முகாம் ஒன்று இருந்தது.

புலிகளது யாழ்மாவட்ட தளபதி கிட்டு அங்குதான் தங்கியிருந்தார்.

சுதுமலை முகாம் பற்றிய விலாவாரியான தகவல் இலங்கை அரசுக்கு கிடைத்துவிட்டது.

1985 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21ம் திகதி. காலை நேரத்தில் வானில் மூன்று ஹெலிகொப்டர்கள்.

ஹெலிகொப்டர்கள் ஏன் வருகின்றன? வழக்கம் போல வட்டமடித்துவிட்டுச் சென்றுவிடக்கூடும் என்று மக்கள் நினைத்தனர்.

ஆனால், மூன்று ஹெலிகளும் புலிகளது சுதுமலை முகாமுக்கு அருகே தரையிறங்கின.

நவீன ஆயுதங்களோடு குதித்தனர் இராணுவத்தினர். ஏ.கே.47. எல்.எம்.ஜி. ஆர்.பி.ஜி. மோட்டார்களோடு அதிரடிப் பயிற்சி பெற்ற இராணுவத்தினர் புலிகளது முகாமை நோக்கிப் பாய்ந்தனர்.

புலிகளது முகாமில் இருந்தும் பதிலடி ஆரம்பித்தது.

அதே சமயம் ஹெலியில் படையினர் வந்து இறங்கிய விடயம் ஏனைய இயக்கங்களுக்கும் எட்டிவிட்டது.

ஆயுதங்களோடு சுதுமலை நோக்கி ஏனைய இயக்க உறுப்பினர்களும் விரைந்தனர்.

புலிகளது முகாமில் அப்போது கிட்டுவும் இருந்தார். வோக்கி டோக்கி மூலம் ஏனைய தமது முகாம்களுக்கு செய்தி அனுப்பினார் கிட்டு.

பல்வேறு திசைகளில் இருந்தும் தாக்குதல் நடத்தப்படுவதை அறிந்த இராணுவத்தினர் தாக்குதலை நிறுத்திவிட்டு, ஹெலிகளில் ஏறிக் கொண்டனர்.

தமக்கு இக்கட்டான நேரத்தில் உதவிக்கு விரைந்த ஏனைய இயக்கங்களுக்கு நன்றி சொன்னார் கிட்டு.

யாழ் குடாநாட்டில் வான் வழியாக வந்திறங்கி அதிரடித் தாக்குதல்களை நடத்த இராணுவத்தினர் திட்டமிட்டிருந்தனர்.

அத்திட்டத்தின் முதலாவது தாக்குதல்தான் சுதுமலைத் தாக்குதல்.

ஆனால், சுதுமலையில் கிடைத்த பதிலடியில் இருந்து படையினர் தப்பிச் சென்றதே பெரிய காரியமாகிவிட்டது.

அதனால் வான் மூலமாக தரையிறங்கி அதிரடித் தாக்குதல் நடத்தும் திட்டத்தை அத்தோடு கைவிட்டனர் இராணுவத்தினர்.

தமது முகாம் நோக்கி வந்து முன்னேறிய படையினரை திருப்பியனுப்ப புலிகள் தீரமுடன் சமரிட்டதை மறுக்க முடியாது. அதே சமயம் ஏனைய இயக்கங்கள் அத் தாக்குதலை முறியடிக்க செலுத்திய பங்களிப்பும் குறிப்பிடத்தக்கதாகும்.

இஸ்ரேலிய மொசாட் ஆலோசனைப்படிதான் வான்மூலம் வந்து தரையிறங்கும் தாக்குதல்களுக்கு அன்றைய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத்முதலி அனுமதி வழங்கியிருந்தார்.

### பேச்சு முயற்சி

மீண்டும் 1986ம் ஆண்டு காலப்பகுதிக்குச் செல்லுவோம்.

இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனாவுடன் மறுபடியும் பேச்சு நடத்த முன்வந்தது தமிழர் விடுதலைக் கூட்டணி.

மாகாணசபைத் திட்டத்தையும் பரிசீலிக்க முன்வந்தார் அமிர்தலிங்கம்.

ஈழப் போராளி அமைப்புகள் கூட்டணியின் நிலைப்பாட்டை கடுமையாகக் கண்டித்தன.

எனினும், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமை அதனைக் காதில் போட்டுக்கொள்ளவில்லை.

இயக்கங்களை அரசியல் விவேகமற்றவை என்பது போலவே கூட்டணியினர் கூறிவந்தனர்.

போருக்கு இயக்கங்கள். பேச்சுக்கு கூட்டணி என்று நம்பவைக்க முற்பட்டது மூலமே இயக்கங்களின் கடுமையான வெறுப்புக்கு ஆளாகியது கூட்டணி.


நூற்றுக்கணக்கான போராளிகளை பலிகொடுத்து இயக்கங்கள் போராடிக் கொண்டிருந்த நேரம் அது.

அந்த நேரத்தில் இயக்கங்களின் தாக்குதல்களால்தான் ஜே.ஆர். பேச்சுக்கு வரவே ஒப்புக்கொள்ளவேண்டியிருந்தது.

தமது தாக்குதல்களால் கிடைக்கும் பலன்களைக் கூட்டணி அனுபவிக்க நினைப்பதாக இயக்கங்கள் வெறுப்புக் கொண்டன.

குறிப்பாக, புலிகளும் அதன் தலைவர் பிரபாகரனும் அமிர்தலிங்கம் அன்ட் கொம்பனி என்றும், தமிழர் வியாபாரக் கூட்டணி என்றும் கூட்டணியைக் கேலியாக அழைக்கத் தொடங்கினர்.

(தொடர்ந்து வரும்)




1986 இல் 'வீரவேங்கை'யில் வெளியான காட்டூண்.

## வானில் இருந்து தரையில் இறங்கிய படை





படிப்பகம்

www.padippakam.com

## அலசுவது – இராஜதந்திரி

# பூட்டிய சிறைக்குள் ஆட்டம் போடும் பயங்கரவாதம்!

மகஸீன் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த தமிழ்க்கைதிகள் மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்டுள்ளனர். -

தாக்குண்ட கைதிகளில் நால்வர் அபாயகரமானநிலையில் சிறைச்சாலை வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

கொழும்பிலுள்ள சிறைச்சாலைகள், பொலிஸ் நிலையங்களை எடுத்துக் கொண்டால் தமிழர்களே இன்று பெருமளவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது:

முன்பொருகாலத்தில் அரசியல் காரணங்களுக்காக தமிழர்கள் பலரும் சிறைசென்றிருந்தனர். பின்னர் அவர்கள் சிறையிலிருந்து வெளிவந்ததும் 'சிறைமீண்ட செம்மல்கள்' என்று வரவேற்கப்பட்டிருந்தனர்.

இனவாத அரசின் அடாவடித்தனங்களுக்கெதிராக குரல் எழுப்பியதாலேயே தமிழ் அரசியல் வாதிகள் பலரும் சிறைவைக்கப்பட்டிருந்தனர்.

அரசியல் போராட்டங்களும், சிறைவாசமும் எப்போதும் ஒன்றுடன் ஒன்று பெரிதும் சம்பந்தப்பட்டிருக்கின்றன.

இலங்கையில் மட்டுமல்ல, அரசியல் உரிமைகளுக்காகவும், தத்தமது தனித்துவங்களுக்காகவும் போராடும் அரசியல்வாதிகள், உலகில் பல்வேறு நாடுகளிலும் சிறைவைக்கப்பட்டிருக்கவே காணப்படுகின்றனர்.

இந்தியாவைப் பொறுத்தவரை சுதந்திரப்போராட்டத்தின்போது சிறைவாசத்தை இந்தியத் தலைவர்கள் அனைவருமே அனுபவித்திருந்தனர்.

மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, உட்பட முன்னணி அரசியல்வாதிகள் பலரும் அடிக்கடி சிறைத் தண்டனைகளுக்குள்ளாகுபவர்களாகவே இருந்தனர்.

இந்தியாவின் முதலாவது பிரதமரான ஜவஹர்லால் நேரு இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது வெள்ளையரால் சிறைவைக்கப்பட்டிருந்தார்.

ஜவஹர்லால் நேரு ஒரு சாதாரண பிரஜையல்ல. அவர் ஒரு பாரிஸ்டர் (சட்டத்தரணி) அவரைப் போலவே மகாத்மா காந்தியடிகளும் ஒரு சட்டத்தரணி.

எனவே கற்றவர்கள், கல்லாதவர்கள் என்ற வேறுபாடின்றி-ஆங்கிலேயர்கள்-அனைவரையுமே சுதந்திரப்போராட்டத்தின்போது சிறைவைத்தனர்.

ஜவஹர்லால் நேரு சிறையிலிருந்தசமயம் தமது ஏகபுதல்வியான இந்திராகாந்திக்கு அடிக்கடி கடிதங்களை எழுதுவார்.

அக்கடிதங்கள் தனிப்பட்ட தந்தை, மகள் உறவு பற்றியதாகவோ அல்லது குடும்ப சமாச்சாரங்கள் பற்றியதாகவோ இருக்கவில்லை,

பிரபஞ்சம், உலகின் இனங்கள், உலக அதிசயங்கள், மதங்கள், கலாசாரங்கள், என்று பரந்தளவிலான அறிவை ஒரு தந்தை தனது மகளுக்கு எழுத்து மூலம் புகட்டுவதாகவே அக்கடிதங்கள் விளங்கியிருந்தன.

எனவே இக்கடிதங்கள் நாளடைவில் 'DISCOVERY OF INDIA' என்ற நூலாகவும் தொகுத்து வெளியிடப்பட்டிருந்தது.

எனவே ஆங்கிலேயர்கள் தமது அரசுக்கு எதிரானவர்களைச் சிறையிலிட்டாலும், அவர்களது உணர்வுகளை மதித்தனர்.

இதன் காரணமாகவே, ஜவஹர்லால் நேருவுக்கு, சிறையிலிருந்தே தமது மகள் இந்திரா காந்திக்கு ஆழமான, அறிவுபூர்வமான கடிதங்களை எழுதமுடிந்தது.

மகாத்மா காந்தியினால் கூட பகவத்கீதையை அமைதியாகச் சிறையில் இருந்து உச்சாடனம் செய்ய முடிந்தது.

இன்றைய தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டெலா, 25 ஆண்டுகள் சிறையிலிருந்தார். ஆனால் அவரை மூர்க்கமாகத் தாக்கியோ அல்லது கொலை செய்யவோ தென்னாபிரிக்க வெள்ளையர்கள் முயற்சிக்கவில்லை.

சிறைமீண்டதும் நெல்சன் மண்டெலா மீண்டும் அரசியலில் தீவிரமாகக் குதித்து தம்மைச் சிறைவைத்தவர்களையே ஆளும் ஜனாதிபதியாகப் பரிணமித்தார்.

எனவே அரசியல் காரணங்கள், மற்றும் தீவிரவாத நடவடிக்கைகள் தொடர்பாக சிறையிலிடப்படுவோர், தடுத்து வைக்கப்படுவோர் ஆகியோர் பெரும்பாலும் கௌரவமாகவும், மனிதாபிமானமாகவுமே உலக நாடுகள் பலவற்றிலும் நடத்தப்படுகின்றனர்.

ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை மனிதாபிமானத்தை எங்குமே காணமுடியாதிருப்பதையே கடந்த வாரம் மகஸீன் சிறையில் இடம்பெற்ற சம்பவம் புலப்படுத்துகின்றது.

தமிழ்க்கைதிகள் தாக்கப்பட்டது இது முதற்தடவையல்ல. 1983ம் ஆண்டு இனக்கலவரம் சூடுபிடித்திருந்தவேளை, கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலையில் சிறைவைக்கப் பட்டிருந்த 50க்கும் அதிகமான தமிழ் கைதிகள் மிருகத்தனமான முறையில் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் போன்ற முன்னணித் தீவிரவாதத் தலைவர்கள் உட்பட தமிழ் அரசியல் கைதிகள் பலரும் விலங்குகளைப் போல கதறக் கதறத் துடிக்கத் துடிக்கச் சாகடிக்கப்பட்டிருந்தனர்.

அப்போது இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ஜே.ஆர்.ஜயவர்த்தனா பதவியிலிருந்தார்.

நாட்டில் இனவாதப்படுகொலைகள் வீடுகள், வீதிகளில் மட்டுமல்ல சிறைக் கூடங்களிலும் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளை ஜே.ஆர்.ஜயவர்த்தன, தார்மீக ஆட்சி என்று தமது ஆட்சியைப் பறைசாற்றிக் கொண்டிருந்தார்.

வெலிக்கடைச் சிறைச்சாலைப்படுகொலைகள் பற்றியோ, அல்லது அப்படுகொலைகளைப் புரிந்தவர்களைப்பற்றியோ ஜே.ஆர். அரசு எவ்வித விசாரணையும் நடத்தவில்லை.

அன்று ஜே.ஆர்.அரசின் அமைச்சராக இருந்த லலித் அத்துலத்முதலி, வெலிக்கடைச்சிறையிலிருந்த காடையர் கும்பலே அப்படுகொலைகளைப் புரிந்ததாக மட்டும் கூறியதுடன் நிறுத்திக் கொண்டார். ஆனால் எவ்விதத்திலும் அப்படுகொலைகள் குறித்து ஆராய ஒரு சட்டத்தரணி என்ற வகையில் கூட அவர் எத்தகைய முயற்சிகளையும் எடுத்திருக்கவில்லை.

வெலிக்கடைச் சிறைச்சாலைப் படுகொலைகள் மட்டுமல்ல, 1987ம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் எல்.ரி.ரி.ஈயினரது சிரேஷ்ட பிரமுகர்கள் சிலரும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த சமயமே தற்கொலை செய்திருந்தனர்.

1987ம் ஆண்டு இந்திய-இலங்கை உடன்படிக்கை கைச்சாத்தானதையடுத்து வடக்கே கடலில்வைத்து எல்.ரி.ரி.ஈயின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் கைதாகியிருந்தனர்.

இவர்களில் குமரப்பா, புலேந்திரன் ஆகியோரும் இடம் பெற்றிருந்தனர்.

பலாலி இராணுவமுகாமில் இவர்கள் இந்திய இலங்கைப் படையினரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தனர்.

ஆனால் அன்று கொழும்பிலிருந்த தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி, பலாலி இராணுவமுகாமில் வைக்கப்பட்டிருந்த எல்.ரி.ரி.ஈ.கைதிகள் கொழும்புக்குக் கொண்டுவரப்படவேண்டுமென வலியுறுத்தியிருந்தார்.

ஆனால் எல்.ரி.ரி.ஈ.கைதிகள் அன்று கொழும்பு செல்வதற்கு உடன்படவில்லை. இதனையடுத்து அவர்களைப் பலவந்தமாகக் கொண்டுவரும் முயற்சிகள் பலாலியில் இடம்பெற்றன.

எல்.ரி.ரி.ஈ.கைதிகள் வைக்கப்பட்டிருந்த அறையை உடைத்துக்கொண்டு உள்ளே நுழைய படையினர் முற்பட்டனர்.

இவ்வாறு அன்று எல்.ரி.ரி.ஈ.கைதிகளுக்கு உளரீதியான அழுத்தங்களைக் கொடுக்கும் நடவடிக்கைகள் தீவிரமடைந்ததையடுத்தே குமரப்பா, புலேந்திரன் உட்பட ஏனைய எல்.ரி.ரி.ஈ.கைதிகள் ஆறுபேரும் சயனைட் அருந்தி தற்கொலை செய்து கொண்டனர்.

இத்தற்கொலை மரணங்களே இந்தியப் படையினருக்கும் எல்.ரி.ரி.ஈ.யினருக்குமிடையே ஒரு நீண்டயுத்தம் ஏற்படவும் தோற்றுவாயாக இருந்தது.

எனவே இலங்கையைப் பொறுத்தவரை சிறையிலடைக்கப்படுவோர் சித்திரவதைக்குள்ளாவது, கொலை செய்யப்படுவது மற்றும் விசாரணைகளுக்காகக் கொண்டு செல்லப்படுவோர் காணாமல்போவது போன்ற சம்பவங்கள் சர்வ சாதாரணமாக இடம்பெறுவதையே அவதானிக்க முடிகின்றது.

இவ்வகையில் கடந்த வாரம் மகஸீன் சிறைச்சாலையில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தமிழர்களுக்கு எங்குமே பாதுகாப்பில்லை என்பதனையே எடுத்துக்காட்டுவதாக இருக்கின்றது.

பொல்லுகள், தடிகள் கொண்டு சிறைக்காவலர்களே மகஸீன் சிறையில் தமிழ்க்கைதிகளைத் தாக்கியுள்ளார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெலிக்கடை, மகஸீன் போன்ற சிறைகளில் வைக்கப்படும் தமிழ் கைதிகள் தாக்கப்படுகின்றனர்.

இதேவேளை பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்படும் தமிழர்கள் மிகவும் கீழ்த்தரமான முறையில் நடத்தப்படுகின்றனர்.

மிக மோசமான கிரிமினல் கைதிகளுடன் விசாரணைகளுக்காகக் கொண்டுசெல்லப்படுவோர் வைக்கப்படுகின்றனர்.

இதுதவிர நீதிமன்ற விசாரணைகள், வழக்குகள் என்பனவும் தமிழ்க்கைதிகள் தொடர்பில் காலந்தாழ்த்தப் பட்டவையாகவே இருக்கின்றன.



## –"பயங்கரவாதிகள்"– தமிழர்கள் மீது சாயப் பூச்சு

தமிழர்கள் அனைவரையும் பயங்கரவாதிகளாகச் சாயம்பூசும் நடவடிக்கைகளே நாட்டில் இடம்பெறுகின்றன.

நாளுக்கு நாள் தமிழர்கள் கைது செய்யப்பட்டு சிறையிலிடப்படுகின்றனர். பயங்கரவாதத்தடுப்பு நடவடிக்கையே இதுவென்று ஆட்சியாளர்கள் கூறிவருகின்றனர்.

ஆனால் யார், யார் பயங்கரவாதிகள்? என்று வரையறை செய்யமுடியாத நிலையும், ஆட்சியாளர்கள் குறிப்பிடும் பயங்கரவாதம் என்பது எத்தகையது, அதிலீடுபடுவோர் எத்தகையவர்கள் போன்ற கேள்விகள் விடைகாணப் படமுடியாது இருப்பதையே மகஸீன் சிறைச்சாலை சம்பவம் மூலம் உணர்ந்து கொள்ளமுடிகின்றது.

---

# "நவீன ஆயுதங்கள் தேவைப்படுகின்றன"

## –புலிகளது சர்வதேசப் பேச்சாளர் பேட்டி–

*விடுதலைப் புலிகளது தற்போதைய நிலைப்பாடு. மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பமாகும் சாத்தியக்கூறு இருக்கிறதா? என்பவை தொடர்பாக விடுதலைப் புலிகளது சர்வதேச பேச்சாளர் திலகர் கருத்துத் தெரிவித்துள்ளார்.*

**கேள்வி:- விடுதலைப் புலிகளின் தற்போதைய அரசியல் நிலைப்பாடு பற்றி...?**

திலகர்:- தமிழ் தேசமும், சிங்கள தேசமும் சமமானவை என்றோ, அதனை நிலைநாட்ட நடைபெறும் போராட்டம் சட்ட ரீதியானது என்றோ, அதனை நடத்தும் விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்றோ சிறீலங்கா அரசாங்கம் அங்கீகரிக்கத் தயாராக இல்லை.

எனவே, சர்வதேச சமூகத்திற்கு எமது போராட்ட நியாயத்தை எடுத்துக்கூறி. அதன் மூலம் சிறீலங்கா அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்து அவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு செய்வதே எமது அரசியல் நிலைப்பாடாகும்.

**கேள்வி:- தற்போதைய சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் சிறீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவார்களா?**

திலகர்:- தற்போது இனவாதப்பூதம் மேலும் விசுவரூபமெடுத்துள்ளது. தமிழ் மண் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இப்படியான நிலை, சமமான அடிப்படையிலும், நன் நம்பிக்கை அடிப்படையிலுமான பேச்சு வார்த்தைக்கு உகந்ததாக இல்லை.

**கேள்வி:- அப்படியானால் எந்த அடிப் படையில் பேச்சுக்கள் மீண்டும் தொடங்கப் படலாம்?**

திலகர்:- நான் முதலாவது கேள்விக்கு பதிலாக குறிப்பிட்டுள்ளதில் உள்ள விடயங் களை சிறீலங்கா அரசாங்கம் அங்கீகரிக்காத காரணத்தால்தான் போர் மூலமாக, இராணு வத்தீர்வு மூலமாக பேரினவாத மேலாதிக் கத்தை திணிக்க முற்படுகிறது. எனவே மேற்கூறிய விடயங்களை சிறீலங்கா அரசாங் கம் அங்கீகரித்தால் இராணுவத் தீர்வு முயற்சியோ, ஆக்கிரமிப்போ: அவசியம் இருக்காது.

அப்போது, ஆக்கிரமித்த பகுதிகளில் இருந்து இராணுவம் வெளியேறவும், தமிழ் மக்கள் மீதான இராணுவ, பொருளாதார தாக்குதல்கள் நிறுத்தப்பட்டு, மக்கள் தமது இடங்களுக்கு திரும்பவும் வழி ஏற்படும்.

அத்தகைய சூழ்நிலையை சிறீலங்கா அரசாங்கம் ஏற்படுத்தும் என்ற நம்பிக்கை இல்லை.

எனவே- சர்வதேச அழுத்தத்தை பிரயோகிக்க வேண்டியுள்ளது. அடுத்தது ஆக்கிரமிப்புக்கு எதிராக தற்காப்பு நடவடிக் கைகளை அதிகரிக்க வேண்டியுள்ளது.

இதன் பொருட்டே தற்காப்பு அணி களைப் பலப்படுத்தவும், நவீன கருவிகள் மூலம் அவற்றை ஆயுதபாணிகளாக மாற்ற வும் வேண்டிய தேவை அதிகரித்துள்ளது. இதன்மூலமே எமது மண்ணும் மக்களும் பாதுகாக்கப்பட்டு, விடுதலையும், நிரந்தர சமாதானமும் நிலைநாட்டப்படும்.

**கேள்வி:- 5 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் அவர்களின் அன்றாட அடிப்படைத் தேவை களைப் பூர்த்தி செய்யக்கூடிய நிலையில் விடுதலைப் புலிகள் உள்ளனரா?**

திலகர்:- பெரும்பாலான நிவாரண, புனர்வாழ்வுச் சேவை களை விடுதலைப் புலிகளே செய் கிறார்கள் என்பதே உண்மை. ஆயினும் ஏனைய சர்வதேச நிறுவனங் களது கட்டற்ற செயற்பாடுகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

சிறீலங்கா அரசாங்கம் சர்வதேச நிறுவனங்களுக்கு பல்வேறு கட்டுப் பாடுகளை விதித்து அகதிகளின் நிலையை மோசமாக்க நினைக் கிறது.

**கேள்வி:- யாழ் குடாநாட்டில் இருந்து விடுதலைப் புலிகளால் மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டதாகக் கூறப்படுகிறதே?**

திலகர்:- எமது மக்கள் இராணுவ ஆக்கிரமிப்பின் இராணுவ, அரசியல் பொருளா தார விளைவுகளை நன்கு உணர்ந்தே இருந்தனர். ஆயினும் அவர்களுக்கு, எந்த நேரத்தில் எப்படியாக வெளியேற வேண்டும் என்ற ஆலோசனைகளும், அதனை நடை முறைப்படுத்தத் தேவையான உதவிகளும் வழங்கப்பட்டது.

-நன்றி-அவுஸ்திரேலியா'ரேடியோதொன்'



-திலகர். இப்போது பேச்சு இல்லை.

## இதுவரை

அல்பேர்ட்- ருத்மேரி தம்பதியரில் அல்பேர்ட் வசதியானவர். ஆனால் ருத்மேரியைவிட வயதானவர். அவர்களுக்கு ஒரே ஒரு பெண் குழந்தை இருந்தது. ருத்மேரியின் இளமை வேகம் கண்டு அல்பேர்ட் முதலில் பயந்தார். அவளை தன்னால் சமாளிக்க முடியுமோ என்று நினைத்தார். பயம் பின்னர் சந்தேகமானது. சந்தேகம் வளரத் தொடங்க, அல்பேர்ட் மிருகமானார். ருத்மேரியை சித்திரவதை செய்தார். வதை தாங்காத ருத்மேரி அல்பேர்ட்டை கொல்ல முடிவு செய்கிறாள். ஹென்றி என்பவனை காதலிப்பதாக நடித்து தனது கொலைத்திட்டத்தை அவன் மூலம் முடிக்க திட்டமிடுகிறாள்.

ஹென்றி பயந்தவன். ஆனாலும் ருத்மேரியில் ஆசை உள்ளவன். அதனால் திட்டத்துக்கு பயத்தோடு சம்மதிக்கிறான்.

## இனி..

# ஒரே ஒரு கொலை (3)

தருவது—ரசிகன்

### ➡ நான் ஹென்றி பேசுகிறேன்

ஏதோ ஒரு ஆசையில் உடன்பட்டு விட்டேனே தவிர, கொலை என்று நினைத்தாலே என் குடல்வரை நடுக்கம் பரவுவதை தடுக்க முடியவில்லை.

ஆனாலும் வேறு வழியில்லை. இனி மறுத்தால் ருத்மேரி விடப்போவதில்லை. அவளை மறக்கவும் என் மனம் இடம்தரப் போவதில்லை.

கொலை செய்யவும் வேண்டும். மாட்டிக்கொள்ளவும் கூடாது. மாட்டிக் கொண்டால், கொலைசெய்ய நான் உடன் பட்டதின் காரணமே இல்லாமல் போய் விடும்.

எனவே- யோசித்து, சிகரெட் புகைத்து யோசித்து அழகாக திட்டம் தீட்டினேன்.

எப்போது கொலை செய்ய வேண்டும்? மார்ச்19.

ஓ.கே. அப்படியானால் மார்ச் 19இல் கொலை நடக்கும் இடத்தில் நான் இருக்கக்கூடாது.

நான் இல்லாமல் எப்படி கொலை நடக்கும் என்று நினைப்பீர்கள்?

அதாவது, கொலை நடக்கும் நேரத்தில் நான் வேறு ஒரு இடத்தில் இருந்தது போல தடயம், சாட்சி என்று பல ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

மார்ச் 19ம் திகதி பிரபல ஹோட்டல் ஒன்றில் ரூம் எடுத்துக் கொண்டேன். என் முழுப்பெயர், முகவரி எல்லாம் கொடுத்தேன்.

இரவு உணவை என் அறைக்கே தருவித்துக் கொண்டேன். அப்போது தானே நான் இரவு தங்கியிருந்தேன் என்பதற்கு ரூம் சர்வீஸ் பையன் துடிப்பாக சாட்சி சொல்ல முடியும்.

உணவை சாப்பிட்டுவிட்டு, மீண்டும் பையனை அழைத்து 'பியர்' ஓடர் செய்தேன்.

அவனுக்கு 'குட்நைட்' சொல்லிவிட்டு கதவை மூடி, மூடும்போது, 'தொந்தரவு செய்ய வேண்டாம்' என்ற அறிவிப்பு பலகையை தொங்கவிட்டு, கட்டிலில் விழுந்தேன். மெத்தென்ற கட்டில். ருத்மேரியை நினைவூட்டியது. அவள் உடம்பும் இப்படித்தான்.

இரவு 12 மணி. எழுந்தேன். ஜன்னலுக்கு வெளியே மழை பெய்தது. எதிர்பார்த்ததுதான். இப்போது மழை சீசன். மழை கோட்டை எடுத்து அணிந்து கொண்டேன். குளோரபோம், நாலு அடி நைலோன்கயிறு, ஒரு சின்னக் கத்தி, கையுறைகள் என்று கொலைக்கு தேவையான உபகரணங்களை ஒரு சிறிய தோல்பையில் வைத்திருந்தேன்.

தோல்பையை எடுத்துக்கொண்டு அறைக்கதவை மெல்லத் திறந்து எட்டிப் பார்த்தேன். வெளியே யாரும் இல்லை. எல்லோரும் நன்றாக தூங்கிப் போயிருப்பார்கள்.

ஹோட்டலின் பின் கதவு எங்கே இருக்கிறது என்று முன்கூட்டியே அறிந்து வைத்திருந்தேன்.

அவ்வழியாக நழுவி வெளியேறி, ருத்மேரி வீட்டுக்கு கால் நடையாகவே சென்றேன். 4 மைல் தூர நடை.

### ➡ நான் ருத்மேரி பேசுகிறேன்

எங்கே வராமல் போய்விடுவானோ என்று நினைத்தேன். அனால் ஹென்றி நல்லவன். ஏமாற்றவில்லை. வந்து விட்டான்.

அல்பேர்ட் நன்றாக குடித்துவிட்டு, அதற்கு முன்னர் வழமைபோல என் மார்பை தன் கைகளால் திருகி, என் வலியை என் கண்களில் கண்டு ரசித்து விட்டு தூங்கிப் போய்விட்டார்.

ஹென்றியை மாடியில் ஒரு அறையில் தங்கவைத்தேன்.

"அதிகாலை 2 மணிக்குப் பின்னர் தான் அல்பேர்ட் சாவதற்கு நல்ல நேரம். அதுவரை ஓய்வு எடுத்துக்கொள்" என்றேன்.

பின்புறமாக வந்து என்னை தழுவிக் கொண்டான். கைகளை முன்புறமெங்கும் படரவிட்டான். ரசிக்கும் மனநிலையில் நான் இருக்கவில்லை. எனினும் அவனை திருப் திப்படுத்தவும் வேண்டுமே. அனுமதித்தேன். அவசரப்பட்டான்.

### ➡ ஹென்றி பேசுகிறேன்

என் உடல் பயத்தால் நடுங்காமலிருக்க ருத்மேரியின் உடம்பு உபயோகமாக இருந்தது. அந்த உடலை தொடும் போதெல்லாம் என் உடம்பு முழுக்க மின்சாரம் பாய்வது போன்று இருக்கிறது.

அவள் போய்விட்டாள். நான் கட்டிலில் கிடந்தேன். கண்களை மூடியிருந்தேனே தவிர தூங்கவில்லை. தூக்கம் எப்படி வரும்.

"ஹென்றி. வேண்டாம். கொலை வேண்டாம். திட்டத்தை மாற்றிவிட்டேன். முடிவை பரிசீலனை செய்துவிட்டேன்" என்று ருத்மேரி சொல்ல மாட்டாளா? சொன்னால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டேன்.

ருத்மேரி மீண்டும் திரும்பிவந்தபோது அதிகாலை 2 மணி. நான் கண்களை இறுக மூடிக்கொண்டு தூங்குவது போல நடித்தேன். 'தூங்கட்டுமேன்' என்று திரும்பிச் சென்றுவிட்டால் நன்றாக இருக்குமே.

உலுக்கினாள். "ஹென்றி" என்றாள். திடுக்கிட்டு விழிப்பதுபோல கண்களைத் திறந்தேன்.

"நேரமாகிவிட்டது. எழுந்திரு. வா"

### ➡ ருத்மேரி பேசுகிறேன்

அல்பேர்ட் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தார். பூனைபோல நடந்து கட்டிலை நெருங்கிவிட்டான் ஹென்றி.

நான் அறைக்கதவின் அருகே நின்று பார்த்துக் கொண்டிருந்தேன். என் இதயம் துடிக்கும் ஓசை என் செவியில் கேட்டது.

ஹென்றியின் கையில் நைலோன் கயிறு இருந்தது. அல்பேர்ட் குறட்டைவிட்டுக் கொண்டிருந்தார்.

அவரது தலைமாட்டில் நின்றுகொண்டு திரும்பி என்னைப் பார்த்தான ஹென்றி. பாவி, திரும்பி வந்துவிடுவான் போல் இருந்தது.

'கழுத்திலே போடு' என்று சைகை காட்டினேன்.

தயங்கினான். அய்யோ.. அப்போது அல்பேர்ட் அசைந்தார். 'காரியம் கெட்டது போ' என்று நினைத்தேன். நல்ல வேளை கண்களை திறக்கவில்லை. இடது புறமாக திரும்பி ஒருக்களித்துப் படுத்துக்கொண்டார்.

அப்போதுதான் ஹென்றி அந்தக் காரியத்தைக் செய்தான்.

அல்பேர்ட்டின் தலையை தொட்டு ஒரு கையால் தூக்கிக் கொண்டு நைலோன் கயிற்றை மறுகரத்தால் கழுத்தைச் சுற்றிப் போட்டான். முட்டாள்! தலை உயர்த்தப் பட்டதால் அல்பேர்ட் விழித்துக் கொண்டார்.

ஹென்றி தனது இருகைகளாலும் நைலோன் கயிற்றின் இரு முனைகளிலும் பிடித்து இறுக்கத் தொடங்க,

விபரீதத்தை உணர்ந்துகொண்ட அல் பேர்ட் தனது பலம் முழுவதையும் திரட்டி, ஹென்றியின் கழுத்தை வளைத்துப் பிடித்துக் கொண்டார்.

"மேரி.. ஓடிவா. இவன் எ.. என்னை கொல்லப்போகிறான்" என்று கத்தினான் முட்டாள் ஹென்றி.

முழுக்க நனைந்தபின் முக்காடு எதற்கு? அல்பேர்ட் தப்பிவிட்டால் நான் தப்பவே முடியாது.

சுற்றும் முற்றும் தேடினேன். அந்த இரும்புக் குழாய் கண்ணில்பட்டது.

ஒரு நிமிடம் தாமதித்தால்கூட ஹென்றி அல்பேர்ட்டால் கொல்லப்பட்டுவிடுவான். அடுத்தது நான்தான்.

இரும்புக் குழாயை எடுத்துக் கொண்டு பாய்ந்தேன்.

ஒரேபோடு. அல்பேர்ட்டின் உச்சந் தலை பிளந்து, இரத்தம் குபு குபு வென்று பாய்ந்தது.

ஒரு முனகலோடு அல்பேர்ட் மிக நிச்சயமாய் செத்துப் போனார்.

ஹென்றி வியர்த்துப் போயிருந்தான். என்னிடம் இருந்த நகைகளையெல்லாம் ஹென்றியிடம் கொடுத்தேன்.

"ஏன்?" என்றான். "கொள்ளைக்காக நடந்த கொலை என்று நிரூபிக்க" என்றேன். அலுமாரிகளை அலங்கோலமாக கலைத்துப் போட்டேன். இரும்புக் குழாயை இரத்தக் கறைபோக கழுவி, கீழே உள்ள பழைய சாமான்கள் போடும் அறையில் போட்டேன்.

ஹென்றியை அனுப்பிட்டு, ஓவென்று கதறினேன். அயலவர்கள் வர, அழகாக நடித்தேன். ஓவென்று கதறி, என் கணவரை யாரோ கொன்றுவிட்டதாகச் சொல்லிவிட்டு, அறைப்பக்கம் காட்டிவிட்டு, போலியாக மயங்கிப்போனேன்.

### ➡ ஆர்தர் கேரி பேசுகிறேன்

அல்பேர்ட் கொலையை விசாரிக்கும் பொறுப்பை என்னிடம்தான் ஒப்படைத் தார்கள்.

ருத்மேரியிடம் முதலில் சம்பிரதாயமாக சில கேள்விகள் கேட்டேன். நிறைய அழுதாள். அதுதான் எனக்குள் முதல் பொறியை விதைத்தது.

அழுகையில் பொய் இருப்பதாக ஒரு பட்சி எனக்குள் சொன்னது.

அல்பேர்ட் கொலைசெய்யப்பட்ட அறையில் தீவிரமாக அங்குலம் அங்குலமாக தேடினேன்.

எத்தனை திறமையாக திட்டமிட்டு குற்றவாளிகள் செயற்பட்டாலும், அவர்களை அறியாமல் ஏதாவது ஒரு தடயம் விட்டுச் சென்றிருப்பார்கள். என் அனுபவம் கற்றுத் தந்த உண்மை.

எதிர்பார்த்தது பொய்க்கவில்லை. அல்பேர்ட்டின் கட்டிலின் பின்புறமாக 'ரை பின்' ஒன்று கிடந்தது. (கழுத்தில் அணியும் ரையை பிணைக்கும் ஊசி) அந்த ரை பின்னில் J.G. என்ற எழுத்து இருந்தது.

J.G. என்பது அல்பேர்ட்டைக் குறிக்காது. ஆகவே அந்த 'ரை பின்' மூன்றாம் ஆளுக்கு சொந்தமானது.

ருத்மேரியின் தொலைபேசி முகவரி புத்தகத்தை எடுத்து நோட்டமிட்டேன். அந்தப் பெயர் கண்ணில்பட்டது.

ஜுட்கிறே ஹென்றி.

அவன்தான். அவனேதான் என்றது பட்சி. ருத்மேரியை கவனிக்கச் சொல்லி பொலிஸ் போட்டுவிட்டு, ஹென்றியின் முகவரிக்கு சென்றேன்.

பொலிஸ் என்றதும் பயந்தான். அவன் வீட்டை சோதனையிட்டபோது கட்டிலின் கீழ் மறைத்துக்கிடந்த நகைகள் மாட்டின.

நாலு தட்டு தட்ட முன்னரே சகல உண்மைகளையும் ஒப்புக்கொண்டான்.

பின்னர் ருத்மேரியை விசாரித்தேன்.

"ஹென்றிதான் மோசம் செய்துவிட்டான். எனக்கு ஒன்றுமே தெரியாது" என்றாள்.

வீட்டை சோதனையிட்டபோது அல் பேர்ட்டை மண்டையில் போட்ட இரும்புக் குழாய் மாட்டியது. அவசரத்தில் கழுவப் பட்டதால் இரத்தக்கறை ஒரு முனையில் தங்கிருந்தது.

விசாரணையை சுத்தமாக முடித்து நீதி மன்றத்திடம் வழக்கை ஒப்படைத்து விட்டேன்.

### முடிவு

நீதிமன்றத்தில் ஹென்றியும், ருத்மேரியும் ஒருவரை ஒருவர் குற்றம்சாட்டினார்கள்.

இறுதியில் நீதிபதி தீர்ப்புச் சொன்னார். 1928 ஜனவரி 12ம் திகதி இரவு 11மணிக்கு ருத்மேரிக்கும், ஜுட் கிறே ஹென்றிக்கும் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. ❑



வழக்கு விசாரணையின் போது ருத்மேரி

## உண்மைக் கதை



ஹென்றி, நியுயோர்க்கில் வைத்து கைது செய்யப்பட்ட போது.

# குஷ்புவின் மௌனம் கலைந்தது

## முரசு தரும் ஸ்பெஷல் ரிப்போர்ட்

நடிகர் பிரபுவை இரகசியமாக திருமணம் செய்து கொண்டதாக முதன் முதலில் அறிவித்தவர் குஷ்பு. ஆனால் இதுவரை பிரபுவோ, அவரது குடும்பத்தினரோ குஷ்பு சொன்னதை ஒப்புக்கொள்ளவில்லை.

இதற்கிடையே கடந்தவருட இறுதியில் தமது திருமணம் முறிந்துவிட்டதாக குஷ்பு பகிரங்கமாக பம்பாய் பத்திரிகைக்கு பேட்டி கொடுத்திருந்தார்.

அதனையடுத்து 'முறைமாமன்' படத்தின் இயக்குநர் சி.சுந்தரை குஷ்பு காதலிப்பதாக தகவல்கள் வெளியாகின. முரசும் அந்தச் செய்தியை வெளியிட்டிருந்தது.

இயக்குநர் சி.சுந்தர் முதலில் அதனை மறுத்திருந்தார். குஷ்பு மௌனமாக இருந்தார்.

சமீபத்தில் இந்தியாவின் பிரபல பத்திரிகை நிறுவனமான இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை நிறுவன சஞ்சிகை ஒன்றுக்கு சி.சுந்தரும், குஷ்புவும் ஒன்று சேர்ந்து பேட்டியளித்துள்ளனர்.

"குஷ்புவை நான் திருமணம் செய்து கொள்ளப்போவது உறுதி. ஆனால் அதனால்தான் உண்மையைச் சொல்ல தீர்மானித்தோம். இனிமேல் யாரும் தவறான தகவல்களை எழுதமாட்டார்கள் அல்லவா.

உதவி இயக்குநராக இருந்து படிப் படியாக கஷ்டப்பட்டு முன்னேறியவன் நான். முதல் படத்தை இயக்கியபோது ஸ்கூட்டரில்தான் வந்தேன். அதன்பிறகு தான் கார் வாங்கினேன். அதுவும் புதிய கார் அல்ல. ஆனால் அந்தக் காரை குஷ்புதான் வாங்கித்தந்தார் என்று சில பத்திரிகைகள் எழுதின. அது உண்மையல்ல. யாருடைய தயவிலும் நான் வாழ விரும்புவன் அல்ல.

என்னுடைய சம்பாத்தியத்தில் வீடு, கார் வாங்கி பொருளாதாரரீதியில் வளர்ச்சி யடைந்த பின்னரே திருமணம் என்று முடிவு கட்டினேன். என் எண்ணத்தை குஷ்புவிடமும் சொன்னேன். அவரும் சம்மதித்தார்.

**"மூன்று வருடங்கள் குஷ்பு காத் திருப்பாரா?"**



இயக்குநர் சுந்தரோடு குஷ்பு-நிஜமான கிசு கிசு.

இப்போது நான் பிஸியாக இருப்பதால் இரண்டு மூன்று வருடங்கள் திருமணம் தள்ளிப் போகலாம்." என்று தெரிவித்துள்ளார் இயக்குநர் சி.சுந்தர்.

'உள்ளத்தை அள்ளித்தா' படம் நன்றாக ஓடுவதால் அதன் இயக்குநரான வி.சுந்தர் பிஸியான இயக்குநராகியுள்ளார். அதனால் மார்க்கெட்டை நிலையாக்கிவிட்டு குஷ்புவை கைபிடிப்பாராம் சுந்தர்.

இயக்குநர் சுந்தரிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் சொன்ன பதில்கள்:

**"உங்கள் காதல் விஷயத்தை மறைத்து விட்டு இப்போது திடீரென்று சொல்கிறீர்களே ஏன்?"**

சுந்தர்:- எங்கள் திருமணத்தைப் பற்றி இதுவரை பல பத்திரிகைகள் உண்மைக்கு மாறான செய்திகளை வெளியிட்டன. அவரையே கேளுங்களேன் என்று குஷ்புவை நோக்கி கையைக் காண்பித்தார் சுந்தர்.

"அவருக்காக எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் காத்திருப்பேன். அவர் தான் என் கணவர்" என்றார் குஷ்பு.

விஜயகாந்தின் வீட்டுக்கு எதிரேயுள்ள வீட்டில்தான் குஷ்பு குடியேறியுள்ளார். கடந்தமாதம் இந்த வீட்டில் சுந்தரும், குஷ்புவும் பால் காய்ச்சி குடியேறினார்கள். இந்த வீட்டுக்கு அருகில்தான் இயக்குநர் ஆர்.கே.செல்வமணியின் வீடும் இருக்கிறது.

எப்படியோ குஷ்பு-சுந்தர் காதல் விவகாரம் வெளிவந்துவிட்டது இருவருமே விஷயத்தை ஒப்புக் கொண்டு விட்டார்கள்.

**பிரபல பாடகரும், நடன மன்னனுமான மைக்கேல் ஜாக்சன்—விசா தம்பதியினர் பிரிய முடிவு செய்துள்ளமை பழைய செய்தி.**

**மனமுடைந்த மைக்கேல் ஜாக்சன் ஹொலிவூட் நடிகை எலிசபெத் ரெய்லரிடம் மண்டியிட்டிருப்பது புதிய செய்தி.**

# "எலிசபெத் என்னை ஆதரி"

## மண்டியிட்டார் மைக்கேல் ஜாக்சன்



ஜாக்சனும் எலிஸபெத் ரெய்லரும் பல ஆண்டுகளாக நண்பர்களாகவே இருந்து வருகின்றனர். 37 வயதான ஜாக்சன்-விசாவை விட்டுப் பிரிவதெனத் தீர்மானித்ததும் எலிஸபெத் டெய்லரை அடிக்கடி தொலை பேசி மூலம் தொடர்பு கொண்டு தன்னை மணந்து தனக்கு ஆறுதல் தரும்படி மிக மன்றாட்டமாகக் கேட்டு அழுதாராம்.


"நீங்கள் தான் என்னை முழுமையாக உணர்ந்தவர். நாம் இருவரும் சிறந்த காதல் ஜோடிகளாக மகிழ்ச்சியாக வாழலாம் என்று மனப்பூர்வமாக நம்புகிறேன்." என்று தொலைபேசியில் ஜாக்சன் புலம்பினாராம்.

ஜாக்சனின் வேண்டுகோள் டெய்லரைப் பொறுத்தமட்டில் பேரதிர்ச்சியாகவே முதலில் தென்பட்டதாம். இருப்பினும் அவரின் திருமணக் கோரிக்கையை எலிசபெத் ஏற்றுக் கொள்ளவில்லை. மனைவி விசாவுக்கும் ஜாக்சனுக்கும் ஏற்பட்ட கருத்து வேற்றுமையை அடுத்து ஏற்பட்ட குழப்ப நிலையில் ஜாக்சன் தடுமாறிப் போயிருக்கிறார் என்றே எலிசபெத் ரெய்லர் நினைக்கிறார். ஆகவே, ஜாக்சனுக்கு மிகக் கவனமாக ஆறுதல் சொன்னாராம்.

"மைக்கேல்! நான் உன்னை நேசிக்கிறேன்... ஆனால் என்மகனைப் போலத் தான் உன்னைக்கருதி அன்பு பாராட்டுகிறேன். அதனால் உன்னை என் கணவன் என்ற நிலையில் நினைத்துக் கூடப்பார்க்க முடியாது. என் அன்பு மகனே! கொஞ்சம் அமைதியாக இரு. எல்லாம் சரியாகும்" என்று கூறினாராம். தொடர்ந்து "மீண்டும் ஒரு திருமணம் உனக்கு தற்போது வேண்டாம். இப்பொழுது உன்னை நன்றாகக் கவனித்துக்கொள்." என்றாராம் எலிசபெத் ரெய்லர்.


www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com




# தகவல் பெட்டி

## தின்னத்தின்ன ஆசை

அமெரிக்காவைச் சேர்ந்த மிஸ்டர் பவுல் ஆரம்பத்தில் சாதாரண உடலோடு, சாதாரண எடையோடுதான் இருந்தார். மதுபான விடுதி ஒன்றை நடத்திவந்தார். அப்போதுதான் ஒரு விபத்து நடந்தது. மருத்துவர்கள் ஓய்வெடுக்கச் சொன்னார்கள். வந்தது வம்பு. ஓய்வில் இருந்த பவுல் மூக்கு முட்ட சாப்பிடத் தொடங்கினார்; காலையில் மட்டும் 6 அடி நீளமான சான்ட்விச்' சாப்பிடுவார். ஒரே தள்ளு உள்ளே போய்விடும். இந்தப் பிடி பிடித்து சரியாக 18 மாதத்தில் பவுல் புசுபுசுவென்று ஊதிவிட்டார். ஆரம்பத்தில் 275 இறாத்தால் இருந்த பவுல், 525 இறாத்தல் எடையைத் தொட்டுவிட்டார். வயிற்று சுற்றளவு மட்டும் 82 அங்குலம். வயது 39. இவரது உடல் பெருத்ததைப் பார்த்துவிட்டு காதலி லொல்லி நைசாக கழன்றுவிட்டார். 130 இறாத்தல் எடையுள்ள லொல்லி 525 இறாத்தல் காதலனைக் கண்டு பயந்தது நியாயம்தானே! இங்கே படத்தில் மிஸ்டர் பவுலோடு மோதிக்கொண்டு போஸ் கொடுப்பது மொடல் அழகி சோனியா கல் டொ்னி. மிஸ்டர் பவுலின் உயரம் 6 அடி 10 அங்குலம். மொடல் அழகியின் உயரம் 5அடி 6அங்குலம். இடையளவு 24 அங்குலம். எடை, 125 இறாத்தல். ஏதோ ஒரு துணிச்சலோடு பவுலை சமாளிக்க நினைக்கிறாராக்கும். பாவம் தாங்க மாட்டார். அதாவது பவுல் மூச்சுவிட்டாலே போதும் அழகி தூக்கிவீசப்படும் அபாயம் இருக்கிறது.





## ஒத்திவைத்த பிரசவம்
### இடைவேளை 7 நாள்

கருப்பையில், இருந்தது இரண்டு குழந்தைகள். இரு குழந்தைகளும் ஒரே நேரத்தில் பிறந்திருக்க வேண்டும். ஆனால் மருத்துவர்கள் தமது திறமையால் ஒரு குழந்தையை மட்டும் பிறக்க வைத்தனர். மற்றொரு குழந்தை பிறப்பதை ஒருவாரம் தள்ளி வைத்துவிட்டனர். இவ்வாறு குழந்தை பிறப்பதை ஒரு வாரம் தள்ளி வைத்த சம்பவம் உலகில் இதுவே முதல் தடவையாகும். அதனால் மருத்துவ சாதனையாக புகழ் பெற்று விட்டது.

குழந்தை பிறப்பை தள்ளி வைத்தது ஏன்? முழு கர்ப்ப காலம் முடிவதற்கிடையில் முதல் குழந்தை பிறந்துவிட்டது. அதன் எடை ரொம்பக் குறைவு. 652.05 கிராம் மட்டும். ஒரு அடி நீளம் மட்டுமே இருந்தது. அதேபோல மற்றக் குழந்தையும் பிறந்தால் இறந்து விடும் என்பதால் தான் மறு குழந்தை பிறப்பதை ஒத்திவைத்தனர் மருத்துவர்கள்.

## "எனக்காக பிறந்தவள்"



உயரத்தில் குறைவாக இருந்தாலும் உள்ளத்தில் கல்யாண ஆர்வல ஆசையோடு காத்திருந்தார் சதீஷ். வயது 30. உயரம் மூன்றடி பதினைந்து அங்குலம். சமீபத்தில்தான் அவர் தனது ராஜ குமாரியைக் கண்டு கொண்டார். பெயர் சியாமளா. வயது 21. உயரம் 4 அடி. இருவரும் மனம்விட்டுப் பேசினார்கள். மணம் முடிக்க சம்மதித்தார்கள். ஜாம் ஜாம் என்று கல்யாணம் நடந்து முடிந்திருக்கிறது. 30 வயதுவரை காத்திருந்தது வீண் போகவில்லை. கடவுள் எனக்கேற்ற பெண்ணைக் காட்டியிருக்கிறார். சியாமளா கெட்டிக்காரிதான் என்கிறார் சதீஷ். மணம் முடித்து மூன்றாவது நாள் சதீஷ் சொன்ன அபிப்பிராயம் அது. அதாகப்பட்டது, சியாமளா சொக்குப்பொடி போட்டுவிட்டார்.



## இரு துருவமான குதிரைகள்

உயர்வு-தாழ்வு. இரண்டுக்கும் ஒரு உதாரணத்தையே படத்தில் காண்கிறீர்கள். உலகில் மிக உயரமான குதிரையையும், உலகில் மிக குள்ளமான குதிரையையும் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். உயரமான குதிரையின் பெயர் புருக் பிங்க் அல்பியன். குள்ளக் குதிரையின் பெயர் 'சிகோ'. இந்த அதிசயக் குதிரைகள் இரண்டும் தென்மேற்கு இலண்டனில் உள்ள ஒல்காட் என்ற இடத்தில் உள்ளன.

## செல்லம் என்றால் செல்லம்

செல்லக் குழந்தைகள் காலை எழுந்தவுடன் தாய்ப்பாலை அருந்துவதுண்டு. அல்லது புட்டியில் பால் அருந்துவதுண்டு. படத்தில் இருப்பவை சிம்பன்சிக் குரங்குக் குட்டிகள். ஆபிரிக்கா கண்டத்தில் உள்ள கொங்கோ நாட்டில் உள்ள சரணாலயம் ஒன்றில் செல்லமாக வளர்கின்றன. காலை ஆகாரமாக புட்டியில் பால் சாப்பிடுகின்றன. ஹெல்ப் (HELP) என்னும் சர்வதேச நிறுவனம் இந்த சிம்பன்சிக் குட்டிகளை பராமரித்துவருகிறது. இவை நன்றாக வளர்ந்ததும் காட்டிற்கு அனுப்பிவிடுவார்கள். அங்கு ஜாலியாகச் சுற்றித் திரியலாம்.



## மரத்தில் ஒரு பிள்ளையார்

கடந்த ஆண்டு பிள்ளையார் பால் குடிக்கிறார் என்ற செய்தி பரபரப்பாக அடிபட்டது தெரியுமல்லவா? இப்போது மீண்டும் ஒரு பிள்ளையார் விவகாரம். இந்தியாவில் ஜம் ஷேட்பூர் என்னும் இடத்தில் ஒரு பப்பாளி மரம். அந்தப் பப்பாளி மரத்தில் தோன்றியுள்ள பப்பாளிக்காய் ஒன்று அசப்பில் பிள்ளையார் போலவே இருக்கிறது. விஷயம் அறிந்து மக்கள் கூட்டம் திரளத் தொடங்கிவிட்டது. பப்பாளி வளர்த்தவர் நல்ல 'பப்ளி சிட்டி' பெற்றுவிட்டார்.





படிப்பகம்

www.padippakam.com

# பம்பாய் உலக விநோத நடிகைகள்
# நடிகைகளின் பலவீனங்கள்

### ஷில்பா ஷெட்டி

'பாஸிகர்' இந்திப் படத்தின் பின்னர் பரபரப்பாகப் பேசப்பட்டவர். தமிழில் மிஸ்டர் ரோமியோ படத்திலும் நடித்துக் கொண்டிருக்கிறார்.
இந்தியில் படவாய்ப்புக்களை நிறைய எதிர்பார்க்கிறார். அதிஷ்டத்தை நம்புகிறார்.
பலம்- அழகான உடலமைப்பு. (சந்தேகம் இருந்தால் அருகே கவனிக்க)
கோவிந்தா, அக்ஷய்குமார், சல்மான்கான் போன்ற நடிகர்களோடு நெருக்கம். அதனால் அவர்களது சிபாரிசுகள்.
பலவீனம்- ஏனைய நடிகைகளின் நடிப்பை கொப்பியடிக்க நினைப்பது.

### ஸ்ரீ தேவி

தன்னுடைய அழகாலும், இளமையாலும் தமிழில் கலக்கிவிட்டு இந்திக்குப் போனவர். இந்தியில் ஸ்ரீதேவியை பெண் அமிதாப் பச்சன் என்று அழைத்தார்கள். அந்தளவுக்கு பேர் செல்வாக்கு. மாதுரி டிக்ஷித் போன்றோரின் வருகையும், வயதும் தற்போது இவரது மார்க்கெட்டை பாதித்துள்ளது. தமிழில் தேவராகம் படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார்.
பலம்- உணர்ச்சிகரமான நடிப்பில் அசத்துவார். நடனம், நகைச்சுவை போன்ற அம்சங்களிலும் வெளுத்து வாங்குவார்.
பலவீனம்- தான் மட்டுமே மிகச் சிறந்த நடிகை என்ற எண்ணம்.

### ஊர்மிளா

'ரங்கீலா' படத்தின் பின்னர் இந்திப்பட ரசிகர்களது கனவுகளில் அடிக்கடி தோன்றுபவர். தமிழ்ப் பட ரசிகர்களையும் தொல்லைப் படுத்தும் திட்டத்தோடு 'இந்தியன்' படத்தில் நடித்துவருகிறார்.
பலம்:- அளவுக்கு அதிகமான கவர்ச்சி. இயக்குநர் ராம் கோபால் வர்மா, ஜாக்கி ஷெரப் போன்றோரின் அந்தரங்க நட்பு.
பலவீனம்:- இருப்பதையெல்லாம் துரிதகதியில் துல்லியமாக்குவது.

### பூஜாபட்

இந்திப் படவுலக துணிச்சல் நடிகை. தமிழில் கல்லூரி வாசல் படத்தில் கவர்ச்சி தரிசனம்.
பலம்:- எதற்கும் துணிந்தவர்.
பலவீனம்- அதிகமான ஆண் நண்பர்கள்.



ஷில்பா ஷெட்டி

## இசையமைக்கும் சிலம்பரசன்

நடிகரும், இயக்குநருமான டி.ராஜேந்தர் தனது மகன் சிலம்பரசனை வைத்து பல படங்களை இயக்கியுள்ளார்.

டி.ராஜேந்தர் புதிதாக இயக்கும் படமான 'இளம்காதலர்கள்' படத்தில் சிலம்பரசன் இணை இசையமைப்பாளராக அறிமுகமாகிறார். படத்தில் இன்னொரு இசையமைப்பாளர் டி.ராஜேந்தர்.

இளம் காதலர்கள் படத்தில் வடிவேலுவும் நடிக்கிறார். ஒரு பாடலை சொந்தக்குரலிலும் பாடப்போகிறார்.

"நோ பிராப்ளம், நோ பிராப்ளம் கம்பனி தாறேன் வாறீங்களா?" என்றொரு பாடலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. பாடல்களையும் டி.ராஜேந்தர் தான் எழுதியுள்ளார்.

## • படத்தின் பெயர்

'ஆசை', 'வான்மதி, பட
ஹீரோக்கள் பட்டியலில்
அஜித்குமார்.

அஜித்குமார் புதிதாக ந
அறிமுகம்.' படத்தில் இ
அறிமுகமாகிறார்கள். இருவ
மாணவிகள். ஒருவர் பெய
வர்ஷா. இயக்குநரும் புதுமு
வெங்கடகிருஷ்ணா. இசை,

ஆனந்தராஜ், விஜயகுமா
ஆகியோரும் நடிக்கின்றனர்



சல்மான்கான்-கரிஷ்மா கபூர் படம் ஜீத்

## •• கம

நாட்டாமை, முத்
படங்களை இயக்கியவர்
இயக்கத்தில் நடிக்க
ருக்கிறார். புல்லரித்துப்
கமலுக்கு ஏற்ற கதை
கொண்டிருக்கிறார்.

## சுடச்

'குருதிப்புனல்' படத்
முத்தக் காட்சி பரபரப்பா
இயக்குநர்கள் பலர் து
அதனால் தமிழ் படங்கள
இச்' தாராளமாகப் போ
'பிரியம்' படத்தில்
கதாநாயகி மந்த்ராவும் முத்
சுடச்சுடப் படமாக்கி இரு

## மினி

* 'தொட்டாச்சிணு
இல்லை. அவர் ஒரே

* பார்த்திபன் இய
கதாநாயகியாக நடிக்

* சுப்பர் குட் பிலி
பெயரை 'தர்பார்' எ

* ஒளிப்பதிவாள
கதாநாயகியாக நடித்

* கமல், கார்த்தி
சொந்தப் படத்தில்

* 'குருதிப்புனல்'
ஸ்டோரி' என்ற படம்
மூலம் அறிமுகப்படு

* நீண்ட இடைவெ
மாதுரி டிக்ஷித் நடி

* மம்முட்டி ம
ஜோடியாக இந்திரா

* ஆர்.வி. இத
ஆகஸ்ட் 15' பட
இசையமைப்பதாக இ
இசையமைப்பதாகச்
வித்யாசாகர் இப்படத்

## காதோடு சொல்லுகிறோம்

* நடிக தம்பதியின் மகள் அரண்மனைக் கிளி நாயகனின் கம்பீரத்தில் மயங்கிப்போனாராம். காதல் காட்சிகளில் முரட்டுத்தனமாக 'மூவ்மெண்ட்' செய்கிறார். ஆனாலும் ஆள் மாணிக்கம்தான் என்கிறாராம் நடிகை. அந்த நடிகையின் பெயர் 'வ'வில் தொடங்கி 'தா'வில் முடியும். மூன்றெழுத்து நடிகை.

* மலையாள நாயகன் 'லால்' அந்த நடிகையின் அன்புக் கட்டளையை மீற முடியாமல் மாலை விருந்துக்கு சென்றாராம். சென்ற பின்னர்தான் வில்லங்கம் என்று தெரிந்து கொண்டாராம். எப்படியோ சமாளித்துக் கொண்டு தப்பிச் சென்று விட்டாராம். நடிகை யார் தெரியுமோ? புனலில் முத்தம் பொழிந்தவர்.

* 'ச'கவி நடிகையும் 'வி' இளம் நடிகரும் சென்னையில் நட்சத்திர விடுதி ஒன்றில் இருந்து ஒரே காரில் புறப்பட்டுப் போனார்களாம். நேரமோ இரவு பன்னிரெண்டுமணி. மோப்பம் பிடித்த நிருபர்கள் 'ச' நடிகையிடம் விசாரித்தார்களாம். 'அது அவர் அல்ல' என்று முழுப் பூசணியை சோற்றில் மறைத்தாராம் நடிகை.

* வினிதமான நடிகையிடம் பெரிய நடிகர்கள், சிறிய நடிகர்கள் என்ற பேதமெல்லாம் கிடையாதாம். எல்லோருக்கும் ஒரேவிதமான கவனிப்புத்தானாம். 'தாராளமனசு' என்று பாராட்டுகிறார்கள் பொடி நடிகர்கள்.



"ரவிவர்மன் எழுதாத கலையோ? ரதிதேவி- வடிவான சிலையோ?"

விஜய்-சங்கீதா படம் பூவே உனக்காக

## வந்தான் காளை - மலர்ந்த

படித்து பட்டம் பெற்ற பணக்காரப் பெண் நந்
நேரமானால் நீச்சல் குளத்தில் தோழிக
கும்மாளமிடுவது அவளது வாடிக்கை.
"அடியே நந்தினி, உன்னைக் கவரும் காதலன்
எப்படியிருக்க வேண்டும்? என்று கேட்டனர்
தோழிகள்
"வாட்டசாட்டமானவனாக, வசீகர முகம்
கொண்டவனாக செக்கச் சிவந்தவனாக இரு
வேண்டும். என்னை வாரியணைந்து நெஞ்சோடு
சேர்த்து இன்பக் கடலில் ஆழ்த்தும் காதல்
கற்றவனாகவும் இருக்க வேண்டும்" என்றாள் நந்
அப்போதுதான் அந்தக் கட்டிளங்காளை
அவன் லொறி ஓட்டும் இளைஞன். அவன் அழகி
நந்தினி.
இக்காட்சி இடம் பெற்றுள்ள படம், 'மன்னவ
யாக நடிப்பவர் சங்கவி. கட்டிளங்காளையாக
படப்பிடிப்பு வேகமாக நடந்து வருகிறது
ஊர்வசி, விஜயகுமார், கவுண்டமணி,
பொன்னம்பலம், சுமித்ரா ஆகியோரும்
நடிக்கின்றனர்.
சித்திரைப் புத்தாண்டுக்கு
திரையிடத் திட்ட
மிட்டுள்ளனர்



தெரியா
அளவெடுப்பது
* சொந்தப் பட
மாற்றத்தை ஏற்படுத்த
* ரஜினி தவிர
பேசுறாங்க. அவங்க
மீனா. நம்பலாமா?

## மறுபடி நதியா

அமெரிக்காவில் கண் நிறைந்த கணவரோடு வாழ்ந்துவருகிறார் நதியா. இடைக்கிடையே கைநிறையச் சம்பாதிக்கும் ஆசை. பிரபுவின் 100வது படமான ராஜகுமாரனில் நடிக்க பறந்து வந்தார் நதியா. படம் சரியாக ஓடவில்லை. அதனால் அமெரிக்காவுக்கு திரும்பி ஓடினார் நதியா.

இப்போது மீண்டும் நடிக்க வருகிறார் நதியா. 'மார்கழிப் பூவே' படத்திற்காக நதியாவை விரும்பி அழைத்துள்ளார் இயக்குநர் ஜாகீர். அழைப்பை ஏற்றுள்ளார் நதியா.

## படமாகும் நயினா சஹானி

இந்தியாவில் நயினா சஹானி என்ற பெண் அவரது கணவரால் கொல்லப்பட்டு துண்டு துண்டாக வெட்டப்பட்டு சமையல் அறையில் எரித்த சம்பவம் தெரியுமல்லவா?

அந்த சம்பவத்தை வைத்து தமிழ், மலையாளம், தெலுங்கு, இந்தி ஆகிய நான்கு மொழிகளில் ஒரு படம் தயாராகிறது.

படத்தின் பெயர் 'யங் டர்க்! விஜயசாந்திதான் கதாநாயகி. பொலிஸ் அதிகாரியாக நடிக்கிறார்.

சுரேஷ் கோபி கதாநாயகன். கதைப்படி நயினா சஹானியின் கணவராக நடிக்கிறார் சுரேஷ் கோபி. அவர் குற்றவாளி அல்ல என்பதை விஜயசாந்தி துப்புத்துலக்கிக் கண்டறிகிறாராம்.

## ✱ கத்தரி சாப்பிட்ட காட்சிகள் ✱

'லவ் பேர்ட்ஸ்' படம் எதிர்பார்த்தளவுக்கு வசூல்மாரி பொழியவில்லை என்பதால் பிரபு தேவாவுக்கு வருத்தம். அதைவிட இன்னொரு வருத்தம் சென்சார் மீது. பிரபு தேவாவும், நக்மாவும் வெகு ஈடுபாட்டோடு உதட்டோடு உதடு சேர முத்தமிட்ட தத்ரூபமான காட்சிகள் பலவற்றை சென்சாரின் கத்தரிகள் சாப்பிட்டுவிட்டனவாம்.

அந்த தத்ரூபமான காட்சிகள் மட்டும் தப்பியிருந்தால் ரசிகர்கள் திரும்பத் திரும்ப திரையரங்கை நோக்கிப் படையெடுத்திருப்பார்கள் என்கிறார் தயாரிப்பாளர்.

## ரஜினிக்கு பாராட்டு

எம்.ஜி.ஆருக்குப் பின்னர் இசையைப் பற்றித் தெரிந்த நடிகர்களில் ரஜினியும் ஒருவர். அப்படிப் பாராட்டி இருப்பவர்கள் யார் தெரியுமா? இசையமைப்பாளர்கள் ஏ.ஆர்.ரகுமானும், தேவாவும்தான்.

தன்னுடைய படப்பாடல் கம்போசிங், ரெக்கோடிங் இரண்டிலும் கூடவேயிருந்து ஆலோசனை சொல்வாராம் ரஜினி.

## நட்பால் பலன்

'அந்தி மந்தாரை'யில் நடித்த போது ஜெயசுதாவுக்கும் சங்கவிக்கும் நட்பு மலர்ந்தது. அதன் பலனாக தெலுங்குப் படவுலக தயாரிப்பாளர்கள் சிலரை சங்கவிக்கு தனியாக அறிமுகப்படுத்தினார் ஜெயசுதா. விளைவு: தெலுங்குப் படங்கள் சிலவற்றில் நடிக்கிறார் சங்கவி.



படிப்பகம்

www.padippakam.com

-'அறிமுகம்'-

...ங்கள் மூலமாக இளம் ... இடம்பிடித்துவிட்டார்

...க்கும் படத்தின் பெயர், ...ண்டு புதுமுகங்களும் ...ம் திரைப்படக் கல்லூரி ..., சவுஜன்யா, மற்றவர் ...ம்தான். அவரது பெயர் ...த்யாசாகர்.

..., சுக்ரன், சில்க்சுமிதா

...ம் ஓ.கே

..., பரம்பரை போன்ற ...எஸ். ரவிக்குமார். அவரது ...கமல் ஒப்புக்கொண்டி...பான கே.எஸ். ரவிக்குமார் ...ஒன்றை தயார்படுத்திக்

...கமல் கௌதமி ...பேசப்பட்டதால் ...துவிட்டார்கள். ...இனிமேல் 'இச். ...து. ...ருண்குமாரும், ...டும் காட்சியை ...கிறார்கள்.

**(முகப்பில்) பிரசாந்த்-சங்கவி** படம்-மன்னவா



சத்யராஜ்-சௌந்தர்யா படம் சேனாதிபதி

# சினி விசிட்

# பரமரகசியப் படப்பிடிப்பு

'ஆனந்தம்' படப்பிடிப்பு படுசுறுசுறுப்பாக நடந்துவருகிறது. காட்சிகள், மற்றும் கதைபற்றி வெளியே தெரியாதளவுக்கு பரமரகசியமாக படப்பிடிப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

கதாநாயகி ஐஸ்வர்யாராய் நன்றாக ஒத்துழைக்கிறாராம். உலக அழகி என்ற கர்வமே இல்லாமல் எல்லோருடனும் சகஜமாகப் பழகுகிறாராம்.

படப்பிடிப்பில் பச்சரிசிச்சோறும் பருப்புக்குழம்பும்தான் கட்டழகி விரும்பிச் சாப்பிடுகிறாராம்.

அம்மா பிருந்தாராய் மகளுக்கு வாய்க்கு ருசியாக சமைத்துக்கொடுக்க கூடவே வந்துள்ளார்.

ஐஸ்வர்யாவை கட்டியணைக்கும் முதல் காட்சியில் மோகன்லால் சின்னதாகக் கூச்சப்பட்டராம். ஐஸ்வர்யாதான் உற்சாகம் கொடுத்து, இயக்குநரின் எதிர்பார்ப்பைவிட பல மடங்கு நெருங்கி நடித்து ஆச்சரியப்படுத்தினாராம்.

சில காட்சிகளில் மோகன்லால் எம்.ஜி.ஆரின் கெட்-அப்பில் தோன்றுகிறாராம்.

# பாரதி கண்ணம்மா

தனது சொந்தப்படமான 'சோத்துக்கட்சி', சரத்குமாரின் 'அரவிந்தன்' படங்களில் நடித்துக்கொண்டிருக்கும் பார்த்திபன் புதிய படமொன்றிலும் கதாநாயகனாக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

'பாரதி கண்ணம்மா' என்று படத்திற்கு பெயர் சூட்டியுள்ளனர். பார்த்திபன் ஜோடியாக நடிக்கப் போகிறார் மீனா.

கடந்த 21ம் திகதி படப்பிடிப்பு ஆரம்பமாகிவிட்டது. பாடல்கள், வைரமுத்து. இசை, தேவா. கதை, வசனம் எழுதி படத்தை இயக்குபவர் சேரன். கே.எஸ். ரவிக்குமாரின் சிஷ்யர்.

# பொறாமை

காதல் காட்சிகளில் பிரசாந்த் முத்தமிட்டு நடிப்பதை அவரது பிரிய ரசிகைகள் விரும்பவில்லையாம். அதனால் கண்டனக் கடிதங்கள் மலைபோலக் குவிந்துள்ளதாம். இளம் ரசிகைகளுக்கு ஏன் இந்தப் பொறாமை?



கஜோல்-ரேகா

# கௌதமி ஆனந்தம்

'ஆனந்தம்' படத்தில் மோகன்லாலின் ஜோடிகளில் ஒருவராக நடிக்கும் சான்ஸ் கிடைத்துள்ளதாம். சொல்லி சொல்லிப் பூரித்துப் போகிறார் கௌதமி. மோகன்லாலை திருப்தி செய்து விட்டால், மலையாளப் படங்களிலும் வாய்ப்புத் தேடிக்கொள்ளலாம் என்று கணக்குப் போடுகிறாராம் கௌதமி.

# ...சினி

* கே.பாலசந்தர் இயக்கத்தில் பிரபு-மீனாட்சி சேஷாத்திரி நடித்த 'டூயட்' இந்தியில் 'துஹிமேராதில்' என்ற பெயரில் டப் செய்யப்படுகிறது. இதற்கு முன்னர் மணிரத்தினத்தின் இயக்கத்தில் பிரபு நடித்த 'அஞ்சலி' இந்தியில் டப் செய்யப்பட்டது.

...' படத்தில் நடித்த பிரபுதேவாவின் சகோதரர் நாகேந்திரபிரசாத்திற்கு தமிழில் படவாய்ப்பு எதுவும் ... தெலுங்குப்படத்தில் நடிக்கிறார்.

... நடிக்கும் 'சோத்துக்கட்சி' படத்தில் இரண்டு கதாநாயகிகள். ஒரு கதாநாயகி புதுமுகம். மற்றொரு ...ஸ்வாதியை அணுகியுள்ளார் பார்த்திபன்.

...நிறுவனம் தயாரிக்க, கே.எஸ்.ரவிக்குமார் இயக்கத்தில் சரத்குமார் நடிக்கவிருந்த 'பாமரன்' படத்தின் ... மாற்றி வைத்துள்ளனர்.

...ப்துல் ரகுமான் முதன் முறையாக இயக்கும் 'மனசு' படத்தில் 'சாதிசனம்' படத்தில் நடித்த ஓவியா ...வருகிறார். கதாநாயகனாக புதுமுகம் ஒருவர் நடிக்கிறார்.

...விஜயகாந்த் தவிர்ந்த ஏனைய முன்னணி நாயகர்களுடன் நடித்துள்ள நக்மா, விரைவில் கமலின் ...க்கு ஜோடியாக நடிக்கவிருக்கிறார்.

...ம் மூலம் தமிழில் அறிமுகமாகிய டொல்பி சவுண்ட் சிஸ்டம், முதன்முறையாக இந்தியில் '1942 ஏ லவ் ...ம் அறிமுகமாகியது. சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் ஹொலிவூட்டில் 'ஸ்டார் வோர்ஸ்' படத்தின் ...பட்டது.

...க்குப் பின்னர் இந்திய சுப்பர்ஸ்டார் அமிதாப்பச்சன் நடிக்கும் படத்தில் கதாநாயகியாக ...ர். இந்திரகுமார் என்பவர் இயக்கும் இப்படத்தில் அமீர் கானும் நடிக்கிறார்

...ாளத்தில் நடிக்கும்' இந்திரப்பிரஸ்தம் என்ற படத்தில் மம்முட்டிக்கு ...ற விமானப்பணிப்பெண்ணை அறிமுகப்படுத்துகிறார்கள்.

...ார் இயக்கத்தில் அர்ஜின் நடிக்கும், ...கு முன்னர் இளையராஜா ...து. பின்னர் கார்த்திக்ராஜா ...ல்லப்பட்டது. தற்போது ... இசையமைக்கிறார்



விக்னேஷ்-சுவலட்சுமி படம் வாணிமஹால்

# நடிப்பாரா பாலச்சந்தர்?

இயக்குநர் கே.பாலசந்தரை நடிக்கவைக்க வேண்டும் என்று கமல் ஆசைப்பட்டார். இப்போது இயக்குநர் மணிரத்னமும் பாலசந்தரை நடிக்கவைக்க விரும்புகிறார். இருவரும் தனித் தனியாக பாலசந்தரை அணுகினார்களாம். 'பார்க்கலாம்' என்று பிடிகொடாமல் பதில் சொல்லிவிட்டாராம் பாலசந்தர்.

# 8 இலட்சம்

தமிழ், தெலுங்கு, இந்தி என்று மூன்று மொழிப் படங்களில் நடித்து வரும் ரம்பா ஐந்து இலட்சத்தில் இருந்து எட்டு இலட்சமாக தனது சம்பளத்தை உயர்த்தி விட்டார்.

...காதல்

...மாலை ...ன்



...ல ...னான். ...ங்கினாள் ...ாக்கார அழகி ...பவர் பிரசாந்த்.

# ரேகா நல்ல ரேகா

நடிகை ரேகா இந்தியில் ஒரு கலக்குக் கலக்கியவர். ஜெமினி கணேசனின் மகள். இப்போது கூட தனது உடலை இளமையாக வைத்திருக்கிறார் ரேகா.

பிரபல நடிகர்கள் பலரோடு இணைத்துப் பேசப்பட்ட ரேகா அவற்றையெல்லாம் அனாவசியமாக மறுத்ததில்லை.

இப்போதெல்லாம் ரேகா நடிகர்களோடு கிசுகிசுக்கப்படுவது குறைந்துவிட்டது. அதனால் கிசுகிசுவே இல்லையென்று நினைத்துவிடாதீர்கள். புதிய இந்தி நடிகைகள் சிலரோடு நெருக்கமான நட்பை ஏற்படுத்தியிருக்கிறார் ரேகா.

சமீபத்தில் கஜோலும், ரேகாவும் இணைந்து பல்வேறு கோணங்களில் போஸ் கொடுத்து கலங்கடித்திருந்தார்கள். (அவற்றில் ஒரு படம் மட்டும் இங்கு பிரசுரமாகியுள்ளது)

கஜோல் பற்றி ரேகா புளுகுகிறார். "கஜோலின் உடல்வாகு பற்றி எனக்கு வியப்பாக இருக்கிறது. நடனம் ஆடுவதற்கு ஏற்ற உடலமைப்பு அவருடையது" என்கிறார்.

"வயதே தெரியாமல் உடலை கச்சிதமாக வைத்திருக்கிறார் ரேகா. என்போன்ற இளம் நடிகைகள் அவரிடம் கற்றுக்கொள்ள நிறைய விஷயங்கள் இருக்கின்றன" என்கிறார் கஜோல்.

'மின்சாரக் கனவு' படத்தில் கஜோல் நடித்துக் கொண்டிருந்தாலும் இந்தியில் கலக்குவதையே விரும்புகிறார். அதற்காக ரேகாவிடம் கற்றுக் கொள்கிறாரோ?



# நட்சத்திர x தகவல்கள்

* சினிமா உலகில் 'பான்பராக்' பீடாவை அதிகம் உபயோகிப்பவர் கோவை சரளா.

* தயாரிப்பாளர்களுக்கு மிக உபயோகமாக மாறியுள்ள கவர்ச்சி நடிகை ஜோதிமீனா. பொழுது போகவில்லையா கூப்பிடு ஜோதிமீனாவை என்கிறார்களாம் தயாரிப்பாளர்கள்.

* நடிகை ஸ்ரீப்பிரியாவுக்கு சுரிதார் போடும் ஆசை வந்ததாம். ...வடுக்கப் போன தையல்காரர் சங்கடத்தில் நெளிந்தாராம். விஷயம் ...ன்ன டேப்பை'க் கொண்டு போய்விட்டார். அதனை வைத்து எப்படி ...ான் சங்கடத்திற்கு காரணமாம்.

...ம் முடிவில் இருக்கிறார் மோகன். அதற்காக தனது தோற்றத்தில் ...க முடிவெடுத்துள்ளராம்.

... நடிகர்கள் செக்ஸ் பற்றித்தான் பேசுறாங்க. இரட்டை அர்த்தமாகப் ...திலை சிலவிஷயங்கள் புரியவே மாட்டேங்குது' என்று சொல்லியிருக்கிறார்



மம்முட்டி-மனோரமா படம் மாஸ்டர்



படிப்பகம்

# லேடீஸ் ஸ்பெஷல்

## உங்கள் அழகு

★ ஒரு டம்ளர் தண்ணீரில் சில துளிகள் கிளிசரின் விட்டு அத்தண்ணீரால் வாயைக் கொப்பளியுங்கள். இதனால் வாயும், பற் களும் சுத்தமாகும். பல் உபாதையால் கஷ்டப்படுகிறவர்களுக்கு மிகவும் நல்லது. உங்கள் வாயும் உலராமல் இருக்கும்.

★ சில உணவுப் பொருட்களைப் பச்சையாக உண்பதால் அழகு அதிகரிக்கிறது. பொதுவாக எந்தப் பிடித்தமான உணவுப் பொருளையும் அதிகமாகச் சாப்பிடுவதனால் தான் நோய்கள் வருகின்றன. பச்சையாக எதையும் சாப்பிடும்பொழுது எதையும் அதிக அளவில் சாப்பிடத்தோன்றாது. ஆனால் இத்தகைய உணவுப் பொருட்களைச் சாப்பிடுவதால் முகம் பளிச்சென்று ஆகிறது. இத்தகைய வேகவைக்காத உணவுப் பொருட்களைச் சாப்பிடும்பொழுது சில விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

★ இத்தகைய பொருட்களை உட்கொள்கையில் தண்ணீர் அருந்தாதீர்கள்.



பாலையும், பழங்களையும் சேர்த்துச் சாப்பிடாதீர்கள். அப்பிளைத் தவிர எலுமிச்சைப்பழம், சதைப்பற்றுள்ள பழங்கள் இவற்றைக் காய்கறிகளுடன் சேர்த்து உட்கொள்ளாதீர்கள். பொதுவாக, பழங்களை (அப்பிளைத் தவிர) பகல் ஒரு மணிக்குள் சாப்பிடுங்கள்.

இத்தகைய பச்சை உணவுப் பொருட்களை, அவைகள் அதிக அளவில் கிடைக்கும் காலங்களில் சாப்பிடுவது நல்லது. பலவகையான உணவுப் பொருட்களை ஒரே நேரத்தில் உட்கொள்வதைத் தவிர்ப்பதும் நல்லது. எந்தவிதமான பொருட்களை பச்சையாகச் சாப்பிடலாம் என்பதை உங்கள் டாக்டரிடம் கேளுங்கள்.

பொதுவாகப் பசலைக்கீரை, அப்பிள், தோடம்பழம், திராட்சை, பொடி செய்த கரட், அத்திப்பழம் போன்றவற்றைப்பச்சையாக உண்ணலாம். பச்சை வெங்காயமும், அப்பிளும் தடிமனுக்கு மிகவும் நல்லது. உலர்ந்த திராட்சை சாப்பிட்டால் தலைமயிர் நன்கு வளரும். பீட்ரூட், பசலைக்கீரை இவற்றைப் பச்சையாக உண்பதால் உடலுக்கு இரும்புச்சத்து கிடைக்கும்.

இவ்வாறு வேக வைக்காத உணவுப் பொருட்களை அடிக்கடி சாப்பிட்டால்,

1. மூளை சுறுசுறுப்பு அடைகிறது. அயர்வு குறைகிறது.

2. கண்கள் தெளிவடைகின்றன. கவர்ச்சி உண்டாகின்றன.

3. தோலில் காணப்படும் எந்தவித குறைபாடும் நாளடைவில் மறைந்து விடுகிறது.

★ குறையில்லாத முகம் வேண்டுமா? சிறிது கடலை மாவை பால் ஏடுடன் குழைத்து வைத்துக் கொள்ளுங்கள்.

இதைத் தினமும் இரவு படுக்கப் போகும் முன் முகத்தில் தடவித் தேய்த்து விடுங்கள். இவ்வாறு தினமும் செய்தால் நாளடைவில் பருக்கள், கறுப்புப் புள்ளிகள் மறைந்துவிடும்.

## 'மேக் அப்' போடுவோர் கவனிக்கவும்

★ முகத்தில் மேக்கப்புடன் இரவில் தூங்காதீர்கள். முகத்தைச் சோப்புப் போட்டு நன்கு கழுவி விடுங்கள்.

★ காது, மூக்கு, நாக்கு இவற்றில் கொப்புளங்கள் ஏற்படுமானால் அவ்விடங்களில் சிறிது கிளிசரினை வைத்துப் பஞ்சு மூலம் ஒத்தி விடுங்கள். இவை மறைந்து விடும்.

★ குளித்தவுடன் உங்கள் உடல் முழுவதும் சிறிது பவுடர் போட்டுக் கொண்டால் புத்துணர்ச்சி அதிகரிக்கும். குளிர் காலங்களில் இச்செயல் மிகவும் பயன் அளிக்கும்.

★ மேக்கப் செய்து கொள்வதற்கு முன்னால் உங்கள் முகம் மிகவும் சுத்தமாக இருக்க வேண்டும். பொதுவாக, நம் தோலினை எண்ணெய்ப் பசை உள்ளது (GREASY), உலர்ந்த தோல் (DRY SKIN) என்று இருவிதமாகப் பிரிப்பார்கள். எண்ணெய்ப் பசை உள்ள தோல் உள்ளவர்கள் மேக்கப் செய்து கொள்வதற்கு முன்னால் முகத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

★ உலர்ந்த தோல் கொண்டவர்கள் அதை எண்ணெய்ப் பசை உள்ளதாக ஆக்குவதற்குப் பயன்படும் கிறீம்களைப் பயன்படுத்துவது நல்லது. நீங்கள் எந்த வகையைச் சேர்ந்தவர் என்பதை வைத்தியரிடம் (SKIN SPECIALIST) கேட்டுத் தெரிந்து அதற்கேற்றவாறு மேக்கப் செய்து கொள்ளலாம்.



★ மேக்கப் செய்து கொள்கையில் உங்கள் கழுத்தை மறந்து விடாதீர்கள். முகத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறீர்களோ அவ்வளவு முக்கியத்துவம் கழுத்திற்கும் கொடுங்கள். அதற்காக விற்கப்படும் கிறீம்களைப் பயன்படுத்தலாம்.

★ பார்வைக் கண்ணாடி அணிந்து கொண்டிருக்கும் பெண்கள் மேக்கப் செய்து கொள்ளும் பொழுது உருவத்தைப் பெரிதாக்கிக் காட்டும் (MAGNIFYING) முகம் பார்க்கும் கண்ணாடியைப் பயன்படுத்துவது அவசியம்.

## மண்ணெண்ணெய் அடுப்பு பயன்படுத்தும் முறை

★காற்றுள்ள இடத்திலோ, ஃபேன் ஓடும் இடங்களில் வைத்தோ அடுப்பைப் பற்ற வைக்கக் கூடாது.

★காஸ் சிலிண்டர்களின் அருகில்வைத்து மண்ணெண்ணெய் அடுப்பைப் பற்ற வைக்கக் கூடாது.

★எரிந்து கொண்டிருக்கும் போது ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு தூக்கிச் செல்லக் கூடாது.

★எரிந்து கொண்டிருக்கும் போது டாங்கில் மண்ணெண்ணெய் ஊற்றக் கூடாது.

★டாங்கில் மண்ணெண்ணெய் நிரப்பி ஒரு மணிநேரம் ஆன பின்பே புதிய அடுப்பை முதல் முறையாக எரிய வைக்க வேண்டும்.

★மாதத்தில் ஒரு முறை மண்ணெண்ணெய் டாங்கைச் சுத்தம் செய்யுங்கள்.

★மண்ணெண்ணெய் ஊற்றியதும் டாங்கை நன்றாக மூடிவிட்டு அதன்பின்பு அடுப்பை எரிய விடவும். அடுப்பை எரிய வைப்பதற்கு முன்னால் பக்கத்தில் வைத்திருக்கும் எண்ணெய்க் கானைத் தூர எடுத்து வைத்து விடுங்கள்.

★இரண்டு வாரத்திற்கு ஒரு முறை அடுப்பின் திரிகளை எல்லாம் சமன்படுத்திப் பராமரியுங்கள். உயர்வாக இருக்கும் திரிகளை மட்டும் நறுக்கி விடுங்கள்.

## யுத்த களத்தில் பெண்கள்

இரண்டாம் உலகப் போர் காலத்தில் பெண்கள் ஆயுதப்படைகளில் இருந்தார்கள். ஆனாலும் போர் இடுவதில் அவர்களை ஈடுபடுத்த தயக்கம் இருந்தது.

அதனால் போரில் காயமடைந்த போர் வீரர்களுக்கு உதவுவது, முதலுதவி செய்வது, மருத்துவப் பணியில் ஈடுபடுவது என்ற வரையறையோடு பெண்கள் நிறுத்தப் பட்டனர்.

பெண் என்றால் மென்மை. பெண் என்றால் வசீகரம். பெண் என்றால் இரக்கம் உள்ள இதயம். அப்படிப்பட்ட பெண் போர்க்களத்தில் எதிரியை சங்காரம் செய்யும் இரக்கமற்ற போரில் ஈடுபடத் துணிவாளா? கேள்வி அதுதான்.

அந்தக் கேள்விதான் பெண்களை படையில் சேர்த்தாலும், போரிடுவதற்கான அனுமதி வழங்கத் தடையாக இருந்தது.

இப்போது நிலமை மாறிவிட்டது. அமெரிக்க இராணுவத்திலிருந்து, இலங்கையில் வடக்கு-கிழக்கில் ஆயுதம் ஏந்தி போராடும் புலிகள் அமைப்புவரை பெண்களும் களம் புகுந்துகொள்ள அனுமதி வழங்குகின்றன.

ராஜீவ் கொலையில் கரும்புலியாக பலியான தனுவிலிருந்து பெண்கள் என்றாலே இலங்கை, இந்திய பாதுகாப்புப் பிரிவுகளுக்கு ஒரு அலர்ஜிமாதிரி. விழிப்பாக சோதனை நடத்துகிறார்கள்.

சர்வதேசரீதியாக பார்க்கும்போது போரில் பெண்களின் ஈடுபாடு பிரபலமாகவும், பிரமிப்பாகவும் மாறியது புலிகள் அமைப்பில்தான்.

தரைப்போரில் மட்டுமல்ல, கடற் போரிலும் பெண்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

பெண் தளபதிகள் தலைமையில் தனியான படையணிகள் சண்டைகளில் இறக்கப்படுகின்றனர்.



கடலில் படகு செலுத்துவது, நீச்சல், நீரடி நீச்சல் என்று ஒரு காலத்தில் தமிழ் சமூகமே எதிர்பார்த்திருக்காதளவுக்கு பெண்களது நிலை மாறியிருக்கிறது.

வீட்டுக்குள் பெண்களை பூட்டி வைத்த பழைய பாரம்பரியத்தை போர் புரட்டி எறிந்துவிட்டது.

காலத்திற்கு ஒவ்வாத சம்பிரதாயங்கள் உடைவது தவிர்க்க முடியாதது.

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு நான்கும் தேவையானபோது தேவையான இடத்தில் ஆணுக்கும் தேவை. பெண்ணுக்கும் தேவை.

பெண் மட்டுமே நிலம் நோக்கி நிற்க, ஆண் மட்டும் அவளை பார்வையால் துகிலுரிய அனுமதிக்கும் பண்பாட்டை நியாயப் படுத்தியது ஆண் எழுத்தாளர்கள்தான்.

நேர்கொண்ட பார்வையும் நெஞ்சில் உரமும் கொண்ட ஆணும் பெண்ணுமே ஆரோக்கியமான புதிய சமுதாயத்தின் வித்துக்களாக, தூண்களாக மாறமுடியும்.

போர் எத்தனை கொடியது. போரின் நெருப்பில் பெண்களும் கருகிக்கொண்டிருத்தல் நெஞ்சை வாட்டுகிறது. ஆனால் இந்தப் போரில் விளையும் ஆயிரம் தீமைகளில் ஒரு சில நன்மைகளும் உண்டு.

உளுத்துப் போன கட்டுப்பெட்டித்தனமான பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் போரின் புயல்வீச்சில் காணாமல் போய்க் கொண்டிருப்பதுதான் அந்த சில நன்மைகளில் ஒன்று.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
### அநுராதபுர வாசகிக்கு அதிஷ்டம்

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

ரி. ராய்ஸா
தமடகம, திறப்பனை-அநுராதபுரம்.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம் அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் மார்ச் 20ம் திகதிக்கு பின்னர் முரசு அலுவலகத்தில் காலை 12 மணி முதல் 4 மணிக்கு முன்னர் வந்து (ஞாயிறு தவிர) பட்டுச்சேலையை பெற்றுச் செல்லலாம்

முகவரி: இல 5. காலிங்க பிளேஸ், கிருலப்பனை, கொழும்பு-06.

## உலகக் கிண்ண அசத்தல் பட்டியல்

இதுவரை இடம்பெற்ற 5 உலகக்கிண்ணப் போட்டிகளில் மிகக் குறைந்த ஓட்டங்களோடு முடிந்த ஆட்டங்களையும், மிக அதிக ஓட்டங்களை குவித்த ஆட்டங்களையும் பார்க்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| 1. | 360/4 (50)- மே.இ.தீவுகள் | (எதிர் இலங்கை) | 1987. |
| 2. | 338/5 (60)- பாகிஸ்தான் | (எதிர் இலங்கை) | 1983. |
| 3. | 334/4 (60) இங்கிலாந்து | (எதிர் இந்தியா) | 1975 |
| 4. | 333/9 (60) இங்கிலாந்து | (எதிர் இலங்கை) | 1983 |
| 5. | 330/6 (60) பாகிஸ்தான் | (எதிர் இலங்கை) | 1975 |
| 6. | 328/5 (60) அவுஸ்திரேலியா | (எதிர் இலங்கை) | 1975 |
| 7. | 322/6 (60) இங்கிலாந்து | (எதிர் இலங்கை) | 1987 |
| 8. | 313/7 (49.2) இலங்கை | (எதிர் ஸிம்பாப்வே) | 1992 |
| 9. | 312/4 (50) ஸிம்பாப்வே | (எதிர் இலங்கை) | 1992. |

### குறைந்த எண்ணிக்கை.

| | | | |
|---|---|---|---|
| 1. | 45 (40.3 ஓவர்ஸ்) | கனடா (எதிர் இங்கிலாந்து) | 1979. |
| 2. | 74 (40.2) | பாகிஸ்தான் (எதிர் இங்கிலாந்து) | 1992. |
| 3. | 86 (37.2) | இலங்கை (எதிர் மே.இ.தீவுகள்) | 1975. |
| 4. | 93 (36.2) | இங்கிலாந்து (எதிர் அவுஸ்திரேலியா) | 1975. |
| 5. | 94 (52.3) | கிழக்கு ஆபிரிக்கா (எதிர் இங்கிலாந்து) | 1975. |


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கபடுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



வாரம் ஒரு பட்டுச் சேலை D

பெயர்:.........................

முகவரி:.........................

.........................

கையொப்பம்:.........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி:09-03-1996

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


## சுழல்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன்
## வலதுகை விரல்களின் விலை 5 1/2 கோடி



அவுஸ்திரேலிய பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன். உலகின் பிரபலமான சுழற்பந்து வீச்சாளர். உலக பந்து வீச்சாளர் வரிசையில் இரண்டாம் இடத்தில் இருக்கிறார்.

முதல் முறையாக இம்முறைதான் உலகக் கோப்பை போட்டியில் களம் காணுகிறார் ஷேன் வோர்ன்.

இந்த உலகக் கோப்பை போட்டிக்கு முன்னர் 52 சர்வதேச ஒருநாள் போட்டிகளில் விளையாடி இருக்கிறார். 86 விக்கெட்டுகளை சாய்த்திருக்கிறார்.

உலகக் கோப்பை போட்டியில் விளையாடும்போது ஏதாவது விபரீதம் நேரக்கூடும் என்று அஞ்சுகிறார் ஷேன் வோர்ன். ஏனெனில் பாகிஸ்தான் இரசிகர்கள் அவர்மீது கடும் கோபத்தில் உள்ளனர். சலீம்மாலிக் தனக்கு லஞ்சம் தந்ததாக கூறியவரல்லவா ஷேன் வோர்ன்?

எனவே-தனது பந்துவீச்சுத்திறமைக்கு காரணமான வலதுகை விரல்களை 5 1/2 கோடி ரூபாய்க்கு காப்புறுதி செய் துள்ளார். உலக கிரிக்கெட் வீரர்களில் விரல்களை அதிக தொகைக்கு காப்புறுதி செய்திருப்பவர் ஷேன் வோர்ன்தான்.

## அசாருதீன் விவாகரத்து ஆட்டத்தைப் பாதிக்குமா?

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்திய கப்டன் அசாருதீன்.

சிறந்த கப்டனாக புகழ் பெற்றிருக்கும் அசாருதீனுக்கு இரண்டு பிள்ளைகள். நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்று அமைதியாக இருந்த அசார் வாழ்க்கையில் ஒரு புயல் வீசியது. அந்தப் புயலின் பெயர் சங்கீதா பிஜ்லானி. இந்தி நடிகை. மொடல் அழகி.

இந்தி நடிகர் சல்மான் கானுடன் காதலாக இருந்த சங்கீதா அசாருதீனின் தீவிர விசிறி. தனது பிரிய இரசிகையை ஒரு நாள் சந்தித்தார் அசாருதீன். பிடித்துப் போய்விட்டது.

சந்திப்புத் தொடர்ந்தது. சார்ஜாவில் அசாருதீன் விளையாடப் போனபோது சங்கீதாவும் அங்கு பறந்துபோனார். நட்சத்திர விடுதியில் தனியான சந்திப்புக்கள். பிரிய



முடியாத காதலர்களாகினர். விஷயமறிந்து சல்மான் கான் ஒதுங்கிக்கொண்டார்.

மும்பாய் என்று பெயர் மாற்றப்பட்டுள்ள பம்பாயில் சங்கீதாவுக்காக தனியான பங்களா ஒன்றை விலைக்கு வாங்கினார் அசாருதீன். பல லட்ச ரூபாய்கள் மதிப்புள்ள பங்களா அது. அழகான கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ளது. ஜாலியாக இருக்கக்கூடிய வசதியான பங்களா.

அசாருதீனின் மனைவிக்கும் அசாருதீனின் பெற்றோருக்கும் விஷயம் தெரிந்தது. வீட்டில் பிரச்சனை வெடித்தது.

பிரச்சனை முற்றியதால் தனது துணைவியான நவுரீனை விவாகரத்துச் செய்துள்ளார் அசாருதீன்.




உலகக் கோப்பை போட்டி நடைபெறும் சமயத்தில் இந்த விவகாரம் வெடித்திருப்பதால் இந்திய அணி பாதிக்கப்படலாம்.

சொந்தப் பிரச்சனையில் சிக்கித் தவிக்கும் கப்டனால் அணியின் வெற்றிக்கு உழைக்க முடியுமா? என்றெல்லாம் பல்வேறு அபிப்பிராயங்கள் எழுந்துள்ளன.

அனைத்துக்கும் நெற்றியில் அடித்தது போல பதில்சொல்கிறார் அசாருதீன். "விவாகரத்து எனது கிரிக்கெட் வாழ்க்கையைப் பாதிக்காது" என்கிறார்.

1992 இல் உலகக் கோப்பை போட்டி முடிந்த சூட்டோடு தனது மனைவியை விவாகரத்துச் செய்தார் இங்கிலாந்து அணிக் கப்டன் கிரஹாம் கூச்.

1996 இல் உலகக் கோப்பை போட்டி ஆரம்பத்திலேயே தனது விவாகரத்தை அறிவித்துவிட்டார் அசாருதீன்.

அசாருதீன் – சங்கீதா காதல் விவகாரத்தை முரசு முன்னர் வெளியிட்டிருந்தமை தெரிந்ததே.

சங்கீதாவை உடனடியாக அசாருதீன் திருமணம் செய்வாரா என்பது தெரியவில்லை.

விவாகரத்து அமளி அடங்கிய பின்னரே சங்கீதாவை அசார் திருமணம் செய்து கொள்ளக்கூடும்.



படிப்பகம்

www.padippakam.com

# இறந்தும் இயங்கும்

காலத்தைப் பார்த்தாயா?
மலர்களை
முட்களாக மாற்றிவிடுகின்றது.
★
நிலவைப்பற்றிய கற்பனை
என்னில்
முளைத்திருந்த வேளையில்,
என்வீடு
இருண்டு போனது.
★
பாலைவனத்தில்
நீரூற்று!
என் விழிகளைப் பார்!
★
எனக்கு விறகு வைத்தவளே,
நான்
சூரியன் இல்லாத தேசம்.
★
உன் வாசம்
என்னுள் எப்போதும்
எரிந்து கொண்டிருக்கும்.
நீ
புரிந்து கொள்!
இந்த சோகம் புதுமையானது.
என்னையே
ஆலயமாக்கியவளே!
எனக்குள் உன்னோடு
உறங்குகிறேன் நான்.
★
நான்
இந்த
பூமியையும் ஆகாயத்தையும்
நேசிக்கவில்லை!
★
இன்னும்..
இன்னும்...
உன்னைத்தான்...!
★
உன்நினைவு
பாலமானதுமட்டுமல்ல
ஆழமானதும்
அழகானதும்கூட
★
பௌர்ணமி ஒளியால்
மெத்தைசெய்து
நட்சத்திரங்களை எடுத்து
தலையணையாக்கி
நான் சுவாசிக்கிறேன்.
★
ஆயிரமாயிரம்
சோகங்களை
சுமப்பதைவிட
உன்னைப்பற்றிய
அந்த
ஒரே ஒரு சோகம்
எவ்வளவு சந்தோசமானது...!.
★
உன்னால்
என்னில் உதிர்கின்ற
ஒவ்வொரு
சொட்டுக் கண்ணீர்த்துளிகளும்
என்
கவிதைகளைச் செதுக்கும்
உளிகள்.
★
என் தேகத்தில்
குருதியாக அசைபவளே!
என் தேசத்தில்
நீ
ஏற்றிவைத்த
இந்த
காதல் கொடிக்கு
என்றுமே
மரணமில்லை!

நிந்ததாசன்.



# தேன் கிண்ணம்

## கல்வெட்டான கணப் பொழுது பார்வை

ஒரு கணப்பொழுதே
நிலைத்த உன்பார்வை
எனக்குள்ளே
சக்கரங்களாகச்
சுழல்கிறது!
–o–
அந்தப் பார்வை
விழிவழியே போய்–எனது
ஆன்மாவின்
அடித்தளத்தில்
வேரூன்றியுள்ளது!
–o–
இனத்தால், நிறத்தால்
மொழியால், மதத்தால்
வேறுபட்டிருந்த போதும்
முதலில் கண்டதும்
யுக யுகாந்திரங்களாகப்
பழகியதைப் போன்றதோர்
ஈரப்பார்வையை–என்
இதயத்தில்
உன்னால் எப்படி
ஊன்றிப்போக முடிந்தது?
–o–
நெஞ்சக்குள்ளே
பொங்கிக் கிடக்கும்
அன்பின் விசாலத்தை
ஒரு கணப்பொழுதில்
எப்படி உன்னால்
எடுத்துச் சொல்ல முடிந்தது?
–o–
வாழ்வில், ஒருகணப்பொழுது
வந்து போன
இனிய தோழனே!
உன் சகாக்களுக்கும்
சொல்லிக் கொடு–
பார்வையால்
பாசங்களைப்
பூக்கவைக்கும் அற்புதத்தை!
–o–
உன்னைப் போன்றவர்கள்
உலகிலிருந்தால் தான்
இனங்களுக்கிடையே
இங்கிதம் நிலவும்!

செல்வி பஹீமா ஜஹான்–மெல்சிரிபுர.

## அதோ அவன்

ஊர் உறங்கிவிடும்
இரவுகளில்...
என்னையும், எனது
உள்ளத்தீயையும்
அணைப்பதில்
அவனின் பிரயத்தனங்கள்
தொடரும்...
எனக்கோ என்றும்
சிவராத்திரிதான்..!
= * =
அவனது அணைப்பில்
நிமிடங்கள்
யுகங்களாகும்...
பொழுது புலரும்போது
நானும் என் உள்ளத்தீயும்
அவனது கட்டுப்பாட்டில்...!
= * =
இன்றும்..
விளக்கேற்றிவைத்து
காத்திருக்கிறேன்..
அவனது வருகைக்காக..!
= * =
மணித்தியாலங்கள்
நிமிடங்களாக...
நிமிடங்கள்
விநாடிகளாக..
நேரமோ 'புக்காரா'
வேகத்தில்...!
= * =
அணையப்போகும் விளக்கு
இறுதியாக சுடர் விட்டெரிந்து
அணைகிறது...
ஆனால்.. உள்ளத்தீ...
அது எரிந்து கொண்டுதான்
இருக்கிறது..!
= * =
அவனோ வரவேயில்லை,
தீயை அணைப்பதற்கு...!
= * =
பொழுது புலர்கிறது..
சேவல் கூவுவதற்கு பதில்
துப்பாக்கி வேட்டுகள்...!
= * =
கண்களில் திரையிட்ட
கண்ணீரை
கைகளால் அழுத்திவிட்டு,
எழுந்து கதவை திறந்து
வீதிக்கு வருகிறேன்....
= * =
அதோ... நான் காத்திருந்த–
அவன்...
நடு வீதியில்...!
உடலெல்லாம்
துப்பாக்கி குண்டுகள்..
துளைகள்...!!
= * =

## தேடல்



என்
மௌனத்தை உடைக்கும்
மகத்தான சக்தி,
எங்கே மறைந்திருக்கிறது?
+ + +
புல் நுனிகளில் தங்கும்
அதிகாலைப் பனியின்
மணித் துளிகளைப் போல,
உதிர்ந்து போகா
என் மௌனத்தை உடைக்கும்
மகத்தான சக்தி–
எங்கே ஜீவிக்கிறது?
+ + +
என்
இருத்தலை உறதிப்படுத்தும,
வெளிப்பாடுகளை வரவேற்று,
என் உணர்வுகளை
நியாயப் படுத்தி வழிகாட்டுகிற
மகத்தான சக்தி–
என்னைத் தேடிக்கொண்டிருக்கிறதா? + + +
ஒடுக்குதலுக்கும்
அடக்குதலுக்கும் அப்பாற்பட்ட
ஆத்ம சிநேகத்தை ஆராதிக்கிற
என்
இதயத்தோடு பொருந்திக்கொள்கிற
மகாசக்தி–
எங்கேனும் நடமாடுகிறதா?
+ + +

சம்மாந்துறை மஹ்றா–

# கிரிக்கெட் காய்ச்சல்

## சில தகவல்கள்

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி–96 சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருக்கிறது.



சகல தரப்பினரையும் கிரிக்கெட் காய்ச்சல் தொற்றிக் கொண்டிருக்கிறது.

ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமிகள், வயதானவர்கள் என்ற பேதமெல்லாம் கடந்த ஜனரஞ்சகத் திருவிழா கிரிக்கெட்.

இம்முறை உலகக் கோப்பைச் சின்னம் வித்தியாசமானது. முந்தைய உலகக் கோப்பை சின்னங்கள் பந்து, ஸ்டம்ப் என்று சித்தரித்தன. இம்முறை உருவாக்கப்பட்டுள்ள சின்னம் விளையாட்டு வீரனை மையமாக வைத்து உருவாக்கப்பட்டுள்ளது. (20ம் பக்கம் பாருங்கள், சின்னம் வண்ணத்தில் உண்டு).

★ உலகக் கோப்பையைப் பெறப்போகும் அணி எது? மார்ச் 17 வரை உலகில் மிகப்பெறுமதியான கேள்வி இதுதான்!

பல்லாயிரம் இரசிகர்கள் பந்தயம் கட்டியிருக்கிறார்கள். இந்தப் பந்தயம் கிட்டத்தட்ட சூதாட்டம் போல ஒரு தொழிலாகவே நடத்தப்படுகிறது. இடையில் உள்ள பந்தயத் தரகர் கள் பாடு கொண்டாட்டம் தான். யார் வென்றாலும், தோற்றாலும் இலாபமடையப் போவது அவர்கள்தானே!

## பெரிசும்–பொடிசும்

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் கலந்து கொள்ளும் 12 நாடுகளது வீரர்களில் மிக இளசானவர்- டாம் ஒடுயோ. வயது 18. கென்யா அணி வீரர். (இடது புறம் நிற்பவர்) 12 அணிகளது வீரர்களில் மிக வயசானவர் நோலன் கிளார்க். வயது 47. ஹொலண்ட் நாட்டு வீரர். (வலதுபுறம் இருப்பவர்) விளையாட்டுச் சூரர் என்பதால் முகத்தில் வயது தெரியவில்லையல்லவா?



காதலனே...!
'வாழ்ந்தாலும் உன்னோடு
செத்தாலும் உன்னோடு';
என்றாயே
எனக்கு துரோகம்
செய்துவிட்டாயே...!

குணேஸ்–ஓமான்

## மனம் ஒரு பட்டம் பூச்சி

மலருக்கு மலர்தாவி
சுவைமிகு தேன்குடித்து
பறந்து, மகிழ்ந்து
பூமிக்கு அழகுசேர்த்து
மென்மையாய், வன்மையாய்,
கலர் கலராய்க்
கதை சொல்லி,
இன்னும் கொஞ்சம்
வாழ நினைத்து
எதிர்பாராத நேரத்தில்
எதிரியிடம் அகப்பட்டு
மௌனமாய் உயிர் துறக்கும்...!!

எம். சுரேஷ்.

## உண்மைகள்

எங்கள் மண்ணில்
மலர்ந்திருந்த மகிழ்ச்சியே...!
உன் வசந்தகாலங்கள்
எங்கே போயிற்று?
•••
மான் குட்டிகளாய்
மகிழ்ந்திருந்த சிறுசுகள்
சருகாகிச் சாம்பலாகி
ஏன் போனார்கள்?
•••
உன் தலைவிதி...
யுத்தம் என்னும்
இரத்த வேள்வியாய்
போனது ஏன்?
•••
வாழ்க்கையைப் பறிகொடுத்து
அந்நிய மண்ணில்
அடைக்கலம் புகுந்திருக்கிறோம்
அகதிகளாக;
•••
எம்முள் இன்னும்
நம்பிக்கையுள்ளது;
ஓ.. என்
ப்ரிய பிராந்தியமே!
அந்த மண்ணெல்லாம்
கனவுகளை...
விதைத்து வைத்திருக்கிறாயே,
நிச்சயம் அவை
முளைக்கும்–விருட்சமாகும்!
•••
ஆனால் எங்கள் வேர்கள்
அங்கல்லவா வியாபித்திருக்கிறது...?
அங்கு போகச் சொல்லியே
மனமும் போராடிக்கொண்டிருக்கிறது.
•••
வேதனையை உள்வாங்கி
வெளியில் தெரியாமல்
விழிக்குள் தேக்கி
வெந்து கொண்டிருக்கின்றோம்

ஆத்மராஜா றூத் சந்திரிக்கா.

## 'அப்பாவி'கள்

இறைமகனே!
ஒடுக்கப்பட்டவர்களுக்கு
உரிமைவாழ்வு வழங்க
அன்று–நீர்
சிலுவை சுமந்தீர்...!
***
இன்று
ஆயுதம் ஏந்துபவரெல்லாம்
அப்படித்தான் சொல்கிறார்கள்;
ஆனால்,
ஒவ்வொரு
கல்வாரி "யுத்தத்"திலும்
அறையப்படுவது,
ஏசுநாதர்களல்ல–
"பாவி"கள்தான்;
"அப்பாவிகள்",–
நாங்கள்தான்!!

அ. டக்ளஸ் ஜெயசேகரன்,
வவுனியா.

# இந்த வாரம் உங்கள் பலன்

( 03.03.96 முதல் 09.03.96 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கும்பம் | – சூரியன், புதன், செவ்வாய். |
| மீனம் | – கேது,சனி. |
| மேடம் | – வெள்ளி. |
| கன்னி | – இராகு. |
| தனு | – வியாழன். |

சந்திரன்- சிம்மம், துலாம், விருட்சிகம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் உயர்ச்சி, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- வீண் கவலை, உறவினர் தொல்லை. | காலை 6 மணி |
| புதன்- பெரியோர் நட்பு, மனக்கலக்கம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- தொழிலில் மந்தம், பணச்செலவு. | காலை 6 மணி |
| வெள்ளி- புதிய நட்பு, வீண் தொல்லை. | பி.ப. 1 மணி |
| சனி- எதிர்பார்த்த நன்மை, பணவரவு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணச் செலவு. | காலை 6 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, மனமகிழ்ச்சி. | மு.ப. 9 மணி |
| செவ்வாய்- உறவினர் தொல்லை, வீண் மனஸ்தாபம். | காலை 7 மணி |
| புதன்- அந்நியர் நட்பு, அதிகார விருத்தி. | பி.ப. 2 மணி |
| வியாழன்-பலவித பேறு, மனக்கவலை நீங்கும். | காலை 7 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| சனி- வெளியிடவாழ்க்கை, அந்நியர் உதவி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- வீண் கவலை, வெளியிடவாழ்க்கை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், பணவரவு. | காலை 6 மணி |
| புதன்- புதிய முயற்சி, அந்நியர் சகவாசம். | காலை 7 மணி |
| வியாழன்- துயர்நீங்கும், உறவினர் உதவி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- தொழில் விருத்தி. மனக்குறை நீங்கும். | காலை 6 மணி |
| சனி- பலவித பேறு, மன மகிழ்ச்சி. | மு.ப. 9 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- துயர் நீங்கும், இனசன நன்மை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| புதன்- வெளியிடவாழ்க்கை, அந்நியர் உதவி. | பி.ப. 2 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும். | மு.ப. 9 மணி |
| வெள்ளி- பலவித பேறு, பணவரவு. | பகல் 12 மணி |
| சனி- தொழில் சிறப்பு, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, கௌரவம். | காலை 7 மணி |
| திங்கள்- இனசன நன்மை, மனக்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- தொழில் பிரச்சனை, அந்நியர் நட்பு. | காலை 6 மணி |
| புதன்- கௌரவக் குறைவு, மனக்கலக்கம். | பகல் 12 மணி |
| வியாழன்-துயர் நீங்கும், செய்தொழில் விருத்தி. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- இனசன நன்மை, மனமகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| சனி- தொழில் விருத்தி, பணவரவு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | மு.ப. 1 மணி |
| திங்கள்- எதிர்பார்த்த நன்மை, இனசன மகிழ்ச்சி. | காலை 6 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், உறவினர் உதவி. | பகல் 12 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 7 மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, கௌரவம். | காலை 6 மணி |
| சனி- தொழில் மந்தம், பணச்செலவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரிய நஷ்டம். | காலை 7 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| புதன் - அந்நியர் நட்பு, மனமகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| வெள்ளி- இனசனவிரோதம், கௌரவக் குறைவு. | பி.ப. 2 மணி |
| சனி- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் பகை, மனக்கலக்கம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- வீண்குறை கேட்டல், பணச்செலவு. | காலை 7 மணி |
| செவ்வாய்- தொழில் மந்தம், வெளியிடவாழ்க்கை. | காலை 6 மணி |
| புதன்- இனசன நன்மை, கௌரவக் குறைவு. | பி.ப. 2 மணி |
| வியாழன்-தொழிலில் உயர்ச்சி, செலவு மிகுதி. | காலை 6 மணி |
| வெள்ளி- பயனுள்ள செயல், பணவரவு. | பி.ப. 2 மணி |
| சனி- உயர்ந்த நிலை, உறவினர் உதவி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- இனசன நன்மை, கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- வெளியிடவாசம், உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| புதன்- மனக்குறை நீங்கும், பணவரவு. | காலை 6 மணி |
| வியாழன்-தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| வெள்ளி-உறவினர் உதவி, மனக்கலக்கம். | காலை 7 மணி |
| சனி- வீண் தொல்லை, புதிய முயற்சி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் பிரச்சனை, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- வீண்குறை கேட்டல், அந்நியர் நட்பு. | மு.ப. 9 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், கௌரவம். | பகல் 12 மணி |
| புதன்- பெரியோர் உதவி, மனக்கலக்கம். | காலை 7 மணி |
| வியாழன்- தொழில் மந்தம், பணக்கஷ்டம். | பகல் 12 மணி |
| வெள்ளி- வீண்குறை கேட்டல், முயற்சி பலிதம். | மு.ப. 9 மணி |
| சனி- தொழில் சிறப்பு, பணவரவு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழிலில் உயர்ச்சி, பணச்செலவு. | காலை 6 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- தொழில் மந்தம், மனக்கவலை. | காலை 6 மணி |
| புதன்- வீண் குறை கேட்டல், உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 7 மணி |
| வெள்ளி- வீண் முயற்சி, அந்நியர் நட்பு. | காலை 6 மணி |
| சனி- தொழில் சிறப்பு, பணவிரயம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-6

### கன்னி:


(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- வீண் முயற்சி, கௌரவக் குறைவு. | காலை 6 மணி |
| புதன்- பணச் செலவு, உயர்ந்த நட்பு. | பகல் 12 மணி |
| வியாழன்- உறவினர் உதவி, மனக்குறை நீங்கும். | காலை 6 மணி |
| வெள்ளி- தொழில் பிரச்சனை, மறைமுக எதிர்ப்பு. | பகல் 12 மணி |
| சனி- அந்நியர் நட்பு, கௌரவம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-3

www.padippakam.com





## அண்ணல் காந்தி

அண்ணல் காந்தி என்றொருவர்
அவனியில் வாழ்ந்தார் கேள் பாப்பா!
பழுதற மானிடர் வாழும் வகை
பண்புடன் சொன்னவர் அவர் பாப்பா!

அன்புடன் வாழும் வழி வகைகள்
அறியச் செய்தார் கேள் பாப்பா!
உண்மை சத்தியம் நேர்மையென்று
உலகில் உயர்ந்தவர் அவர் பாப்பா!


அன்பும் அறமும் அஹிம்சையும்
அறிவும் பெற்றார் கேள் பாப்பா!
இந்திய நாட்டின் தேச பிதா
இன்பெயர் பெற்றவர் அவர் பாப்பா!

அருமை புத்தன் யேசுவுடன்
அண்மையில் சேர்ந்தார் கேள் பாப்பா!
வாய்ச் சொல் மட்டும் காட்டாமல்
வாழ்ந்தே மறைந்தவர் அவர் பாப்பா!

மிருதுபாஷினி-பதுளை.

சரித்திரத் தேர்ச்சி கொள்! சாவதற்கு
அஞ்சேல்!
சிதையா நெஞ்சுகொள்! சீறுவோர்ச் சீறு!
சுமையினுக்கு இளைத்திடேல்! சூரரைப்
போற்று!
செய்வது துணிந்து செய்! சேர்க்கை அழியேல்!
-சுப்பிரமணிய பாரதியார்.

### பாப்பா முரசு சிறுகதை



# புதிய கணக்கு

ஓர் ஊரில் சுந்தரம் என்ற கணித ஆசிரியர் ஒருவர் இருந்தார். அவர் பாடசாலையில் கணித பாடம் நடத்துவதில் திறமையானவர்.

ஒரு நாள் தன் மாணவர்களின் பொது அறிவைச் சோதிக்க விரும்பினார் சுந்தரம்.

"இதோ பாருங்கள் பிள்ளைகளே! உங்களுக்கு நான் ஒரு புதிர்க்கணக்கு சொல்லுகிறேன். மிகவும் புத்திசாலித்தனமாக அதற்கு யார் பதில் சொல்கிறாரோ, அவருக்கு ஒரு பேனா பரிசு தருவேன்," என்றார் ஆசிரியர்.

மாணவர்கள் மிகவும் ஆர்வத்தோடு அவரையே பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

"ஒரு ஊரில் ஒரு அம்மா இருந்தாள். அவளுக்கு மொத்தம் நான்கு குழந்தைகள் இருந்தனர். எங்கே இப்போது சொல்லுங்கள்- அந்த அம்மாவிற்கு எத்தனை குழந்தைகள்?" என்று திடீரென்று கேட்டார் ஆசிரியர்.

"நான்கு குழந்தைகள்" என்றனர் மாணவர்கள்.

"சரி. ஒரு நாள் அந்த அம்மா பத்து தோசைகள் சுட்டாள். எத்தனை தோசைகள் சுட்டாள்?" என்று மறுபடியும் கேட்டார் ஆசிரியர்.

"பத்து தோசைகள்" என்றனர் மாணவர்கள்.

"சரி. இப்பொழுது தனது முதலாவது குழந்தைக்கு மூன்று தோசைகள் கொடுத்தாள். இரண்டாவது குழந்தைக்கு மூன்று தோசைகள் கொடுத்தாள். மூன்றாவது குழந்தைக்கு மூன்று தோசைகள் கொடுத்தாள். மூவருக்கும் மொத்தமாக எத்தனை தோசைகள் கொடுத்தாள் சொல்லுங்கள் பார்ப்போம்," என்றார் ஆசிரியர்.

"ஒன்பது தோசைகள்" என்றனர் மாணவர்கள்.

"சரி. அந்த அம்மா முதலில் சுட்ட தோசைகள் எத்தனை?"

"பத்து தோசைகள்"

"சரி. இப்போது நான்காவது குழந்தைக்கு என்ன வரும்?" என்று கேட்டார் ஆசிரியர்.

"ஒ'ரு தோசை" என்று அத்தனை மாணவர்களும் உரத்த குரலில் சொன்னார்கள்.

அவர்களில் முரளி என்ற மாணவன் மட்டும் பதிலேதும் சொல்லாமல் அமைதியாக இருந்தான். அவனைக் கவனித்த ஆசிரியர்,

"என்ன முரளி! உனக்கு நான் சொன்ன கணக்கு விளங்கவில்லையா?" என்று கேட்டார்.

முரளி உடனே எழுந்து நின்றான்.

"சேர்! எனக்குக் கணக்கு நன்றாக விளங்கியது. ஒரு அம்மாவிற்கு நான்கு குழந்தைகள். அவர் சுட்ட தோசைகள் மொத்தம் பத்து. முதல் மூன்று குழந்தைகளுக்கும் மூன்று மூன்றாக மொத்தம் ஒன்பது தோசைகள் கொடுத்தாள். நான்கா வது குழந்தைக்கு என்ன வரும்? என்பது தான் கணக்கு. தனக்கும் மூன்று தோசைகள் கிடைக்கவில்லையே என்பதால், நான்காவது குழந்தைக்குக் கோபம் வரும்" என்று பணிவுடன் சொன்னான் முரளி.

"சபாஷ்! இந்தப் புதிர்க்கணக்கிற்கு யோசித்து, மிகவும் புத்திசாலித்தனமாகப் பதில் சொன்னவன் முரளியே. நான்காவது குழந்தைக்குக் கோபம் வரும் என்ற பொருத்தமான பதிலைச் சொன்ன முரளிக்கு இந்தப் பேனாவைப் பரிசளிக்கிறேன்" என்று பாராட்டிய ஆசிரியர் முரளிக்குப் பேனாவைப் பரிசாக்க் கொடுத்தார்.

## வாரம் ஒரு நாடு

### மங்கோலியா



**தலைநகர்** – உலன்ப்தோர்
**பரப்பு** – 15,65,000 சதுரகிலோ மீட்டர்
**மக்கள் தொகை** – 23,05,000
**மொழி** – மங்கோலியன்
**எழுத்தறிவு** – 89%
**சமயம்** – புத்தசமயம், லாமாயிசம்
**நாணயம்** – துக்ரிக்
**தனி நபர் வருமானம்**– 112 டொலர்.

**அமைவிடம்:-**

மங்கோலியா மத்திய ஆசியாவில், சோவியத் யூனியனை வடக்கிலும், சீனாவை தெற்கு, கிழக்கு, மேற்குப் பக்கங்களிலும் கொண்டுள்ளது.

**வரலாறு:-**

1691 முதல் 1911 வரை சீனாவின் ஆதிக்கத்திலும்; 1912 முதல் 1919 வரை ரஷ்யாவின் பாதுகாப்பில் சுதந்திர நாடாகவும்; 1919 முதல் 1921 வரை சீனாவின் கீழும் இருந்தது. 1921 இல் சுதந்திர நாடாக அறிவித்துக் கொண்டது. 1946 இல் ஒரு நம்பிக்கை வாக்கெடுப்பைத் தொடர்ந்து சீனா மங்கோலியாவை அங்கீகரித்தது. 1990 ஜூலையில் சுதந்திரமான பொதுத் தேர்தல். கம்யூனிஸ்ட் கட்சி அதிகாரத்தில் உள்ளது.

**பொருளாதாரம்:**

கால்நடை வளர்ப்பு முக்கிய தொழில்: குதிரைகள், நரிகள், ஆடுகள், செம்மறியாடுகள், ஒட்டகங்கள் வளர்க்கப்படுகின்றன. இடையர்கள் குழுவாக இயங்குகின்றனர். அரசு விவசாயப் பண்ணைகள் 1980 இல் 49 ஆக இருந்தன. நிலக்கரி, கண்ணாடி. செய்யப்பயன்படும் சுதையக் கரிகை, டங்ஸ்டன், தகரம், செம்பு ஆகியன முக்கிய கனிமப் பொருட்கள்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 09.03.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 131
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 129

**பரிசுக்குரியவர்:**
செல்வி. ரஞ்சனி மகேந்திரன்
டபிள்யூ. ஏ. சில்வா மாவத்தை, கொழும்பு-06.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| செல்வன். இர்ஷான் யூசுப் அக்கரைப்பற்று-06. | செல்வி. ஜனனி யோகராஜா புனித மரியாள் கல்லூரி, மாத்தளை. |
| ஜெ. கீதன். இ/தமிழ் மகா வித்தியாலயம்; பலாங்கொட. | நந்தகுமார் தவநேசன். வெலிங்டன் அடை வீதி, திருமலை. |
| பாத்திமா ஸஹரா. மகா வித்தியாலய மாவத்தை, கொழும்பு-13. | செல்வி. ஜே. ஹவித்ரா. வெலிகன றோ.க.வித்தியாலயம், கொச்சிக்கடை. |
| எஸ். ஹரிபிரசாத். கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, திருமலை. | செல்வி. வி. சுகந்தி ஸ்ரீக்ந்தராஜா. சப்பல் ஒழுங்கை, வெள்ளவத்தை. |
| செல்வி. நிரோஷா மாதவன். பெனிதுடுமுல்ல வீதி, நாவலப்பிட்டி. | செல்வி. சமீனா சலாம். மாபோல, வத்தளை. |

## பனாமா கால்வாய்

* **பனாமா கால்வாய் எந்தெந்தக் கடல்களை இணைக்கிறது?**
  பசுபிக், அட்லாண்டிக் கடல்களை இணைக்கிறது.
* **எப்போது இந்தக் கால்வாய் திறக்கப் பட்டது?**
  1914ம் ஆண்டு ஒகஸ்ட் 15ம் திகதி திறக்கப்பட்டது. பிறகு மண்சரிவால் கால்வாய் சிறிதுகாலம் அடைக்கப்பட்டிருந்தது. திரும்பவும் 1920ம் ஆண்டு ஜூலைமாதம் 12ம் திகதி முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி வுட்ரோ வில்சனால் முறைப்படி திறந்துவைக்கப்பட்டது.
* **இந்தக் கால்வாயை அமைக்க எவ்வளவு செலவாயிற்று?**
  அக்காலத்தில் 380 கோடி அமெரிக்க டொலர் செலவானது. அமெரிக்கா இந்தக் கால்வாயை அமைத்தது.
* **இதன் முக்கியத்துவம் என்ன?**
  இந்தக் கால்வாய் அமைப்பதற்கு முன் அமெரிக்காவில் சான்பிரான்சிஸ்கோ நகரில் இருந்து நியூயோர்க் செல்லும் கப்பல்கள் 20 ஆயிரத்து 900 கிலோ மீட்டர் பயணம் செய்து தென் அமெரிக்காவைச் சுற்றிக் கொண்டு தான் செல்ல வேண்டும். இந்தக் கால்வாய் அமைத்ததால் 8 ஆயிரத்து 370 கிலோ மீட்டர் பயணம் செய்தால் போதும். விரைவான பயணத்திற்கு இந்தக் கால்வாய் உதவுகிறது.
* **இந்தக் கால்வாயைப் பராமரிப்பது யார்?**
  அமெரிக்க அரசால் அமைக்கப் பட்ட 'பனாமா கால்வாய் கமிஷன்' இந்தக் கால்வாயைப் பராமரிக்கிறது. 1999ம் ஆண்டு டிசம்பர் 31ம் திகதி வரை இந்த கமிஷன் தான் பொறுப்பில் இருக்கும். பிறகு பனாமா நாடு இந்தக் கால்வாயைப் பொறுப்பேற்கும்.




## கோழி முட்டையிடவுடன் குஞ்சு பொரிப்பதில்லை ஏன்?

உயர்நிலைப் பாலூட்டிகள், ஒற்றைச் செல் உயிரிகள், ஒரு சில தாழ்நிலை உயிரிகள்-இவற்றைத் தவிர மற்ற எல்லா விலங்குகளுமே முட்டையிடுகின்றன. முட்டையிலிருந்து இளம் உயிரி வருவது, முட்டையிலுள்ள கரு உணவின் அளவைப் பொறுத்ததாகும். சில உயிரிகளின் முட்டையில் மிகக் குறைந்த அளவே கரு உணவு இருக்கும். உதாரணமாக அம்பியாக்சஸ் என்ற உயிரி கடலில் வாழ்வது. முதுகு நாணுள்ளவை என்ற வகையைச் சேர்ந்தது. இதன் முட்டையில் மிகக் குறைந்த அளவே கருவுணவு இருக்கும். இதனால் முட்டையில் இருந்து இளம் உயிரி வெளியே வர சில மணிகளே எடுத்துக் கொள்கிறது. தவளை முட்டையில் சிறிது அதிகமாகக் கரு உணவு இருக்கிறது. இதனால் தவளையின் இளம் உயிரியான தலைப் பிரட்டை வருவதற்குச் சில நாட்கள் பிடிக்கின்றன. கோழி முட்டையில் உள்ள மஞ்சள் அல்லது கரு உணவு அதிகமாக இருப்பதால் கோழிக்குஞ்சின் வளர்ச்சி மெதுவாகவே நடைபெறுகிறது. முழுவளர்ச்சியடைந்த குஞ்சு வெளிவர 21 நாட்கள் பிடிக்கின்றன. மேலும் குஞ்சு பொரிப்பதற்கு வேண்டிய வெப்பநிலை 103 பாகை F. அதனால்தான் கோழி அடை காக்கிறது. அடைக்காக்காத முட்டையில் இருந்து குஞ்சு பொரிப்பதில்லை. நம்கையில் வைத்துக் கொண்டிருந்தாலும் குஞ்சு பொரிப்பதில்லை. காரணம் நம் உடல் வெப்பம் 98.4 பாகை F தான்.

இப்பொழுது கோழிப்பண்ணைகளில் குஞ்சுகள் பொரிக்கத் தேவைப்படும் வெப்பத்தை அளிக்கும் அடைகாக்கும் மின் பெட்டிகளை வைத்திருக்கிறார்கள்.

பறவை முட்டைகளிலேயே மிகப் பெரியது நெருப்புக் கோழியின் முட்டை தான். அது பொரிக்க 42 நாட்களாகும்.

## பொக்கட் கோபர்



படத்தில் எலி போன்ற அமைப்பில் இருக்கும் பிராணியின் பெயர் கோபர். இது வட அமெரிக்காவில் உள்ளது. இது பெரிய சுரங்கப்பாதைகளில் புகுந்து இரை தேடும். அங்கிருந்து தனக்குத் தேவையான உணவு வகைகளான புல், வேர், கிழங்கு, இலைகளை எப்படி எடுத்து வருகிறது தெரியுமா? இதன் கன்னப்பகுதியில் பொக்கட் போன்றதொரு பை இருக்கிறது. அதன் மேற்புறம் உரோமங்கள் நிறைந்ததாக இருக்கும். இந்தப் பொக்கட்டில் தான் தன் தீனிகளை எல்லாம் இந்த கோபர் எடுத்து வரும். இதற்கு 'பொக்கட் கோபர்' என்றும் ஒரு பெயர் உண்டு.

www.padippakam.com

## இதுவரை

பழைய பங்களா ஒன்றில் பெண் பிணம். அதன் உடலில் ஆறு குண்டுகள். கொல்லப்பட்டது யார், கொன்றது யார்? பொலிஸ் விசாரணை நடக்கிறது. மற்றொரு கொலை. ரயில் பாதையருகே இன்னொரு பிணம். இதற்கிடையே இன்பவல்லி என்னும் பணக்கார சீமாட்டி வீட்டில் பிறந்தநாள் விருந்து நடக்கிறது. அதில் நான்கு இளைஞர்கள் கலந்து கொள்கின்றனர். விருந்தில் கலந்து கொள்ளும் ஜோதி என்ற பெண் தாராள மானவள். நன்கு குடித்திருந்தாள். அந்த நான்கு இளைஞர்களுடன் ஜாலியாக காரில் புறப்பட்டுச் செல்கிறாள். இடை நடுவே மதுவெறியில் அவள் புலம்பல் அதிகமாகிறது. பயந்து போன இளைஞர்கள் திறந்திருந்த ஒரு வீட்டில் அவளைக் கிடத்திவிட்டு காரில் பறந்துவிடுகின்றனர் அந்த வீட்டுக்கார இளைஞன் அரசன் திடீரென்று முளைத்த பெண்ணைக்கண்டு திகைத்துப் போகிறான்.

**இனி...**

இன்ஸ்பெக்டர் வேதநாயகத்தின் ஜீப் கல்லூரி வளாகத்துக்குள்ளே போகும்போதே மாணவர்களும் மற்றவர்களும் பின்னோக்கித் திசை திரும்பி விட்டார்கள்.

கல்லூரிக் கட்டடத்தையும், மாணவ விடுதியையும் சுற்றிக்கொண்டு பின்னால் விளையாட்டு மைதானத்தை நோக்கிப் போகும் போது-

பின்தொடர்ந்து வந்த போலீஸ் கூண்டு வண்டியினுள்ளே நாய் உறுமியது தெளிவாகக் கேட்டது.

விடுதியைவிட்டுத் திரும்பி மைதானத்தில் பிரவேசிக்கும் போதே சற்றே தள்ளியிருந்த முள்கம்பி வேலிக்கு பக்கத்தில் கூட்டம் தெளிவாகத் தெரிந்தது. நடுநாயகமாக அதிகாரம் செய்தவர் கல்லூரி முதல்வராகத்தானிருக்க வேண்டும்.

மண்தூசி கிளப்பியவாறு வரும் ஜீப்பைக் கண்டதும் விலகி வந்து மூக்கைப் பொத்திய கைக்குட்டையை விலக்கிப் பார்த்தார்.

நீலப் புகையைப் பின்நோக்கி காற்றில் பறக்கவிட்டு திரும்பி நின்றதும் வேதநாயகம் கம்பீரமாக பூட்ஸ் காலைத் தரையில் பதித்து இறங்கினார்.

"நீங்கள் தான் பிரின்ஸ்பாலா?" கேட்டார். "யாரும் எதையும் கலைக்கல்லையே?"

"பக்கத்திலேயே போகல்ல சார்! இந்தக் குமட்டல் நெருங்கவிடல்ல."

முள் கம்பியைத் தாண்டி போலீசார் போய்ப் பார்த்தார்கள்.

இறந்தவன் ஆண். இருபதைத் தொடும் இளைஞன். ஆறு இடங்களில் நெஞ்சு பொத்தலாகி ரத்தம் சிதறடித்திருந்தது. அங்கே லட்சம் கோடியாக கிருமிகள் படர்ந்து கிட்டத்தட்ட மார்பையே மூடியிருந்தன. உலர்ந்து போன ரத்தம் வீச்சமடித்து யாரையும் நெருங்கவிடாமல் செய்து கொண்டிருந்தது உண்மை.

"யார் முதல்ல பார்த்தது?"

"நாங்கதான் சார். காலை ஓட்டம் ஓடிட்டிருக்கிறச்ச இந்த இடம் வருகிறப்ப எல்லாம் பயங்கரமா குமட்டலை உணர்ந்து சந்தேகப்பட்டு பார்த்தப்பதான் அங்கே அந்த பூட்ஸ் கால் தெரிந்தது. உடனே கல்லூரி முதல்வருக்குச் சொல்லி உங்களுக்கு தகவல் தந்தோம்."

"யாருக்காவது அவனை அடையாளம் தெரிகிறதா பாருங்க?"

"இல்லே சார்."

"நல்லா கவனமா பார்த்து சொல்லுங்க. உங்கள் விடுதி பையனில்லையே?"

"பார்த்துட்டோம். எங்க விடுதியில யாரும் குறையல்ல. அப்பவே எல்லாரையும் சோதித்துப் பார்த்துட்டோம்."

"அதே கதை. மறுபடியும் அதே கதை. இவனையும் எங்கேயோ கொலை செய்துட்டுதான் இங்கே கொண்டு வந்து போட்டிருக்கணும். உயிர் போய் ரத்தம் வடிகிறது நின்ற அப்புறம்தான் இங்கே கொண்டு வந்து போட்டிருக்கணும், மண்ணில் ரத்தம் எதுவும் பாய்ந்து கிடக்கல்லை."

பார்வைக்கே பெரிய இடத்துப் பிள்ளை மாதிரிதான் தெரிகிறான்.

"இப்ப என்ன பண்ணப்போறீங்க இன்ஸ்பெக்டர்?"

"இவனையும் சவக்கிடங்குக்கு அனுப்பி அடையாளம் கேட்டு விளம்பரம் தர வேண்டியதுதான்."

"நாங்கள் போகலாமா இன்ஸ்பெக்டர்?"

"போகலாம். போட்டோகிராப்பர் வந்ததும் படங்களை எடுத்தான பிறகு போஸ்ட் மார்ட்டத்துக்குக் கொண்டு போய்விட வேண்டியதுதான். நீங்க போகலாம்."

அவர்கள் போனதும் உதவியாளரிடம் சொன்னார்- "நேற்று நடந்த பெண் கொலைக்கும் இந்தக் கொலைக்கும் ஒற்றுமை அதிகம். அநேகமாக ஒரே ஆள் செய்த கொலையாகத் தானிருக்க வேண்டும்."

"என்ன பண்ணப் போறீங்க சார்?"

"அதான் சொன்னேனே? இன்றைய மாலை செய்தித்தாள்களிலேயே இரண்டு சவங்கள் முகத்தைப் போட்டு அடையாளம் தெரிந்தவர்களை கூப்பிட வேண்டியதுதான்."

"இந்த முகம் கண்டு பிடிக்கிறது கஷ்டமாகத்தானிருக்கும்னு நினைக்கிறேன் சார்."

"ஏன்?"

"வாய் இயற்கையாக இல்லாம கோணிகிட்டு கண்ணெல்லாம் பிதுங்கித் தெரிகிறது. தெளிவாக இல்லை."

உண்மை தான்.

பெருமூச்செறிந்து விட்டுச் சொன்னார்: "பார்க்கலாம்."

★ ★ ★

கமிஷனர் கூப்பிட்டு விசாரித்த போது




## மர்மக்கதை மன்னன் ராஜேந்திர குமார்

கூட அதையே தான் சொன்னார். "இரண்டு கொலைகளுக்கும் சம்பந்தமிருக்கிறதாத்தான் நினைக்கிறேன் சார்."

"எப்படி?"

"ஒரே மாதிரி ஆறு குண்டுகளும் வெறித்தனமாக மார்பிலேயே- அதுவும் மிக அண்மையிலிருந்து சுட்டுத்தள்ளியிருக்கிறார்கள். பார்க்கலாம் சார்! இன்று மாலை பேப்பர்களில் படத்துடன் செய்தி வருகிறது. யாராவது வரலாம்."

"நேற்று கொடுத்த விளம்பரத்தில் பயன் இருந்ததா?"

"ராத்தரி ரொம்ப நேரம் வரை காத்திருந்து பார்த்தேன். எந்த ஒரு ரெஸ்பான்ஸுமில்லை. விசாரணையும் வரவில்லை. ஆனால் இன்று வருமென்று எதிர்பார்க்கிறேன் சார்."

"பெஸ்ட் அஃப் லக்."

★ ★ ★

அன்று மாலை-

ஸ்டேஷனில் காத்திருந்தார் இன்ஸ்பெக்டர் வேதநாயகம். கிட்டத்தட்ட பொறுமை இழந்து கிளம்பியபோது தான் அந்த ஆள் வந்தான். அவன் வரும் முன் சாராய நெடி வந்தது. பட்டச் சாராய நெடி.

வெளியிலேயே காவல் நின்ற ஆள் காலில் விழுந்து புலம்பினான்.

"காணலியே. ஐயா ரெண்டு நாளா காணலியே. என் ராசத்தியை கண்டு பிடிச்சு கொடுங்க துரை! உங்களுக்கு கோயில் கட்டி கும்பிடறேன் சாமி."

"ஏய் உள்ளே போய் புகார் கொடு. போ."

"ஐயய்யோ... ஐயய்யோ..."

"ஷட் அப்." என்றார் இன்ஸ்பெக்டர். "ஏன் மேன்கத்தற?"

"என் அழகுகிளி- என் ராசாத்தியைக் காணலியே."

"யாரு பொண்டாட்டியா?"

"அவ ஏன் போகிறா? என் சின்ன வீட்டைக் காணலியே சாமி! ஐயா தொரை கண்டு பிடிச்சுக் கொடேன்."

"அடையாளம் சொல்லு. மெல்லிசா ஒடிசலா இருக்குமா?"

"ஆங்? இல்லிங்க. வேளைக்கு படி சோறு தின்னும். சும்மா ஜிங்குனு அராபி குதிரை கணக்கா நிற்குமுங்க. செம நாட்டுக்கட்டை! வாய் நிறைய புகையிலை அமுக்கிக்கிட்டு இருக்கும்."

"கனமா நீளமான கூந்தலிருக்குமா?"

"இல்லிங்க. போன வாரம்தான் திருப்பதிக்குப் போய் மொட்டை போட்டு வந்துச்சிங்க."

இன்ஸ்பெக்டர் முகத்தில் ஏமாற்றம் வடிந்தது.

"செத்துப் போச்சோன்னு சந்தேகமுங்க. கண்டுபிடிச்சு குடுங்க தொரை."

"செத்துப் போனவங்களை எங்கே போறாங்கன்னு இன்னமும் யாரும் கண்டு பிடிக்கல்ல." படத்தைக் காட்டினார்.

"இந்தப் பொண்ணா பாரு?"

"அய்யோ! அய்யோ"! இதானுங்க. இதே தானுங்கோவ். ஐயோவ் என் ராசாத்தி பூட்டியா நீ?"

"வாயை மூடு. இது உன் ஆளு இல்லையே."

"இதான் சாமி. இதே தான். எனக்கு தெரியாம பூடுமா? அயோ, அங்குலம் அங்குலமா பார்த்திருக்கேனே."

"அடச்சே! நிதானத்தில் இருக்கிறச்ச வந்து பாரு. இப்ப இருக்கிற நிலைமைக்கு அந்த கான்ஸ்டபிள் கூட உன் ஆளு மாதிரியே தெரியும்."

"இன்னாங்கரே சாரு?"

"உன் சின்ன வீடு இது இல்லே. ஒல்லியா பெரிய பணக்கார இடத்துப் பொண்ணு. உன் ஆளு மாதிரி நாட்டுக் கட்டையில்லே. ஒரு வாரம் முந்தி மொட்டை போட்ட தலையில இவ்வளவு முடி வளராது. உள்ளூர்லேயே எங்காச்சுமிருக்கும். தேடிப் பார் போ."

"அதா? அப்ப போவச் சொல்றீங்களா?"

"புகார் ஒண்ணு எழுதிக் கொடுத்துட்டு போய்கிட்டே இரு. ரைட்டர் சார், எழுதி கையெழுத்து வாங்கிக்குங்க."

"அயா என் ராசம்மம்மா. என் ராசாத்தி" என்று புலம்பிக்கொண்டே வெளியேறிப் போனான், புகார் எழுதித்தராமலே.

அவன் போன கொஞ்ச நேரத்திற்கெல்லாம் ஒரு பெண் கண்ணீருடன் வந்தாள். "இன்ஸ்பெக்டர் சார்! அந்த சவத்தை நான் பார்க்கணும்."

"ஏன்?"

"என் காதலனை மூனு நாளாக் காணல. என்ன தான் ஆனாலும் தினம் ஒரு வேளையாவது என்னை பார்க்காம இருக்க மாட்டாரே. எனக்கு சந்தேகமாயிருக்கு."

"பத்திரிகையில படத்தைப் பார்த்தீங்களா?"

"பார்த்தேனே! கிட்டத்தட்ட அதே ம்ாதிரி உருவம். தான் சந்தேகப்பட்டு வந்திருக்கேன் ப்ளீஸ்."

"வாங்க போய் பார்க்கலாம்." அவசரமாக கிளம்பினார்.

"அவங்க வீட்டு விலாசம் தெரியுமா?"

"தெரியும். அவங்களும் வரல்லையேன்னு கவலைப்பட்டு கிட்டிருக்கிறாங்க. போகிற வழியில அவங்க அப்பாவையும் கூட்டிட்டு போயிடலாம் சார்! இந்நேரம்






கோயமுத்தூர்லேர்ந்து வந்து இருப்பார். எஸ்.டி.டி. போட்டு வரவழைச்சு இருக்கிறாங்க."

"வழியை சொல்லு."

அவள் சொல்லச் சொல்ல ஜீப் முன்னெறிப் போய்க் கொண்டிருந்தது.

வீட்டில்-

அவன் அம்மா மட்டும் தானிருந்தாள்- முகத்தில் சின்ன கவலைக் கோடுகூட இல்லாமல். போலீசைக் கண்டதும் மிரண்டாள்.

"என்னடியிது போலீசோட வந்து நிக்கிறே?"

"அம்மா! காலையிலே கண்டு பிடிச்ச பிணம் உங்க பிள்ளையுடையதாக இருக்குமோன்னு சந்தேகம். போய் பார்க்கப் போறோம். அவங்கப்பா வரல்லையா?"

"இல்லே. வரவேணாம்னு போன் பண்ணி சொல்லிட்டோம். என்ன கூத்தடிக்கிறே நீ? என்ன தான் அவன் வேற பொண்ணைத் தேடிக்கிட்டாலும் அதுக்கு இப்படியா அசிங்கப் படுத்துகிறது?"

அதிர்ந்தாள். "என்னம்மா சொல்றீங்க? இன்னொரு பெண்ணா?"

"ஆமாம். நெய்வேலியிலேர்ந்து ஒரு பெண் வீட்டார் நேத்து வந்தாங்க- பெரிய இடம். போட்டோ பார்த்தே மயங்கிட்டு அவங்களோட நெய்வேலி போய் பார்த்திருக்கான்."

"பின்னே ஏன் அப்ப மதியம் ஒண்ணும் தெரியலன்னு அழுதீங்களாம்?"

"அப்ப எனக்கு விஷயம் தெரியாதே? புள்ளையைக் காணலயேன்னு கதறிட்டேன். நீ அப்படி போனதும் தான் வந்து நின்னு இதான் விஷயம்னு சொன்னான்."

"வந்துட்டாரா?"

"மாடியிலதான் இருக்கான்" என்ற அம்மாள்-

"யூ சிட்" என்று இவள் பாய தடுத்து நிறுத்தினாள்.

"நாங்களா பார்த்து செய்த கல்யாண ஏற்பாடு. ஏதாச்சும் கலாட்டா பண்ணினே சும்மாயிருக்கமாட்டேன் ஆமா." படியிறங்கி வந்த அந்த வாலிபனும் "கெட் அவுட்" என்று கத்த அவர்களை சண்டைபோட விட்டு வெளியேறிப் போனார் வேதநாயகம்.

"கதை வேறு தினுசாக மாறிப் போச்சு," என்றார் உதவியாளரிடம்.

அன்றைய இரவு பூராவும் எந்த சம்பவமுமில்லாமல் அமைதியாகவே கழிந்தது.

மறுநாள் காலையில் தான்-அவர்கள் வந்தார்கள்.

அந்தம்மாள் நடுத்தர வயதைக் கடக்கும் நிலையிலிருந்தார். கொஞ்சமாக தளர்ந்து போய் தெரிந்தாள். கண்ணில் கலக்கமும் கவலையுமாக, எந்த நிமிஷமும் வெடித்து அழ தயாரானவளைப் போல பார்த்தாள்.

"முந்தாநாள் வேலையிலிருந்து திரும்ப வேண்டிய என் மகள் இந்த நிமிஷம்வரை திரும்பல்ல. என்ன ஆச்சன்னே தெரியல்லையே."

"ஆபீஸில் விசாரிச்சீங்களா?"

"அங்கே அவள் வரவில்லையாமே. ரெண்டு நாளாக அவங்களும் தேடிட்டுத் தானிருக்கிறாங்க. சொல்லாமல் கொள்ளாமல் லீவ் போடுகிற பெண்ணே இல்லை."

"புகார் தர விரும்பறீங்களா?"

"ஆமாம் பேப்பர்ல வந்த உருவம் தெளிவாக தெரியல்ல. ஆனா அந்தப் புடவைதான் குழப்புது. என் மகளுக்கு போன தீபாவளிக்கு ஆசையாக நான் வாங்கிக் கொடுத்தது மாதிரியே இருக்கு."

"வாங்க. நேரில பார்த்தால் அடையாளம் சொல்லுவீங்க இல்லே?"

"சொல்லுவேனே. அதுக்கு தான் வந்திருக்கேன். ப்ளீஸ் இன்ஸ்பெக்டர் சார்." என்று அவள் கெஞ்சும் போதே-

முப்பது வயது இளைஞன் ஒருவன் பரபரப்பாக உள்ளே வந்தான். கையிலிருந்த மாலைப் பத்திரிகையைக் காட்டிக் கேட்டான். "இந்த ஒரிஜினல் படமிருக்குமா? பத்திரிகையில தெளிவா தெரியல்ல."

"யாராக இருக்கும்னு சந்தேகப் படறீங்க?"

"முந்தா நாள் சிநேகிதியோட ஷாப்பிங்போகிறேன்னு போன என் மனைவி இன்னமும் கூட வீடு திரும்பல்ல. கவலையாயிருக்கு. சிநேகிதிங்க வீட்டிலே நேற்று பூராவும் அலைஞ்சேன். எங்கேயுமில்லே. இன்றைக்குத்தான் பேப்பர்ல பார்த்தேன்."

"சவக் கிடங்குக்குத்தான் போகிறோம். நீங்களும் வாங்க, நேரிலேயே பார்த்து அடையாளம் சொல்லலாம்."

சவக் கிடங்கில்- போர்வை நீக்கிய முகத்தைப் பார்த்து இரண்டு பேருக்கும் நிம்மதி வந்தது.

"நல்ல வேளை என் மகளில்லே."

"என் மனைவியுமில்லே. அனாவசியமா ரொம்பவும் பயந்துட்டேன்."


கிளம்பியபோது ஏதோ ஒருஉந்துதல் வர இன்ஸ்பெக்டர் சொன்னார்: "ஒரு நிமிஷம். வந்தது வந்தீங்க இந்த அடையாளம் தெரியுதான்னு பார்த்துச் சொல்லுங்க." என்று அந்த இளைஞன் பிணமிருந்த பீரோவை இழுத்து துணியை விலக்கி முகத்தைக் காட்ட-

இருவர் முகத்திலும் வெளிச்சம் வந்தது.

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்













பெயர்: எஸ். கௌரிஸ்வரன்.
வயது: 21
முகவரி: 297, செட்டியார் தெரு, கொழும்பு -11.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: எம். பஸ்லி.
வயது: 20
முகவரி: 172/1, தெஹியங்க, முறுத்தலாவ.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கிரிக்கெட்.

பெயர்: ரி. அழகேஷ்.
வயது: 23
முகவரி: ASTERNWEG- 4, 6440 BRUNNEN, SWITZERLAND.
பொழுது போக்கு: ஓவியம், பத்திரிகைகள்.

பெயர்: எம். நிர்பான்.
வயது: 20
முகவரி: 19, பிரிட்ஜ் சைட், மருதானை, கொழும்பு 10.
பொழுது போக்கு: புத்தகம் படித்தல்.

பெயர்: எம். விக்னேஸ்வரி.
வயது: 21
முகவரி: 178, தங்கநகர், கிளிவெட்டி.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: முகமட் றிஸ்வி.
வயது: 25
முகவரி: P.O.BOX - 91843 RIYADH- 11643, K.S.A.
பொழுதுபோக்கு: பேனாநட்பு, கரப்பந்து.

பெயர்: எம். நைஸர்.
வயது: 22
முகவரி: 31/111, கொலேடந்த, வெலிகம.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: ஏ. முஸாதிக்.
வயது: 16
முகவரி: பிர்தான வீதி, அஸ்ரிகம, கம்பிரிகஸ்வெவ, அனுராதபுரம்.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி, கிரிக்கெட்.

பெயர்: ஆர். அஹர்ஜன்.
வயது: 32
முகவரி: V.V.VEWETO NO. 14, 95129 CATANIA. ITALY.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: கே. காந்தராஜா.
வயது: 20
முகவரி: வன்னியார் வீதி, களுதாவளை-01 களுவாஞ்சிக்குடி.
பொழுது போக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம்.

பெயர்: கே. கனகராஜா.
வயது: 22
முகவரி: பீட்றூ எஸ்டேட், நுவரெலியா.
பொழுது போக்கு: விளையாட்டு, பேனாநட்பு, வானொலி.

பெயர்: எம். பஷீர்.
வயது: 35
முகவரி: MOMURA SHOTEN, FURUYA HONGO. 1367, KAWAGOE, SHI, SAITAMA-KEN, JAPAN.
பொழுது போக்கு: வழமையானவை.



படிப்பகம்

www.padippakam.com

# மக்சீம் கார்க்கி

# தாய்



"முடியுமென்று தோன்றினால், நாம் நிச்சயம் அவர்கள் தப்பியோடுவதற்கு வழிசெய்ய வேண்டியதுதான். சந்தேகமே வேண்டாம்" என்றான் நிகலாய். "ஆனால் முதல் முதலாக நாம் ஒரு விஷயம் தெரிந்துகொள்ளவேண்டும். சிறையிலுள்ள நமது தோழர்கள் இதை விரும்புவார்களா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டாமா?"

சாஷா தன் தலையைத் தொங்க விட்டாள்.

சோபியா ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தாள்; தனது சகோதரனை லேசாகப் பார்த்துக் கொண்டே, அவள் தீக்குச்சியை ஒரு மூலையில் விட்டெறிந்தாள்.

"அவர்கள் எப்படி இதை விரும்பாமல் இருப்பார்கள்?" என்று பெருமூச்செறிந்தாள் தாய். "இது எப்படிச் சாத்தியம் என்பதைத் தான் என்னால் நம்ப முடிய வில்லை."

அந்தக் காரியத்தை வெற்றிகரமாக எப்படி நடத்தமுடியும் என்பதைத் தெரிந்து கொள்ள ஆவலாய்த் துடித்தாள் தாய். ஆனால் அவர்களோ வாய் பேசாது மௌனமாயிருந்தார்கள்.

"நான் நிகலாய் வெஸோவ்ஷிகோவைப் பார்க்க வேண்டும்" என்றாள் சோபியா.

"அவனை எங்கு எப்போது சந்திக்க இயலும் என்பதை நான் உங்களுக்கு நாளைக்குச் சொல்கிறேன்" என்றாள் சாஷா.

"அவன் என்ன செய்யப்போகிறான்?" என்று அறைக்குள் மேலும் கீழும் நடந்தவாறே கேட்டாள் சோபியா.

"அவனை அவர்கள் புதிய அச்சகத்திலே அச்சுக்கோப்பவனாக வைக்கலாம் என்று யோசிக்கிறார்கள், அதுவரையிலும் அவன் அந்த ஷிகாரியோடு குடியிருப்பான்."

சாஷா தன் முகத்தைச் சுழித்தாள்; அவள் முகத்தில் மீண்டும் அந்த அழுத்த பாவம் குடியேறியது. அவள் எரிந்து விழுந்து பேசினாள்.

"நாளை மறுநாள் நீங்கள் பாவெலைப் பார்க்கச் செல்லும்போது அவனிடம் ஒரு சீட்டுக் கொடுத்துவிட்டு வரவேண்டும்" என்று தாயை நோக்கிக் கூறிக் கொண்டே, நிகலாய் பண்ட பாத்திரங்களை விளக்கும் இடத்துக்குப் போனான்.

"சொல்கிறது புரிந்ததா? அவர்கள் விரும்புகிறார்களா என்பதை..."

"தெரியும், தெரியும்" என்று அவசர அவசரமாகப் பதில் சொன்னாள் தாய். "நான் எப்படியும் அதைக் கொடுத்து விட்டு வருகிறேன்."

"சரி, நான் போகிறேன்" என்றாள் சாஷா. அவள் ஒவ்வொருவரோடும் விரைவாகவும் மௌனமாகவும் கைகுலுக்கி விட்டு, ஏதோ ஒருவிதமான அழுத்தந்திருத்தமான நடைபோட்டுக் கொண்டு விறைப்பாக அங்கிருந்து வெளியே சென்றாள்.

அவள் போன பிறகு, சோபியா தன் கரங்களைத் தாயின் தோள்களின் மீது போட்டு, அவள் உட்கார்ந்திருந்த நாற்காலியை முன்னும் பின்னும் ஊஞ்சலாட்டினாள்.

"இந்த மாதிரி மருமகளை உங்களுக்குப் பிடிக்குமா, நீலவ்னா?" என்று கேட்டாள் அவள்.

"எனக்கா? நன்றாய்ச் சொன்னாய். அவர்கள் இருவரையும் ஒரு நாளைக்காவது ஒன்றாகப் பார்க்கின்ற காலம் வந்தால்!..." என்று கத்தினாள் தாய். அவளுக்கு அழுகையே வந்துவிடும் போலிருந்தது.

"ஆமாம், சிறு ஆனந்தம் என்றால் எல்லோருக்குமே நல்லது தான்" என்று மெதுவாகச் சொன்னான் நிகலாய். "ஆனால் சிறுஆனந்தத்தால் யாருமே திருப்தியடைவதில்லை. ஆனால் ஆனந்தம் பெருத்துவிட்டாலோ-அதன் தரமும் மலிவாகி விடுகிறது."

சோபியா பியானோ வாத்தியத்தருகே சென்றாள்; ஒரு சோக கீதத்தை இசைக்கத் தொடங்கினாள்.

★ ★ ★

மறுநாள் காலையில் ஆஸ்பத்திரியின் வெளிவாசலுக்கருகே சுமார் முப்பது நாற்பது பேர் நின்று கொண்டிருந்தார்கள்; தங்கள் தோழனின் சவப்பெட்டியைப் பெற்றுத் தூக்கிச் செல்வதற்காக அவர்கள் காத்து நின்றார்கள். அவர்களைச் சுற்றிலும் உளவாளிகள் திரிந்து கொண்டிருந்தார்கள்.

ஜனங்கள் பேசுகின்ற பேச்சையும், முகபாவங்களையும் நடவடிக்கைகளையும் அவர்கள் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார்கள். தெருவுக்கு அப்பால் எதிர்த்திசையில் ஒரு போலீஸ்படை இடைகளிலே ரிவால்வர்கள் சகிதம் நின்று கொண்டிருந்தது. அந்த

> "இணையும் ஈடும் இல்லாத
> இந்தப் போரில் நீங்களெல்லாம்
> பணயம் வைத்தே உம்முயிரைப்
> பலியாய்க் கொடுத்தீர் கொடுத்தீரே!
> ..........
> ..........
> சென்று வாராய், தோழனே!
> சென்று வாராய், தோழனே!"

உளவாளிகளின் துணிச்சலைக் கண்டும்; போலீஸ் காரர்களின் ஏளனமான புன்னகையைக் கண்டும் ஜனங்களுக்கு ஆத்திரம் மூண்டுகொண்டு வந்தது; போலீஸ்காரர்கள் எந்த நிமிஷத்திலும் தம் சக்தியை வெளியிடத் தயாராய்த் துடிதுடித்துக்கொண்டிருந்தார்கள். சிலர் தங்களது ஆத்திரத்தைக் கேலியும் கிண்டலுமாகப் பேசி மறைக்க முயன்றார்கள். சிலர் தங்களுக்கு இழைக்கப்படும் அநீதியை ஏறிட்டுப் பார்த்துக் கொண்டிருக்க விரும்பாமல், தங்கள் தலைகளைத் தொங்க விட்டு. தரையையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். வேறு சிலர் தங்களது உணர்ச்சிகளை அடக்க முடியாமல், வாய்ச் சொல்லைத் தவிர எந்தவித ஆயுதமுமற்ற மக்களைக் கண்டு பயந்து நடுங்கும் அதிகாரிகளை நோக்கிக் குத்தலாகப் பேசினார்கள். மக்களது காலடியிலே, காற்றினால் பறந்துவந்து விழுந்த பழுத்து வதங்கிய இலைகள் பரவிக்கிடந்த தெருவின் சாம்பல் நிறச் சரளைகளின் மீது இலையுதிர்காலத்தின் வெளிறிய நீலவானம் பளபளத்து ஒளிர்ந்தது.

தாய் கூட்டத்தினிடையே நின்று, தன்னைச் சுற்றியுள்ள பரிச்சயமான முகங்களைக் கண்டு வருத்தத்தோடு நினைத்துக் கொண்டாள்:

"நீங்கள் ஒன்றும் அதிகம் பேர் வரவில்லை. தொழிலாளர்களே ரொம்ப ரொம்பக் குறைச்சல்..."

கதவுகள் திறந்தன, சிவப்பு நாடாக்களால் கட்டப்பெற்ற மலர் வளையங்கள் சுற்றிய சவப்பெட்டியின் மேற்பகுதியைச் சிலபேர் வெளியே கொண்டு வந்தார்கள். குழுமிநின்ற ஜனங்கள் உடனே தங்கள் தொப்பிகளை அகற்றி அதற்கு மரியாதை செலுத்தினார்கள்; அவர்கள் செய்த இந்தச் செய்கை ஒரு பறவைக்கூட்டம் திடீரென கணத்தில் சிறகை விரித்துப் பறக்கத் தொடங்குவது போலத் தோன்றியது. சிவந்த முகத்தில் கறுத்த பெரிய மீசைகொண்ட ஒரு நெட்டையான போலீஸ் அதிகாரி விறுவிறென்று கூட்டத்தினரை நோக்கி நடந்து வந்தான். அவனுக்குப் பின்னால் ஜனங்களைப் பிளந்து தள்ளிக் கொண்டும், தங்களது பூட்ஸ் கால்களை ஓங்கி மிதித்துக் கொண்டும் சிப்பாய்கள் சிலர் வந்தார்கள்.

"அந்த நாடாக்களைத் தூர எடு!" என்று கரகரத்த குரலில் உத்தரவிட்டான் அந்த அதிகாரி.

ஆணும் பெண்ணும் அவனைச் சுற்றி நெருங்கிச் சூழ்ந்தார்கள்; ஆத்திரத்தோடு பேசினார்கள்; தங்கள் கைகளை அசைத்து வீசி ஒருவரையொருவர் முண்டியடித்து முன்னேறினார்கள். தாயின் கண் முன்னால் உணர்ச்சி வசப்பட்டு வெளுத்துப் போன முகங்களும் துடிதுடிக்கும் உதடுகளும் பிரகாசித்தன. ஒரு பெண்ணின் கன்னங்களில் அவமானத்தால் ஏற்பட்ட கண்ணீர் பொங்கி வழிந்து உருண்டோடியது.

"அடக்குமுறை ஒழிக!" என்று ஒரு இளங்குரல் கோஷமிட்டது. எனினும் அந்தக் கோஷம் அங்கு நடந்து கொண்டிருந்த வாக்குவாதத்தில் அமிழ்ந்து அடங்கிவிட்டது.

தாயின் உள்ளத்தில் சுருக்கென்று வேதனை தோன்றியது; அவள் தனக்கு அடுத்தாற் போல் நின்று கொண்டிருந்த எளிய உடைதரித்த இளைஞனைப் பார்த்தாள்.

"சவச் சடங்கைக்கூட தோழர்களின் இஷ்டம்போல் நடத்துவதற்கு விட மாட்டேனென்கிறார்கள்" என்று அவள் ஆக்ரோஷத்தோடு சொன்னாள். "இது ஓர் அவமானம்!"

வெறுப்புணர்ச்சி மேலோங்கியது. ஜனங்களது தலைகளுக்கு மேலாகச் சவப்பெட்டியின் மூடி அசைந்தது; அதிலுள்ள சிவப்பு நாடாக்கள் காற்றில் அசைந்தாடின. அந்தப் பட்டு நாடாக்கள் ஜனத்திரளுக்கு மேலாகப் படபடத்து ஒலித்தன.

போலீசாருக்கும் ஜனக்கூட்டத்துக்கும் கலவரம் ஏற்படக்கூடும் என்ற பயம் தாயின் மனத்தில் ஏற்பட்டது. எனவே அவள் ஏதேதோ முணுமுணுத்துக் கொண்டே அங்குமிங்கும் விறுவிறென நடந்து திரிந்தாள்.

"அவர்கள் அப்படி விரும்பினால் அவர்கள் இஷ்டப்படியே நடந்து தொலையட்டுமே! வேண்டுமானால், அவர்கள் அந்த நாடாக்களை எடுத்துக் கொள்ளட்டுமே! நாம்தான் கொஞ்சம் விட்டுக் கொடுப்போமே!"

யாரோ ஒருவனின் கூர்மையும் பலமும் கொண்ட குரல் அங்கு நிலவிய சப்தத்தை விழுங்கி மேலோங்கி ஒலித்தது:

"எங்களது தோழனை- உங்களது சித்திரவதையால் உயிர் நீத்த எங்களது தோழனை கல்லறைக்கு வழியனுப்பிவைக்கும் எங்கள் உரிமையைத்தான் நாங்கள் கோருகிறோம்..."

ஓர் உரத்த பாட்டுக்குரல் ஒலிக்க ஆரம்பித்தது:

**இணையும் ஈடும் இல்லாத**
**இந்தப் போரில் நீங்களெல்லாம்**
**பணயம் வைத்தே உம்முயிரைப்**
**பலியாய்க் கொடுத்தீர் கொடுத்தீரே!**

"நாடாக்களை எடு! அவற்றை வெட்டித் தள்ளு, யாகவ்லெவ்!"

உருவிய வாள்வீச்சு ஒலித்து இரைந்தது. கூச்சல்களை எதிர்பார்த்து தாய் தன் கண்களை மூடிக்கொண்டாள். ஆனால் ஜனங்களோ முணுமுணுக்கத்தான் செய்தார்கள்; சீற்றங்கொண்ட ஓநாய்களைப்போல உறுமினார்கள். பிறகு அவர்கள் மௌனமாக, தங்கள் தலைகளைத் தொங்கப்போட்டவாறே விலகி நடந்தார்கள். அவர்களது காலடியோசை தெரு முழுதும் நிரம்பி ஒலித்தது.

அலங்கோலமாக்கப்பட்ட சவப்பெட்டியின் மேலிருந்து கசங்கிப்போன பூமாலைகள் ஜனக்கூட்டத்தின் தலைகளுக்கு மேலாக உதிர்ந்து மிதந்தன. அவர்களுக்குப் பக்கத்தில் குதிரைப் போலீஸ்காரர்கள் பாராக் கொடுத்து உலாவிக்கொண்டிருந்தார்கள். தாய் நடைபாதை வழியாக நடந்து வந்தாள். அவளால் இப்போது சவப்பெட்டியைக்கூடக் காண முடியவில்லை. அந்தச் சவப்பெட்டியைச் சுற்றிலும் தெரு முழுவதுமே முன்னும் பின்னும் ஜனத்திரள் பெருகி வந்தது. சாம்பல் நிறம் படைத்த குதிரைப் போலீஸ்காரர்கள் பின் புறத்திலும் வந்து கொண்டிருந்தார்கள். ஆனால் அதே சமயம் இருமருங்கும் போலீஸ்காரர்கள் தங்களது உடைவாளின் கைப்பிடியில் கைகளைப் போட்டவாறே நடந்து வந்து கொண்டிருந்தார்கள். எங்கு பார்த்தாலும் துப்பறிபவர்களின் கூரிய கண்கள் ஜனங்களின் முகங்களைக் கூர்ந்து கவனித்துக் கொண்டே வருவதைத் தாய் கண்டாள்.

**சென்று வாராய், தோழனே!**
**சென்று வாராய், தோழனே!**

என்று இருசோகக் குரல்கள் பாடின.

"பாட்டில்லாமலே போகலாம்" என்று யாரோ கத்தினார்கள். "பெரியோர்களே! நாம் மௌனமாகவே செல்வோம்!"

அந்தக் குரலில் ஏதோ ஓர் உறுதியும் அழுத்தமும் இருந்தது. அந்தச் சோக கீதம் திடீரென்று நின்றது; பேச்சுக்குரல் அடங்கியது. சரளைக் கற்கள் பாவிய தெருவில் ஒரே கதியில் செல்லும் மங்கிய காலடியோசை மட்டுமே கேட்டது. இந்த ஓசை ஜனங்களுக்கு மேலாக எழுந்து நிர்மலமான வானமண்டலத்தில் மிதந்து, எங்கோ தூரத்தொலைவில் பெய்யும் புயல் மழையின் இடியோசையைப் போல், காற்றை நடுக்கி உலுக்கியது. ஒரு பலத்த குளிர்காற்று உரத்து வீசி, தெருப் புழுதியையும் குப்பை கூளங்களையும் வாரியள்ளி ஜனங்களின் மீது எரிச்சலோடு வீசியெறிந்தது. அவர்களது தலைமீதும், சட்டை துணிமணிகள் மீதும் வீசியடித்து கண்களை இறுகமூடச் செய்தது. மார்பில் ஓங்கியறைந்தது; காலைச் சுற்றி வளைத்து வீசியது...

அந்த மௌன ஊர்வலம் பாதிரிகள் யாருமின்றி, இதயத்தைக் கவ்வும் இனிய கீதம் எதுவுமின்றிச் சென்றது. அந்த ஊர்வலமும், ஊர்வலத்தில் தோன்றிய சிந்தனை தோய்ந்த முகங்களும், நெரிந்த நெற்றிகளும் தாயின் உள்ளத்தில் பயங்கர உணர்ச்சியை நிரப்பின. மெது மெதுவாகப் பல சிந்தனைகள் அவள் மனத்தில் வட்டமிட்டன. அந்தச் சிந்தனைகளை

> "சவச் சடங்கைக் கூட-
> தோழர்களின்
> இஷ்டம்போல்
> நடத்துவதற்கு விட
> மாட்டே
> என்கிறார்கள்"
> ..........
> போலீசாருக்கும்
> ஜனக்கூட்டத்துக்கும்
> கலவரம்
> ஏற்படக்கூடும்.

அவள் சோகம் தோய்ந்த வார்த்தைகளால் பொதிந்து தனக்குள் சொல்லிக் கொண்டாள்:

"உங்களில் அநேகர் சத்தியத்துக்காகப் போராடவே இல்லை..."

அவள் குனிந்த தலையோடு நடந்து சென்றாள். அவர்கள் இகோரைப் புதைக்கச் செல்வதாகவே அவளுக்குத் தோன்றவில்லை. ஆனால் தனக்கு மிகவும் அத்தியாவசியமான அருமையான நெருங்கிய ஏதோ ஒன்றைத்தான் அவர்கள் புதைக்கப் போவதாக அவளுக்குப் பட்டது, அவள் நிராதரவான உணர்ச்சிக்கு ஆளானாள்; அந்தக் காரியத்துக்கு, தான் அன்னியமாகப்போனது மாதிரி உணர்ந்தாள். இகோரை வழியனுப்பும் இந்த மனிதர்களுடன் ஒத்துப்போகாத ஒரு சமனமற்ற கவலையுணர்ச்சி அவள் இதயத்தில் நிரம்பி நின்றது.

"உண்மைதான், இகோர் கடவுள் இருப்பதாக நம்பியதில்லை; இந்த மனிதர்களும்தான் நம்பவில்லை..." என்று அவள் தனக்குள் நினைத்துக்கொண்டாள்.

அந்த எண்ணத்தையே மேலும் மேலும் தொடர விரும்பவில்லை.

(தொடர்ந்து வரும்)

# அந்நியம்



என் மனதில் பாசியாய் படிந்திருந்த நினைவுகளுக்கும், நிதர்சனத்திற்கும் நிறைய வித்தியாசங்கள் இருப்பதாகவே புலப்பட்டது. என் இருப்பிடம் எங்கோ தொலைவில் இருந்தாலும் என் பாரம்பரிய அலகுகளின் பூர்வீகம் இங்குதான் என்பதை உணர்கின்றேன். 'வன்னிமண்' என் வாழ்க்கையின் மூலவேர்கள் பதிந்துள்ள மண். ஈரப்பெரியகுளத்தில் ஒருநாள் அனுமதித்துண்டு பெற்று வவுனியாவுக்குள் கால்பதித்தேன். நான் முன்பு கண்டிராத பரபரப்பு, எங்கணும் மனிதத் தலைகள்- ஜனசமுத்திரம். வடக்குக்கும் ஏனைய பகுதிகளுக்குமானதோர் பாலமாய்- கேந்திரஸ்தானமாய் முத்திரை குத்தியிருந்தது. எண்பதாம் ஆண்டுக்குப் பின் இன்றுதான் போகின்றேன். ஒன்றரைத் தசாப்த இடைவெளி. காக்கிச் சட்டை இலேசாக முறைத்துப் பின் சிரித்தது பெயரை வாசித்து - அப்பாடா.

"ஏன் வாறீர்" - "ஒரு கலியாணவீடு"

"எத்தின நாள் நிப்பீர்" - "ஒரு மாசம்"

"ரெண்டு கிழமைப்பாஸ்தாறம் ம்... எங்க ஜிஎஸ்ஸின்ர லெற்றர்?" பாஸ் பெற்றுத் திரும்பும்போதே வாழ்க்கை வெறுத்துப் போனது. சே... கியூவா அது? ஜனசமுத்திரம். யாழ்ப்பாணமிருந்து வந்து நிற்கிற சனம் ஒரு திருவிழாக் கோலமாய்... எங்கும் மனிதத்தலைகள்- பாஸ் வாங்கப் பரபரக்கும் கரங்கள்.

சொந்த மண்ணில் வாழ்வதற்கு- பாஸ்!

விடுமுறைக்கு வந்து நிற்பதற்கும்- பாஸ்!

விசேஷ வைபவங்களுக்கு வந்தாலும் - பாஸ், பாஸ்.. பாஸ்.. பாஸ் பாஸ்! கலாசாரம் தான் தடபுடலாகப் பரவிக்கொண்டிருக்கிறது. வீதிகளெங்கும் பரபரப்பு- ஒரு தலைநகர் போல. 'அட வவுனியாவின்ரை வளர்ச்சியைப் பார்த்து மட்டக்களப்பு பிச்சையெடுக்க வேணும்' எண்டு ஜனனோடு இனி வாதாடலாம் போல. நிலைமையைப் பார்த்தால் செட்டிகுளத்து றூட்டிலை பத்து நிமிஷத்துக்கு ஒரு பஸ் ஓடுமோ என்று கூட நினைக்கத் தோன்றுகிறது. அட அப்பிடியெண்டால் ராசேந்திரகுளப்பக்கம் கூட மினிடவுணாய் மாறியிருக்குமோ..., 'தட்டி வேன்கள்' மறைந்திருக்குமோ...? பாவற்குளத்துப் பாடசாலையெல்லாம் தேசிய கல்லூரியாகி விட்டிருக்குமோ...?' நிறைய ஆவல்கள் என்னுள்.

"பண்டாரிகுளத்துக்கப்பால் போகவிட மாட்டன்" என்று கொண்டு பெரியம்மா பதறினா. 'இதென்ன கிலிசம்பறையப்பா நானென்ன டவுணில நிக்கவே வந்தனான்.'

"நான் நெளுக்குளம் போகணும், நிக்கவேணும்"

"அதுக்கு அங்கை பதிஞ்சு பாஸ் எடுக்கவேணும்" நாசமாய்ப் போக இன்னொரு பாஸ்.. ஜனசமுத்திரம்... கியூ சே.. வேண்டவே வேண்டாம்.

பால்யப் பருவத்தில் பாவற்குளத்து வயல்வரம்புகளில் அம்மப்பாவின் சுட்டுவிரல் பற்றிக்கொண்டு நடந்திருக்கிறேன். துரை மாமாவின் தோள்மீதேறிப் பவனி வந்திருக்கின்றேன். குளத்தின் விஸ்தீரணத்தைப் பார்த்துப் பரவசப்பட்டிருக்கிறேன். மல்லிகா அன்ரியோடு வந்து மணிக்கணக்காய் கரையில் குந்தியிருந்து மருதநிலத்தின் மாண்பினைக் கண்டு வியந்திருக்கிறேன், முறியாக்குளத்தில் அப்புவின் ஏகாதிபத்தியத்தையும் உடல் உழைப்பையும் பார்த்து ஆச்சர்யப் பட்டிருக்கிறேன். அந்த இனிதான காலங்கள் இனிமேல் வருமா...? மெலிதாக வலி எழுந்தது. அபிவிருத்தி முத்திரை குத்தி நகராக்கம் காணவேண்டிய மண்-பாதுகாப்பு வலயமாக காடடர்ந்து கிடந்தது.

பொன் விளையும் பூமிகள் பொட்டல் நிலங்களாகிப் போயின. வன்னி மண்ணின் பெலமும் பெலவீனமும் காடுகள் தான். எத்தனை அடர்ந்த காடுகள் இப்போது பிரபல நகரங்களாக உருமாறியுள்ளன. ஆனால் இந்த மண்மட்டும் இன்னமும் அதே பாணியில்..., இதன் கிராமங்களின் வளங்கள் வீணாகிப்போய்! ஓ.. இன்னும் பல தசாப்தங்களைக் கடக்க வேண்டும் பழையபடி செழித்தோங்குவதற்கு.

இரண்டு வாரங்கள் வீணே நகரோடு கழிந்து போனது. குற்றால அருவியாய் குதித்துவரும் நினைவுகள்... நகரவே முடியாத நிதர்சனம். இந்த மண்ணில் அப்போது குடியிருந்த குதூகலம் எங்க போயிற்றோ... இந்தமண் மறந்து போன தன் வஸந்தகாலங்களை என் மனக் கம்பியூட்டர் வெளியேற்றி நினைவு படுத்திக் காண்பிக்கிறது.

இனி நான் இங்கு தாமதிக்க முடியாது. இந்த எல்லையை விட்டு அகல வேண்டிய காலக்கெடு முடிந்தாயிற்று. இனிக்காக்கியின் கண்களில் மண்தூவ முடியாது. 'என் மூலவேர் இங்குதான் ஊடுருவிப் பதிந்துள்ளது' என்றால்.. கம்பியெண்ண வேண்டிவரும். வேதனை கிளர்ந்தெழுந்தது. இந்த மண்ணிலிருந்து அந்நியமாக்கப்பட்டு விட்டேனா - இவ்வளவு விரைவாய். வலி தாங்கமுடியாத அலறல் என்னுள்.



படிப்பகம்

www.padippakam.com

# பொய் நிஜங்கள்

'சிவா, நான் இதுவரைக்கும் உன்கிட்ட இருந்து எதையுமே மறைச்சதில்லை; அப்படித்தானே நினைச்சிட்டிருக்க?'

கேள்வியுடன் அவனைப் பார்த்தேன். நாங்கள் நின்றிருந்தது ரயில்வே ஸ்டேஷன். இரண்டு மூன்று டியூப்லைட்டுகள் இங்கும் அங்குமாய் எரிய, எவ்வித பரபரப்புமின்றி ஒரு டிராலி 'கிறீச்' சிட்டுக் கொண்டு செல்ல, சற்றுத் தள்ளி வழுக்கைத்தலையோடு தினமுரசோ, வீரகேசரியோ புரட்டிக் கொண்டிருந்த வழுக்கையையும், தூரத்தில் நின்று கொண்டிருந்த அந்த வயலட் சுடிதாரையும் சேர்த்தால் பத்துப்பேர் இருக்கலாம்; அவ்வளவுதான்.

"மறைச்சதில்லடா, ஆனா ஒரே ஒரு விஷயத்தைத் தவிர," பேசியவன் மாதவன், என்னுயிர்த் தோழன். நாங்கள் படித்த கல்லூரியில் கர்ணனையும், துரியோதனனையும் அடுத்து நட்புக்கு உதாரணமாக எங்களைத்தான் சொல்வார்கள்.

அது ஒரு வசந்த காலம். கல்லூரியில் காலடி வைத்தது, சீனியர்களின் 'ராக்கிங்'– மாதவன் எனக்கு 'சப்போர்ட்' பண்ணி அடிவாங்கியது, அதன்பின்பு ஒரே பெண்ணை இரண்டு பேருமே 'சைட்' அடித்து, பெரிதாய் தியாகம் பண்ணுவதாய் இரண்டு பேருமே விட்டுவிட, அதை இன்னொருவன் தட்டிக்கொண்டு போனது.... ஆனால், எல்லா விஷயங்களிலும் நான் தான் அவனுக்கு ஆலோசகன்.

கல்லூரி விழாக்களில் என் கவிதை மழைகள், விளையாட்டு விழாக்களில் அவனின் சாகசங்கள்–எல்லாமே அற்புதமான நினைவுப் புதையல்கள்... எனக்கு எம்.ஏ.சீட் கிடைத்தது. அவனுக்கு பி.எஸ்சி. கிடைத்தது. இருவரும் தீபாவளி, பொங்கல் விடுமுறைக்கு சேர்ந்தேதான் வீட்டிற்கு வருவோம். கிட்டத்தட்ட ஒரு வருடம் ஓடிவிட்டது. இதோ இரண்டாமாண்டு துவக்கத்தில் அவனுக்கு சீக்கிரமே விரிவுரைகள் ஆரம்பித்துவிட, ரயில் ஏற்றிவிட நான் வந்த சமயத்தில் தான் இப்படி ஒரு குழப்பு குழப்பினான்.

"என்னடா சொல்றே? என்னத்த மறைச்ச? தெரியாம ஏதும் திருட்டு 'தம்' அடிச்சியா?"

"ச்சீ. அதெல்லாமில்லடா, காருண்யாவை நான் பார்த்தேன்."

"காருண்யாவ நீ... எப்ப?"

"லாஸ்ட் வீக்."

இங்கே காருண்யாவைப் பற்றி சொல்ல வேண்டிய கடமை எனக்கு உள்ளது. கவிதை போல் கல்லூரி வரும் அவள் மாதவனின் தோழி. கல்லூரி அழகி பட்டியலில் 'டாப்-10'ல் ஒருத்தி. கல்லூரிமுழுக்க, அவர்கள் இருவரை பற்றியும் கிசுகிசுக்க ஆரம்பித்த போதும் நான் மாதவனை நம்பினேன். அவன் 'லவ்' பண்ணியிருந்தால், என்னிடம் சொல்லியிருப்பான். சொல்லவில்லை.

"அவள நான் லவ் பண்ணினேன்டா..."

"'வாட்' என்னடா சொல்ற?" எனக்கு அதிர்ச்சியாகத் தான் இருந்தது.

"ஆமாடா. பட், நான் அவளை விரும்பினேனே தவிர, என்னை அவ விரும்பினாளா, இல்லையான்னு தெரியல!"

"மாதவா என்னடா குழப்புற?"

"கல்லூரியில் எங்களப் பத்தி தப்பா பேசினப்போ, நீ எங்கள நம்பினடா. நாங்க உண்மையான ஃபிரண்ட்ஸ்ன்னு கல்லூரிக்கு காட்டிக்க விரும்பினோம். ஆனா, நானே கொஞ்சம் கொஞ்சமா அவள 'லவ்' பண்ண ஆரம்பிச்சுட்டேன். கடைசி ஒரு வருஷமா ஏன் அவ கூட நான் பேசாம இருந்தேன்னு இப்பபுரியுதா? நீ ஆயிரம் தடவை கேட்டப்பவும் நான் சொல்லல. ஆனா, அதுக்கான காரணம் இது தான். என்னைக்கு அப்படி ஒரு தவறான எண்ணம் வந்திச்சோ அதுக்குப் பிறகும் அவகூட பேசற தகுதி எனக்கில்லன்னு தான் நானே விலகிட்டேன்."

"முட்டாள்... அவளும் உன்ன விரும்பி இருந்தான்னா?"

"நிச்சயமா... அவ என்னை 'லவ்' பண்ணினான்னு எனக்குத் தெரியும். வெளியே சொல்லலயே தவிர ரெண்டு பேருமே நேசிச்சோம்."

"பின்ன என்னடா வந்துச்சு" நான் ஏதும் சொல்வேன்னு நினைச்சியா...? காதல் தப்பே இல்லியேடா... ஏன் அவகிட்ட பேசல? ஏன் விலகின?"

"இல்லடா. எனக்கு உறுதியா சொல்லத் தெரியல. அப்ப ஏதோ ஒரு வேகம்; விலகிட்டேன். இப்ப எனக்கு உறுத்துதுடா. ஏதோ தப்பு பண்ணிட்டோம்னு உறுத்திகிட்டே இருக்கு! அவ என்னை விரும்பினாளா, இல்லையான்னு. இப்ப அவகிட்ட நான் கேட்கலாம்னு இருக்கேன்."

"ஏன்,"

"அவ என்ன விரும்பியிருந்தா நான் பண்ணினது தப்புத்தான். அதுக்காக மன்னிப்பு கேட்டுக்குவேன். இல்லைன்னா, நான் விலகினது ஒண்ணும் தப்பில்ல... மனசும் உறுத்தாது."

"வேணாம். கேட்க வேணாம்."

"ஏண்டா?"

"உன் மனசுக்குத் தெரியாதா, அவ உன்னை விரும்பினாளா இல்லையான்னு?"

"தெரியும்டா... வெளிலதான் சொல்லவியே தவிர, இரண்டு பேருமே விரும்பினோம்."

"அப்ப! ஏன் கேட்கணும்னு நினைக்கிற?"


"என்ன இருந்தாலும் அவ வாயால அதச் சொல்லிட்டா.."

"நோ. மாதவா நீ புரியாமப் பேசுற! இப்ப, ஒரு பொண்ண நீ லவ் பண்ற இல்ல?"

"ஆமா, ஆனா, அதுக்கும் இதுக்கும் என்னடா? என்மனத்திருப்திக்காக கேட்டுப் பார்க்கப் போறேன்."

"போடா முட்டாள்! அவ இன்னும் உன்னையே நினைச்சிட்டிருந்து, நீ போய் கேட்ட உடனே, இன்னும் நான் உங்களை

> "போடா முட்டாள்! அவ இன்னும் உன்னையே நினைச்சிட்டிருந்து, நீ போய் கேட்ட உடனே, இன்னும் நான் உங்களைலவ் பண்றேன்னு சொன்னா என்னடா செய்வே......?"



'லவ் பண்றேன்'னு சொன்னா என்னடா செய்வ? கல்யாணம் பண்ணிப்பியா? இல்ல... இப்ப... அவ பேரு என்ன, ம் லதா... அவ விஷயம்? தயவு செஞ்சு நான் சொல்றதக் கேளு... வீணா ரெண்டு பேரு வாழ்க்கையை நரகமாக்கிடாதே!"

"என்னடா சொல்ற?"

"யெஸ். உண்மையத்தான் சொல்றேன். ஏதோ ஒரு மனத்திருப்திக்காக நான் கேட்கிறேன்னு சொல்ற... அது அவளத் தூண்டி விட்ட மாதிரி ஆயிடாது? நீ சும்மா இருந்திருந்தாக்கூடப் பரவாயில்லை. இப்ப இன்னொரு பொண்ண 'லவ்' பண்ற! ஒருவேளை காருண்யா ஆமான்னு சொன்னா, மன்னிப்பு கேட்டுட்டு வந்துடுவியா? இல்ல இந்த பொண்ண விட்டுட்டு அங்க போயிடுவியா?

"இத்தன நாள் பேசாம இருந்துட்டு, இப்ப போய், 'லவ்' பண்ணினியா, இல்லியா?ன்னு கேட்டா, கண்டிப்பா அவ, நீ இன்னும் பழைய மாதவன்தான், அவளத் தான் 'லவ்' பண்றேன்னு தான் நினைப்பா! அதுக்கு என்ன செய்யப்போற?

"உன்னோட மன்னிப்பு எல்லாம் அப்ப எந்த மூலைக்கு வரும்? யோசிச்சுப் பாரு...

"சரி... இன்னொரு பக்கத்தை எடுத்துக்கோ, நீ கேட்டு அவ, 'இல்ல நான் அப்படி பழகல' அப்படின்னு சொல்றான்னு வெச்சுக்க, பிரச்சனையே இல்லன்னு நினைக்

**கீர்த்தனா**

கிறியா? அது இன்னும் கஷ்டமா இருக்கும். இவ்வளவு தூரம் பழகி காதலிக்கவே இல்லையா? பொய் சொல்றாளோன்னு தோணும். 'இவ என்ன பெரிய இவ'ன்னு சொல்ல வைக்கும், அவ மேல வெறுப்பு வரும்."

"இல்லடா..."

"நீ இல்லைன்னு சொல்லலாம். ஆனா, அது உன்னோட 'ஈகோ புறொப்ளம்.' 'அவ என்னைத் தான் காதலிச்சா,' அப்படின்னு உறுதியா சொல்ற உன்னால, அவ வாயிலிருந்து வர்ற நிஜத்தை உன்னால தாங்கிக்க முடியாம போயிடும்.

"வெளில சொல்லலையே தவிர 'அவ என்னைத் தான் காதலிச்சா'ன்னு சொல்றியே இதுல இருக்கிற சந்தோஷம், அந்த உண்மைல கண்டிப்பா இருக்காதுடா."

நெருங்கி அவனின் தோள் தொட்டான்.

"மாதவா.. நாம் எல்லாருமே வாழ்ந்திட்டிருக்கிறது பொய் வாழ்க்கைதாண்டா. கற்பனையான சந்தோஷத்திலதான் வாழ்ந்திட்டிருக்கோம். அனுமானங்கள்தான் எல்லாமே."

"சில விஷயங்களை கேள்வி எதுவும் கேட்காம நம்பணும். உண்மையோ, பொய்யோ, அது உன்ன பாதிக்காம சந்தோஷத்தை கொடுத்தால் சரிதான். கற்பனை சந்தோஷம்தான்; இருந்திட்டு போகட்டுமே... கசப்பான உண்மைகளை கட்டிகிட்டு, அழுமூஞ்சியா சோகமா இருக்கிறதவிட, கற்பனை சந்தோஷத்தில ராஜா மாதிரி வாழ்ந்துட்டுப் போ. அந்த லதாவாவது சந்தோஷமா இருக்கட்டும்!"

மாதவன் கண்கள் கலங்கியிருந்தன... "தாங்ஸ்டா... அவ என்னைத்தான் காதலிச்சாங்கிற நம்பிக்கை எனக்கு இருக்குடா, அது ஒரு சந்தோஷம்தான். அதுவே எனக்கு போதும்டா..."

'எனக்கு இப்படி அறிவுரை சொல்ல ஆளில்லடா, மாதவா... இருந்திருந்தா... என்னோட வந்தனா என்னை காதலிக்கிறாங்கற சந்தோஷத்தோட இப்பவும் நான் இருந்திருப்பேன். ஆனா... "நான் உன்ன. ஃபிரண்டா தான் நினைக்கிறேன் சிவா, என்னோட அத்தை பையனை 'லவ்' பண்றேன்"னு சொன்னா பாரு... அன்னைக்கே மனசால செத்துட்டேண்டா. என்ன 'லவ்' பண்ணலன்னு சொல்லியிருந்தாக்கூட பரவாயில்ல, இன்னொருத்தன லவ் பண்றேன்னு சொன்னா தெரியுமா..? இன்னும், இன்னும் நான் வெந்துட்டிருக்கேன். இன்னும் அந்தக்காயம் ஆறலடா... அதனாலதான் இப்பல்லாம் எந்தப் பெண்ண பாத்தும் பேச முடியல.' மனதிற்குள் புழுங்கினேன்.

"என்னடா திடீர்னு நீ அமைதியாயிட்ட? நான் கேட்க மாட்டேண்டா, நீ இவ்வளவு தூரம் சொன்னதே போதாதா..? இப்படி ஒரு தெளிவான நண்பன் கிடைச்சானேன்னு நினைச்சு ரொம்ப பெருமைப்படறேண்டா!"

"உனக்கு பச்சை சிக்னல் விழுந்துருச்சுடா நீ கிளம்பு," என்றவாறு, அவனை ரயிலேற்றி அனுப்பி வைத்தேன். வெறுமை என்னை சூழ்ந்தது.

# ரெட்டை வால்

மழையுமில்லாமல்; வெயிலுமில்லாமல் வானம் மப்படித்துப் போயிருதந்தது. காலநிலையை இரசிக்கின்ற நிலையில் ஒரு பூச்சி புழுவாவது அந்த முகாமிலிருக்கவில்லை.

எந்நேரமும்–

பசி... பட்டினி... அவலங்கள்... அவலங்கள். யுத்தம் எத்துணை கோரமானது என்பதை ஒவ்வொரு கணமும் நிச்சயமாய் நிர்ணயித்துக் கொண்டிருந்தது.

அதன் சாவுக்கரங்களில்.... வயது பேதமில்லாமல் மனித இரைகள் விழுந்து கொண்டிருந்தன.

பார்வதி பிஞ்சு மகனை மார்போடணைத்து தாலாட்டிக் கொண்டிருந்தாள்.



மூன்றே வயது நிறைந்த அந்தச் சின்னக் குருத்துக்கு அரவணைப்பைத் தவிர வழங்கக் கூடிய செல்வம் அப்போதைக்கு அந்த ஏழைத் தாயிடம் வேறேதும் இருக்கவில்லை.

வீட்டில் இருக்கும் வரைக்கும் சோகங்கள் முழுவதும் தனக்கு மட்டும் தான் சொந்தம் என்று அழுது மாய்ந்த பார்வதியால் இப்போ இயல்பாய் இருக்க முடிந்தது.

துன்பமே வாழ்க்கையாய் துவண்டு போய்க் கொண்டிருக்கின்ற இந்த முகாம் மக்களுக்காய் அனுதாபப்பட்டாள். தனக்காக அழுவதை... மறந்து; மற்றவர்களுக்காய்... அழுகை வந்தது.

இன்றோடு இந்த முகாமுக்கு வந்து ஐந்து நாட்களிருக்கும்.

ஊரிலிருந்து முதன் முதலாய் புறப்பட்டதை நினைக்க... நினைக்க.... கழுத்தறு பட்ட கோழியாய் நெஞ்சு கிடந்து துடித்தது.

உயிர் மட்டும் மிஞ்சினால் போதும் என்ற உத்வேகத்தோடு ஓட்டமும் நடையுமாய் நகர்ந்து போகும் அந்த ஜன வெள்ளத்தில் மகனைத் தோளில் சாத்தியவாறு பார்வதியும் கலந்திருந்தாள்.

ஓடும்கூட்டம் பொன்னை விட்டு... பொருளை விட்டு... கட்டிக் காத்த மண்ணை விட்டு... "உயிருக்காக" மட்டும் ஓடிக் கொண்டிருந்தது. சொந்த மண் கை விரிக்க வந்த மண் வரவேற்றுக் கொண்டிருந்தது... அகதி மக்களை!!

❑❑

கொண்டவன் பார்வதியை "அறுத்து" விட்டு யாரோ ஒரு குமரிப் பெண்ணோடு குடும்பம் நடத்திக் கொண்டிருக்கிறான் என்ற

**எஸ். ரோஜா**

சேதியை கதை கதையாய்ப் பேசிற்று ஊர். பாதி வழியிலே ஸ்தம்பித்துப் போன வாழ்க்கையைக் கண்டு அழுது மாய்ந்தாள்... பார்வதி!!

அவள் கண்களில் நீருக்குப் பதில் இரத்தம் வந்தது. கோடி கோடியாய்த் தேடி குமரியோடு வாழ்கின்றான் என்று ஊர் வாய் சொன்னது. அவள் ஊமையானாள்.

வாழாவெட்டியான அந்தப் 'பட்ட மரம்' பிள்ளைக்காக தன் கிளைகளை பரப்பலாம் என்று எண்ணமிட்டது.

இவள் அவனை தேடிப்போகவோ... அவன் இவளை தேடி வரவோ இல்லை. மாதங்கள் வருஷங்களைத் தேடி... மூன்று குட்டுக்களை வைத்தது.

திக்குத் திசை தெரியாமல் ஓடி வந்ததில்; கிளிநொச்சி; இந்த அகதிக் குடில் ஆதரவளித்தது.

❑❑

கடந்த காலம் பாறாங்கல்லாய் அழுத்த சோர்வோடு சாய்ந்த உட்கார்ந்து பார்வதியின் கவனத்தைக் கலைத்தது வாசலில் தெரிந்த நிழல்.

"வெற்றிலை இருந்தா ஒண்டு தருவீங்களா...?" நிமிர்ந்து பார்த்தாள்.

> "ஊரிலிருந்து முதன் முதலாக புறப்பட்டதை நினைக்க, நினைக்க..... கழுத்தறுபட்ட கோழியாக நெஞ்சு கிடந்து துடித்தது."

நிறைமாதக் கர்ப்பிணி.

'கொழுத்த பணத்தின் வாரிசாய் இருக்க வேணும்...' இருந்து மென்ன இப்போதைக்கு அவள் எதிர்க் குடிலின் அகதி!! "இருங்கோவன்..."

தரையைக் காட்டினாள் பார்வதி.

மிகச் சிரமப்பட்டு உட்கார்ந்தாள் அவள்.

"நீர் எவ்வடம்....?"

"மானிப்பாய்... நீர்...?"

"....அச்சு வேலி......"

பின்னைய பரிமாறல்கள்....

அவள் போய் விட்டாள்.

○○

வெண்ணிலா வானில் இருந்தவாறே சுகம் கேட்டுக் கொண்டிருந்தாள்.

பாணை மகனுக்கு... ஊட்டிவிட்டு மடியைத் தொட்டிலாக்கினாள்... பார்வதி.

இருளைக் கிழித்துக் கொண்டு 'விர்' ரென்று வந்த...' ஒரு பெண்ணின் கதறல் பார்வதியின் நெஞ்சக் கூட்டை விறைக்க வைத்தது.

முகாமே விழித்துக் கொண்டு உதவிக்கு ஓடியது. மகனை ஓலைப்பாயில் கிடத்தி விட்டு.... குடிலுக்கு வெளியே வந்தாள்.

எதிர்க்குடிலில் கூட்டம் சன்னமாய்ச் சேர்ந்திருந்தது.

".....பிரசவ வலி கண்டுட்டுப் போல...." நினைவுகள் அதிர... வேகமாய் நெருங்கினாள்.

கிழிந்த நாராய்க் கிடந்த அந்த நிறைமாதக் கர்ப்பிணி கதறிக் கொண்டிருந்தாள்.... "ஐயோ... அவர... பாம்பு கடிச்சிட்டுதே...."

வாயில் நுரைதள்ள... செத்துக்கொண்டிருந்த அவனைக் கண்டு...: அதிர்ந்து போனாள் பார்வதி!!!

அவன்–

அவளின் முன்னாள் கணவன்.

சம்மணமிட்டு உட்கார்ந்தாள்.

குடிலில் தூங்கிக் கொண்டிருக்கின்ற தன் இளங்குருத்தின் முகமும், முகம் காட்டாத ஒரு சிசுவின் ஜனனமும்; அவள் நெஞ்சில் நிழலாடியது.

அழுகை வரவில்லை.

# பஸ்ஸுக்கு நேரமாச்சு

வார்ட்டில் அனுமதிக்கப்பட்டிருக்கும் தன் தந்தையைப் பார்ப்பதற்காக பிரியா ஆஸ்பத்திரியை நோக்கி வேகமாக நடந்து கொண்டிருந்தபோது அவனைக் கண்டாள்.

சில இளம் பெண்களோடு சிரித்துப் பேசிக் கதைத்துக் கொண்டிருந்த அவனைக் கண்டதுமே தன் காலிலிருந்த செருப்பைக் கழற்றிய பிரியா பின் எதையோ எண்ணிக் கொண்டவளாக கைக்கடிகாரத்தைப் பார்த்தாள். நேரம் பகல் 12.50. "அடடே...... நேரமாகி விட்டதே! சரி பிறகு பார்த்துக் கொள்வோம்" என தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டு இன்னும் வேகமாக நடந்தாள் ஆஸ்பத்திரியை நோக்கி.

திரும்பி வரும்போது எதேச்சையாக குறிப்பிட்ட அந்த இடத்தை நோக்க.......

அவள் கண்களில் அந்த அவன் தென்பட்டான். பக்கத்தில் யாருமில்லை. தனியாக அமர்ந்திருந்தான். இதுதான் சரியான சந்தர்ப்பம் என எண்ணிப் பிரியா அவசரம் குறையாமல் தன் கால் செருப்பைக் கழற்றிக் கையில் எடுத்துக் கொண்டு வெகுவேகமாக அவனை நோக்கி நடந்தாள். நின்றாள். கையில் செருப்பு. முன்னால் அவன்.



"தம்பி! பஸ்ஸுக்கு நேரமாச்சு. அறுந்து போன இந்த செருப்புப்பட்டியை கொஞ்சம் சீக்கிரமா தைச்சித் தர முடியுமா?" என்றாள்.

"சரியக்கா, இதோ ஒரு நொடியில் தைச்சுத் தந்திடறேன்"

என்றபடி அவன்அவள் கையிலிருந்த செருப்பை வாங்கி தைக்க ஆரம்பித்தான்.

# குண்டு இருக்கு

பஸ்ஸுக்குள் இருந்த தாடி வைத்த நபரை சக பயணிகள் சற்றுப் பயத்தோடு கவனித்தார்கள். அவனிடம் ஒரு சிறிய சூட்கேஸ் இருந்தது. அது கறுப்பாக இருந்தது.

அடிக்கடி தனது சின்ன சூட்கேஸை கையில் எடுப்பதும் வைப்பதுமாக இருந்தான் தாடி.

பஸ் படுவேகமாக சாலையில் வழுக்கிச் சீறிக்கொண்டிருந்தது.

'இந்தத் தாடி எப்போது இறங்கப் போகிறான். சூட்கேஸில் என்ன வைத்திருக்கிறான்'. பயணிகள் மனங்களில் பயக் கேள்வி.

சட்டென்று எழுந்தான் தாடி. நடத்துநருக்கு அருகில் போனான். கையில் சூட்கேஸ்.

"வண்டியை நிறுத்துங்க" என்றான்.

நடத்துநர் அவனை முறைக்க நினைத்துவிட்டு அவனது தோற்றத்தைப் பார்த்துவிட்டு, முறைக்க மறந்து, "இடையிலே நிறுத்த முடியாது." என்றார்.

"அப்படியா?" என்றான் தாடி.

"ஆமாம்" என்றார் நடத்துநர்.

"இங்கே பாருங்கள், இது என்ன சூட்கேஸ். உள்ளே என்ன இருக்கிறது தெரியுமா? வெடிகுண்டு. இன்னும் 5 நிமிடத்தில் இது வெடிக்கும். நான் இறங்கிக் கொள்ளவா, இங்கிருந்தே வெடிக்கவா? நீங்களே தீர் மானித்துக் கொள்ளுங்கள்" என்றான் தாடி.



அவன் சற்றே உரத்துப்பேசியது பஸ் சாரதிக்கும் தெளிவாகக் கேட்டுவிட்டது.

திடிரென்று 'பிரேக்' அடித்து நின்றது பஸ்.

தாடி இறங்கிக் கொண்டான். கையில் சூட்கேஸ். பயணிகளுக்கு நிம்மதி பஸ் பறந்து விட்டது.

**கே. கல்பனா**

தனது துணிகள் மட்டுமே உள்ள பெட்டியோடு தாடி நடந்து கொண்டிருந்தான். வீடு அருகில்தான் இருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

# நிறம் மாறும் பூக்கள்

நீலாவுக்கு மாசிப் பனிகூட மேனியை குளிராக்கவில்லை. உடல் முழுக்க இரும்பு உலையாகக் கொதித்தது.

"புழுக்கமாக இருக்கிறது. வெளி மாடத்திலே காற்றாட நிற்கலாமா?" என்று கேட்டாள் தோழியிடம்.

'கொல்' என்று நகைத்தாள் தோழி.

"ஏனடி நகைப்பு?"

"ஓடையில் இறங்கியதுபோல குளிர் வாடை தாங்காது தவிக்கிறது என் உடம்பு. நீயோ புழுக்கம் என்கிறாய்! குலுங்கிச் சிரிக்காமல் என்னடி செய்வது?"

நீலா பதில் பேசவில்லை. தோழி அவள் பக்கத்தில் வந்து உடலைத் தொட்டுப்பார்த்தாள்.

"தணலாய் சுடுகிறதடி தேகம்! வைத்தியரை அழைக்கலாமா?"

"பைத்தியமா உனக்கு?"

"நோய்க்கு வைத்தியம் செய்வது பைத்தியம் என்று யார் சொன்னது?"

"வைத்தியர் ஊரில் இல்லை!"

"யார் சொன்னார்கள்?"

"அவரேதான் சொன்னார்!"

"யாரிடம்?

"என்னிடம். என் இதயத்திடம்!"

தோழிக்கு இப்போதுதான் அவள் சொன்னதன் அர்த்தம் புரியத் தொடங்கியது.

"ஓ... நீ அந்த வைத்தியரைச் சொல்கிறாயா? அப்படியானால் உனக்கிருப்பது என்ன நோய் என்று சொல்லட்டுமா?"

"சொல்லேன் பார்க்கலாம்!"

"தேகநோய் அல்லடி, தாகநோய்!"

"முற்றிலும் உண்மை!"

"முற்றியதும் உண்மை, உன் தேகநோய்!"

"போடி கள்ளி!" தோழியை இறுக்கி அணைத்துக் கொண்டாள் நீலா.

"ஐயோ தாயே! அவர் என்று நினைத்து என்னை இறுக்கி உடைத்து விடப்போகிறாய்!.. ம்.. இப்போதுதான் புரிகிறது."

"என்னடி புரிகிறது?"

"இடைக்கிடையே ஏன் பிரிவை ஏற்படுத்திக் கொள்கிறார் என்று."

"ஏனடி?"

"ஓய்வு வேண்டாமா? உன்னோடு இருந்தால் ஓய்வா கிடைக்கும்? ஓயாமல் உரசுவாய். தீ பற்றிக்கொள்ளும். சிந்தை முழுக்க ஆசை நெய் இருக்கும். அதனால் விடிந்தபின்னரும் தேகம் இரண்டும் திரியாக எரிந்துகொண்டே இருக்கும்! ஓய்வு எங்கே கிடைக்கும்? அதனால்தான் தூரத்தில் இருந்து உடலை தேற்றிக் கொண்டு வருகிறாராக்கும் உன்னவர்!"

"மாபெரும் கண்டுபிடிப்பு!"

"பாம்பின் கால் பாம்பறியுமடி"

"நீயும் என்னைப்போலத்தான் என்கிறாய்! கண்ணைத் தூக்கம் தொடவிடாமல், காலைவரை கலை பயிலும் ஆர்வம் உனக்கும் அதிகம்தான் என்கிறாய்!"

இப்போது தோழிக்கு வெட்கம் வந்தது. எனினும் இன்ப நினைவில் நெஞ்சுக்குள் இருந்து நெருப்பாய் ஒரு மூச்சும் புறப்பட்டு வெளிப்பட்டது.

'அணைக்க முன் தேகம் வெந்தது நெருப்பில்; அணைத்தபின் தேகம் குளித்தது நதியில்! அவன் நனைத்ததால் இனித்தது இதழில்; அவன் அழைத்ததால் தேன் பாய்ந்தது செவியில்; மூச்சுப்பட்டதால் தீ சுட்டது செவி மடலில்!' தோழி தன் அனுபவத்தை நினைத்துக் கொண்டாள்.

'அழைத்தார், மறுத்தேன், சிரித்தார்; முறைத்தேன்; பக்கம் வந்து பார்த்தார்; பயந்தேன், தொட்டார், திகைத்தேன், தொட்டிழுத்து அணைத்தார், தேன், தேன் என்று உணர்ந்தேன். தேகமெல்லாம் தேன் சுரந்தேன்!' என்று நினைத்தாள் நீலா தன் அனுபவத்தை!



தோழிதான் முதலில் கனவுலகில் இருந்து விடுபட்டு வெளியே வந்தாள்.

"அடியே நீலா, பிரிவின் வேதனையும் ஒன்றுதான், போர்க்களத்தில் உயிர் குடிக்க பாய்ந்துவரும் பகைவனின் வேலும் ஒன்றுதான்."

"பகைவன் வீசும் வேலின் குறியில் இருந்தும் தப்பிக்கொள்ளலாம்: பிரிவின் கரம் வீசும் வேதனையெனும் வேல் வீச்சு இருக்கிறதே, அதிலிருந்து தப்பவே முடியாதடி தோழி".

"பாதிக்கப்பட்டிருக்கிறாய், அதனால் பாங்கான விளக்கம் உரைக்க முடிகிறது! கலங்காதே! உறவு இனிக்கத்தான் இடையில் இந்த பிரிவு என்று நினைத்துக்கொள்! எப்போதுமே பகலாயிருந்தால் ரசிக்கவா முடியும்? எப்போதுமே காதலர் பக்கத்திலிருந் தாலும் சுவைக்கவா செய்யும்? கசப்பில்தானே இனிப்பின் அருமை தெரிகிறது!"

"தத்துவம் பேசுகிறாய், பாட்டியாகப் போகிறாய்!"

"தத்துவமல்ல, தக்க நியாயம்!"

"ஏதடி நியாயம்? ஆறுதல் சொல்வது சுலபமடி, அனுபவித்தால்தான் தெரியும் சோகமடி! ஒருநாளும் அவரின்றி நெஞ்சுக்குள் மகிழ்ச்சி சுரக்குமோடி?" என்றுவிட்டு விம்மினாள் நீலா.

அவளை ஏறெடுத்துப் பார்த்தாள் தோழி. உண்மைதான், ஆக மூன்றே மூன்று நாள்; எப்படியெல்லாம் மெலிந்துவிட்டாள். வளையல் நழுவி விழுந்துவிடுமோ என்று நினைக்கும் அளவுக்கு மெலிந்துவிட்ட கரங்கள், மேலாடை தங்கியிருக்க மலை முகடாக உயர்ந்து நின்ற முன்னழகுகள் தாழ்ந்துவிட்டனவோ? மதயானைகள் போல மிரட்டும் அந்த எழில்கள் மான் குட்டிகள் போல பதுங்கிவிட்டால், பாவம் நீலாவின் காதலர் வந்து கவலை மிகப்படப்போகிறாரே?

தோள்கள் மட்டும் என்னவாம்; அவையும் தான் தமது பள பளப்பையும், பொலிவையும் தொலைத்துவிட்டனவே! காணி நிலம் வேண்டாம், இவள் மேனி வளம் ஒன்றே போதும் என்று ஆடவர்கள் விண்ணப்பம் போடும் எண்ணத்திற்கு காரணமானதல்லவோ இவள் மேனி. அந்த தந்த மேனி, தளிர் கொடி, சந்தனச் சிலை, எப்படி நிறம் மாறிப்போயிற்று?!

முன் எழில்களோடு சவாலுக்கு செல்லத் துடிக்கும் பின் எழில்கள். அவற்றின் மீது கூந்தல் புரண்டு வருடிக்கொண்டிருக்க, காணும் கண்களுக்கு அந்தக் கூந்தல்மீது கோபம் வருமே. பொறாமையும் எழுமே அவைகூட அடக்கமாகிவிட்டனபோல தெரிகிறதே!

என்றெல்லாம் நினைத்தாள் தோழி. நினைவுகளில் ஆச்சரியம் தந்தது மேனி நிறம் மாறிய விந்தைதான்.

"பூ என்பர் பெண்களை. வண்டென்பர் ஆண்களை. தேன் குடித்த வண்டு பறந்து விட்டாலும், பூவின் நிறம் மாறுவதில்லை. பூவின் எழில் தேய்வதுவுமில்லை. ஆனால், நம் காதலர் பிரிந்துவிட்டால் மட்டும் நம் மேனியில் பசலை படர்வது ஏனடி? நம் அழகும் தேயும் நிலவாய் சுருங்குவதும் ஏனடி?"

"நாங்கள் நிறம் மாறும் பூக்கள்! தேன் குடித்த வண்டு திரும்ப வரும் திசைபார்த்து பிரிவை வசைபாடிக் காத்திருக்கும் பூக்கள்!"

என்றாள் நீலா. சொன்னபோதே நெஞ்சுக்குள் அந்த நினைவும் எழுந்தது.

நீலாவின் மேனியெங்கும் இச் ஒலியோடு முத்த நடனம் ஆடிக்கொண்டிருந்தன மாறனின் உதடுகள். விரல்களை விரல்களோடு பிணைத்துக்கொண்டு, நெற்றி வகிட்டில் தொடங்கிய முத்த யாத்திரை, அடிவயிற்றில் வந்து சற்றே ஓய, இன்ப வேதனையில் புரண்டாள் நீலா. விரல்களை பிணைத்த விரல்களை விடுவித்து, அறுசுவை விருந்தை மூடிய துணியாகக் கிடந்த பூவுடல் மறைப்பாம் ஆடைகளுக்கு பிரியாவிடை கொடுத்துக் கொண்டிருந்தான் மாறன்.

வெட்கம் நீலாவை விழுங்கியது. அவனை ஆடையாக இழுத்து தன் பூமேனியில் அணிந்துகொண்டாள். அணிந்ததும் ஆடையின் முடிச்சை இறுக்குவது போல் அவனை முதுகின் மையத்தில் இருகரம் கோர்த்து இறுக்கிக் கொண்டாள்.

யுத்தம், யுத்தம். பகையே இல்லாத வாசயுத்தம்! இரண்டாய் ஆரம்பித்து ஒன்றாய் மாறும் அதிசய யுத்தம்!

யுத்தத்தின் முடிவில் தழுவலை சற்றுத் தளர்த்தி வெட்கத்தில் விலகினாள். அவ்வளவுதான், அந்தோ பரிதாபம், தங்கம் போல் தகதகத்த மேனி பிரகாசம் குன்றியது. குங்கும மேனி குறுகிப் போனது. பசலை நிறம் பரவிப் படர்ந்தது. என்னே அதிசயம்! ஒரு நொடி பிரிவே இப்படியானதே என்று அச்சரியப்பட்டாள் நீலா. அடுத்தநொடியே மாறனைத் தழுவிக் கொண்டாள்.

நிலாவின் ஆச்சரியம் நியாயம்தான். இதோ வள்ளவரே சொல்கிறாரே.

**"புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன்**
**-அவ்வளவில்**
**அள்ளிக்கொள் வற்றே பசப்பு"**


குறள்-1187-அதிகாரம்-119



## இலக்கிய நயம்

### தருவது ரசிகன்

## குறுக்கெழுத்துப் போட்டி இல-142



### இடமிருந்து வலம்

01. நகை செய்ய இது தேவை.
04. புராண, இதிகாசங்களில் பொதிந்து கிடக்கின்றது.
07. வயதானவர்களின் முடியை இந்தப் பூவிற்கு ஒப்பிடுவார்கள்.
10. இது இல்லாத வாழ்க்கையே இல்லை.
11. வாரத்தில் ஒரு நாள்.

### மேலிருந்து கீழ்

01. குற்றம் நடந்த இடத்தில் பொலிசார் முதல் தேடுவது இதைத்தான்.
02. பல கலை நிகழ்ச்சிகளை ஒன்றிணைத்து இதாக்கினால் நன்றாக இருக்கும்.
03. நெருப்பில் மடிந்தது, பின்னர் இதுவாகி விடும்.
05. பலம் மிக்க இரும்பைக் கூட இது பலமற்றதாக்கிவிடும்.
06. இது குறைந்தவர்களும் முயன்றால் வாழ முடியும்.
08. இவற்றின் சில இனங்களால் விவசாயிகளுக்குப் பெரும் தொல்லை.
09. இது இரண்டே இரண்டுதான் என்று சொன்னார் பாரதியார்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 09.03.1996இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-142
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

இதற்கான சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-140ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 மா | ண | 2 வ | ன் | ■ | 3 சி | 4 கை |
| ர் | ■ | ட் | ■ | 5 சு | க | ம் |
| க | 6 ப | டி | ■ | டு | ■ | பெ |
| ழி | ங் | ■ | 7 ச | கா | ■ | ண் |
| ■ | 8 க | ரு | வா | டு | ■ | ■ |
| 9 ச | ய | மை | ல் | ■ | 10 க | ரு |
| 11 க | ம் | பி | ■ | 12 து | ள | சி |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 140இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்:**

1. என். நிரஞ்சனி, கொழும்பு-03.
2. எம். சித்தி மர்ழியா, வவுனியா.
3. கே. ராமச்சந்திரன், புத்தளம்.
4. எம். ஜபார், அக்கரைப்பற்று.
5. திருமதி. ஜி. செல்வமணி, மாத்தளை.
6. செல்வி. பாத்திமா பர்வின், குருநாகல்.
7. ஜே. ரமணன், தெஹிவளை.
8. ஐ. இம்தியாஸ், பண்டாரவளை.
9. திருமதி. பி. நிருஷணன், நாவலப்பிட்டி.
10. ஏ. ஜெறோம், வத்தளை.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

# சிந்தியா

## பதில்கள்



★ இம்முறை உலகக் கோப்பை போட்டியில் இதுவரை சிறப்பாக ஆடியுள்ள அணி எது?

எல்.ரஹீம், பாணந்துறை.

கென்யா! அனுபவம் குறைச்சல். எதிர்க்க வேண்டி இருப்பதோ யானைகளை! அப்படியிருந்தும் எத்தனை உற்சாகமாக, துடிப்பாக விளையாடினார்கள்.

✻ ✻

★ காதலியை தொட வேண்டிய இடம் எது? தொடக்கூடாத இடம் எது?

ஆர்.சிறிஸ்கந்தராஜா, எல்ரோடோ.

தொடவேண்டிய இடம்:- தனிமை. தொடக்கூடாத இடம்;- பொதுமை.

✻ ✻

★ மனிஷா கொய்ராலாவின் முகவரியைத் தருவீர்களா?

ஆதம் சரிபா, ஹொரவப்பொத்தானை.

நானா பட்டேகரின் வீட்டு முகவரி எனக்குத் தெரியாதுங்க.

✻ ✻

★ மாஸ்டர்ஸ் கிரிக்கெட்டில் பழையவர்களின் ஆட்டம் எப்படி?

ந.கன்னன், மட்டக்களப்பு.

வயதானதால் வேகம் சற்றுக்குறைவாகத் தெரிகிறது. அதனை நிதானமான ஆட்டலாவகம் ஈடுகட்டி விடுகிறது. என்னதான் இருந்தாலும் அனுபவசாலிகள் அல்லவா!?

✻ ✻

★ காதலித்தால் கவிதை எழுத முடியுமா?

செல்வன் முகம்மது லாபீர், புல்மோட்டை.

காதலே ஒரு கவிதைதானே லாபீர்.

✻ ✻

★ காதலுக்கு வயது எல்லை உண்டா?

எம்.ரொசாரியோ, ராகம.

உலகின் ஆயுள் எதுவரை போகுமோ அதுவரை காதலும் பூரண ஆரோக்கியமாக ஜீவிக்கும்.

✻ ✻

★ பெண்களிடம் மட்டும்தான் கவர்ச்சி இருக்கிறதா? ஏன் ஆண்களிடம்...?

என். ரீ. ஆப்னுதீன், அக்கரைப்பற்று-06.

இல்லையென்று யார் சொன்னது? பெண்ணுக்கு ஆண் கவர்ச்சி. ஆணுக்குப் பெண் கவர்ச்சி. ஆப்னுதீன் உடம்பை கட்டாக வைத்துக்கொள்ளும்! மன்மதக் குஞ்சாகிவிடுவீர்.

✻ ✻

★ ஆளைப்பார்த்து அழகைப்பார்த்து ஆசை வைப்பவர் யார் சிந்தியா?

ஜே.ஜிப்ரி, மட்டக்களப்பு.

அவசரக்காரர்கள்.

✻ ✻

★ துரோணருக்கு ஏகலைவன் தன் விரலைக் கொடுத்தது போல, ரஜினிக்கு சரத்குமார் எதைக் கொடுப்பார்?

ஏ.எஸ்.மாலன், வவுனியா.

குரலை! ஆதரவுக்குரலைக் கொடுப்பார்.

✻ ✻

★ டியர் சிந்தியா! ரஜினிகாந்த் பாடினால் எப்படி இருக்கும்?

ஸலீம். எம். கடாபி, ஹொறவப்பொத்தானை.

மன்னன் படத்தில் 'அடிக்குது குளிரு' என்று பாடினாரல்லவா? அப்படியிருக்கும்.

✻ ✻

★ என்னம்மா சிந்தியா! நமது நாட்டு நிலவரம் பற்றி லேட்டஸ்ட்டாக ஒரு வரியில் கருத்துச் சொல்லும் பார்ப்போம்?

கா.கனகா, ஆரையம்பதி.

ஓட்டை வாளியில் தண்ணீர் அள்ளுகிறார்கள்.

✻ ✻

★ டியர் சிந்தியா! சூனியம் என்று ஒன்று உள்ளதே அது உண்மையா?

ஈ.ஜெ.எம். நிஸ்தார், திருமலை.

மந்திர தந்திர சூனியம்தானே? சுத்த அபத்தம். அப்படி இருப்பதாகப் பயப்படுவதால்தான் உளவியல் ரீதியாக பாதிக்கப் படுகிறீர்கள். கம்பியூட்டர் யுகத்தில் இந்த மாதிரி கண்ணாமூச்சி சமாச்சாரங்களை நம்பலாமா நிஸ்தார்?

✻ ✻

★ டியர் சிந்தியா! பெண்கள் ஆண்களிடம் சகஜமாகப் பழகினால் சந்தேகக் கண் கொண்டு பார்ப்பவர்களைப் பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?

சுந்தரம் பரமேஸ்வரி, அப்புத்தளை.

அவர்களிடம் ஏதோ கோளாறு இருக்கிறது. அதனால்தான் தம்மைப்போல பிறரை நினைக்கும் பக்குவத்தில் இருக்கிறார்கள்.

✻ ✻

★ உலகிலேயே மிகப்பெரிய பயங்கர ஆயுதம் எது?

எம்.ஐ.எம்.முனாஸ், முள்ளிப்பொத்தானை.

நம்பிக்கைத் துரோகம்.

✻ ✻

★ கன்னி வெடிக்கும், கண்ணி வெடிக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

எம்.ஐ.தாஹாபயறூஸ், அக்கரைப்பற்று - 06.

முன்னது கண் பட்டதும் வெடிப்பது. பின்னது கால்பட்டதும் வெடிப்பது.

✻ ✻

★ சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் புலிகளை அழித்திடுவோம் என்று பிரதி பாதுகாப்பு அமைச்சர் கூறியிருப்பது?

எம்.எஸ்.எம். முஹம்மதுஅலி, வெல்லம்பிட்டி.

எந்தச் சித்திரை என்று கூறவில்லையல்லவா?

✻ ✻

★ உலக மக்களிடையே காணப்படும் ஓர் ஒற்றுமை எதுவென்று கூறுவீர்களா?

ஸருக் இப்னு, மாத்தளை.

அவர்களின் பெயரில் அவர்களுக்குப் பிடிக்காத சம்பவங்கள் நடந்து கொண்டிருப்பதுதான் உலகரீதியான பொது ஒற்றுமை.

✻ ✻

★ டியர் சிந்தியா! புயலுக்குப் பின் அமைதி. நம்நாட்டு யுத்தத்திற்கு பின்?

எஸ்.பாலு, நில்லம்ப.

சுடுகாட்டு அமைதி,

✻ ✻

★ இலங்கை எப்பொழுது சுய பலத்தில் நிற்கும்?

எம்.எஸ்.எம். முஹம்மது அலி, கொழும்பு-12

சுயநல அரசியல் இறந்த பிறகு.

✻ ✻

★ டியர் சிந்தியா! எதை நினைக்க வேண்டும்? எதை மறக்க வேண்டும்?

எம்.தெய்வீக ரஞ்சனி, பது/தெளிவத்தை.

நினைக்க வேண்டியதும், நிலைக்க வேண்டியதும் செய் நன்றி. மறக்க வேண்டியதும், அழிக்க வேண்டியதும் செய் நன்றி கொல்பவர் உறவு.



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 22

## கங்கை நதி கடக்க குகன் செய்த ஏற்பாடு

இராமன் பதினான்காண்டு வனவாசத்தை முடியாமல் நாடுதிரும்பமாட்டான் என்பதை உறுதியாக உணர்ந்த தசரத மாமன்னரின் உயிர் பிரிந்தது. 'இராமன் திரும்பி வரவில்லை என்பதனை மன்னரிடம் இவ்வளவு அவசரமாக ஏன் உரைத்தோம்: அவ்வாறு கூறியமையினாலன்றோ மாமன்னர் உயிர் துறக்க நேர்ந்தது' என்று தன்னைத் தானே நொந்தவராக அமைச்சர் சுமந்திரர் புலம்பினார்.

மன்னரின் உயிர் பிரிந்ததை, அவர் அருகிலேயே இருந்தவாறு முதன் முதலில் அறிந்த பட்டத்தரசியான கோசலை, தன் தலையில் இரு கைகளாலும் அடித்த வண்ணம் அழுது புரண்டார். உடன் மயக்கமுற்று விழுந்தார். சுமத்திரையும் துக்க மேலீட்டால் அழுதாராயினும் ஓரளவு நிதானத்துடன் காணப்பட்டார். அக்காள் கோசலையின் தலையைத் தன் மடியில் கிடத்தி ஆதரவோடு தடவிக் கொடுத்து மூர்ச்சை தெளிவித்தார். உணர்வு மீண்டதும் பல கதைகளைக்கூறி, ஏனையோருக்கு ஆறுதல் கூறவேண்டிய நிலையிலுள்ள அரசி, நிலை தளம்பலாகாது என்று தேற்றினார்.

வசிட்ட மாமுனிவர் அப்போது அங்கு வந்து சேர்ந்தார். முற்றுமுணர்ந்த முனிவராக



இருந்தபோதும், நீண்ட நெடுங்காலம் ஒன்றாகப் பழகிய தனது உற்ற நண்பர் உயிரற்று- நீண்ட உறக்கத்தில் கிடப்பதைக் காண முடியாத வராகக் கண்ணீர் விட்டார்.

காலதாமதம் செய்யாமல் வசிட்டமாமுனிவரே அமைச்சர்கள், பிரதானிகள், படைத் தளபதிகள் ஆகியோர் அனைவரையும் அரண்மனைக்கு வரவழைத்து மந்திராலோசனையில் இறங்கினார்.

மன்னவர் நான்கு வீரப்புதல்வர்களைப் பெற்றும் அவருடைய இறுதிக் காலத்தில்- ஈமச்சடங்குகளைச் செய்ய ஒரு மகன் தானும் அவர் அருகில் இல்லை. மூத்த மகனான இராமனுக்கு தகவல் அனுப்பினாலும் கூட அவர் தன்னுடைய விரதத்தை முடிக்காமல் வந்துசேரப்போவதில்லை. இதனால் இரண்டாவது புதல்வரான பரதனை உடன் அழைப்பது என்று முடிவாயிற்று.

இன்றைய பஞ்சாப் மாநிலத்தை உள்ளடக்கிய அதன் மேற்குப் புறமான பிராந்தியம் கேகயநாடாகும். இதன் தலைநகர் இராஜாக்கிரகம். இங்கு தன் தாய்மாமன் வீட்டில் தங்கியிருக்கும் பரதனை உடன் அழைத்து வருவதற்கு சில வீரர்களை வசிட்ட மாமுனிவர் தேர்ந்தெடுத்தார். எவ்விடத்திலும் தரித்து நின்று தாமதிக்காமல் வேகமாக கேகயநாடு சென்று பரதனை அழைத்து வருமாறு அவர்களை அனுப்பி வைத்தார் முனிவர். எக்காரணம் கொண்டும் பரதனிடம் மன்னர் மாண்ட சம்பவத்தைக் கூறாமல் அழைத்து வருமாறு வீரர்களைக் கேட்டுக் கொண்டார்.

### தைலக்காப்பிட ஏற்பாடு

தூதர்கள் கேகயநாடு சென்று பரதனுடன் திரும்பி வர பல நாட்களாகி விடும் என்பதனால், அக்காலம்வரை மன்னரின் சடலம் பழுதடையாமல் பாதுகாக்க தைலக்காப்பிடுவதற்கான ஏற்பாடுகள் உடன் செய்யப்பட்டன.

இப்பொழுது இராமர், சீதை, இலக்குவன் ஆகியோரைச் சற்றுப் பின் தொடரலாம்.

தமஸா நதிக் கரையிலேயே இராமரின் சொற்படி சுமந்திரர் அயோத்தி திரும்பிவிட்டதாக சில இராமசரிதங்களில் காணப்படுகிறது. மக்களை ஏமாற்றுவதற்காக தேரை சிறிது தூரம் அயோத்தி நோக்கிச் செல்வது போல் தேர்த்தடம் பதித்து விட்டு, வேறு புறமாக வந்து மூவரையும் கங்கைக் கரை வரை இரதத்திலேயே சுமந்திரர் ஏற்றிச் சென்றதாக சில நூல்களில் விபரிக்கப் பட்டுள்ளது.

### கங்கை நதிக் கரையில்....

சீதை ஜனகரின் அரண்மனையில் வாழ்ந்த காலத்திலோ, இராமரைக் கைப் பிடித்து அயோத்திமாநகரடைந்து இல்லறம் நடத்திய காலத்திலோ வனவாசத்தின் தன்மையை உணர்ந்தவளல்ல. எப்போதும் தோழிகளால் சூழப்பட்டு அரச போகத்தில் வாழ்ந்து பழக்கப்பட்டவள். அத்தகைய சுக வாழ்க்கையைத் துறந்து, கணவனுடன் கானகம் புகுந்தாள். கல்லும் முள்ளும் கால்களைப்பதம் பார்க்க கரடு முரடான பாதையில் நடந்தாள்: எனினும் அவள் கண்ட இயற்கை வனப்பு அவளுக்குப்புத் துணர்ச்சியைத் தந்தது. அவள் மிக்க மகிழ்ச்சியாகவும் உற்சாகத்துடனும் காணப்பட்டமையினால் இராமர் உண்மையில் ஆனந்தமடைந்தார். எங்கே கானகத்தின் கொடிய தன்மைக்கு ஈடு கொடுக்க முடியாமல் சீதை துவண்டு துன்பப் படுவாளோ என்று கலங்கியிருந்த இராமருக்கு சீதையின் நிலை கண்டு உள்ளூர மகிழ்ச்சி ஏற்பட்டது.

மூவரும் சென்ற இடங்களிலெல்லாம் தவ சீரேட்டர்களான முனிவர்கள் தவோவனங்களை அமைத்திருந்தனர். இராமபிரானின் பெருமையை அறிந்த முனிவர்கள் மூவரையும் நன்கு வரவேற்று உபசரித்தனர்.

இயற்கை வனப்பை கண்களால் கண்டு, கருத்தால் உவகை எய்தியவர்களாக மூவரும் கங்கைக் கரையை அடைந்தனர். கங்காதேவியைத் தொழுது .நீராடியபின் ஓர் அழகிய பகுதியில் அன்றிரவினைக் களிக்கத் திட்டமிட்டனர். இதே காலகட்டத்தில் மங்கல வாத்தியங்கள் முழங்கும் ஒலி கேட்டது. இவர்கள் இருந்த இடத்தை அண்மித்து அந்த ஒலி வந்துகொண்டிருந்தது. சிறிது நேரத்தில் ஒரு பெரிய கூட்டமே அவர்களை நெருங்கி வந்தது. இராமரையும் சீதையையும் ஒரு மரப்புதரில் மறைந்திருக்கவைத்து விட்டு இலக்குவன் அவர்களை எதிர்கொண்டான். அக்கூட்டத்தில் நடு நாயகமாக விளங்கியவனைக் கண்ட இலக்குவன், அவர்களின் தலைவன் அவன் தான் என்பதை உணர்ந்து கொண்டான்.

கூப்பிய கரங்களுடன் வந்த அக்கூட்டத்தின்தலைவன் இலக்குவனை அணுகியதும், "இளைய பெருமாளான இலக்குமணனே! இராமபிரான் இங்கு எழுந்தருளுவார் என்று எனக்கு எப்போதோ தெரியும். அந்த அண்ணலின் தாள் பணிந்து கடைத்தேறும் நாளை எண்ணி இக்கங்கைக்கரையில் பல்லாண்டுகாலம் காத்துக்கிடந்த நான், இப்பிரதேசத்துக்கதிபதியான குகன். எங்கே என் அண்ணல்? தரிசனத்துக்காகக் காத்துக் கிடக்கும் எனக்குக் கொஞ்சம் கருணை காட்டுங்கள்" என்றான்.

### உன்னுடன் ஐவரானோம்

எதையும் உடனடியாக நம்பிவிடாமல் சீர்தூக்கிப் பார்த்து உண்மை- பொய், நன்மை- தீமைகளை அறியும் ஆற்றல் படைத்த இலக்குவன், குகனை அசுரர்களில் ஒருவேனா என்று ஐயமுற்றான். ஆனால் குகனின் கூற்றினைத் தன் செவிகளில் வாங்கிய இராமரோ சீதையுடன் வெளிவந்து நின்றார். குகன் எண்சாண் உம்பை பூமியில் கிடத்தி இராமரின் காலடியைத் தொட்டு வணங்கியவனாக- பக்தி மயமாகிக் கிடந்தான். இராமர் குனிந்து குகனின் தோள் பற்றித் தூக்கி எடுத்து மார்புறத் தழுவிக் கொண்டார். நீண்ட நெடுங்காலம் பிரிந்திருந்த உற்ற நண்பர்கள் மீண்டும் கூடினால் ஏற்படும் குதூகலம் எவ்வாறிருக்குமோ, அவ்வாறிருந்தது அக்காட்சி.

ஆட்சிப் பாரமேற்று, அயோத்தியின் அரியணையில் ஏறவேண்டிய இராமர், அனைத்தையும் துறந்தவராக கானகம் ஏக வேண்டிய காரணம் யாதோ,? என குகன் வினவ, இலக்குவன் உரிய சம்பவங்களை எடுத்துக் கூறினான். அனைத்தையும் கேட்ட குகன் கோவெனக் கதறி அழுதான். இராமர் அவனைத்தேற்றி, கண்ணீரைத்துடைத்து "குகனே! தசரத மன்னருக்கு நாங்கள் நால்வர் புத்திரர்களாகப் பிறந்த சகோதரர்களானோம். அவர்களுடன் இன்று முதல் நீயும் இணைந்து நாம் ஐவராவோம்!" என்றார். இவ்வார்த்தை குகனைப் பொறுத்தவரை தேவேந்திரப் பதவியே கிட்டிவிட்டதைப்போன்ற உணர்வினைக் கொடுத்தது.

குகன், 'இராமபிரானுக்கு தம்பி' என்ற அந்தஸ்து கிடைக்கும் என்று கனவில் கூடக் கருதியவனல்ல; அளவுகடந்து ஆனந்தமடைந்த குகன், பதிலுரையாக, "அண்ணலே! தாங்கள் இனிமேல் எங்கும் போக வேண்டாம், இப்பரந்த பிரதேசம் எனது ஆதிக்கத்துக்குட்பட்டதாகும். இங்கேயே- எங்களின் அரசனாக வீற்றிருந்து எம்மக்கள் அனைவரையும் நல்வழிப்படுத்திக் கடைத்தேற்ற வேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன்," என்றான் குகன்.

"பதினான்காண்டுகள் வனவாசம் ஏற்கும் படிதான் மன்னரின்ஆணை. இக்காலத்தில் அரசபோகமோ உல்லாச வாழ்க்கையோ உகந்ததல்ல சகோதரனே! வனத்தில் துறவு பூண்டு காய், கனி, கிழங்கு வகைகளை உண்டு காலங்கடத்துவதே பொருத்தமாகும். ஆகவே, நீ சென்று உன் மக்களுடன் இருந்துவிட்டு நாளைக் காலையில், கங்கையைக் கடந்து செல்ல படகு ஒன்றினை ஏற்பாடு செய்து தருவாயாக" என்று குகனை இராமர் கேட்டுக் கொண்டார். குகனோ, தான், ஓரிரவாவது இராமருக்குப் பணிவிடை செய்து உய்ய இடந்தரவேண்டும் என்று பணிந்து கேட்டுக் கொண்டான். இராமரும் மறுப்புக்கூற முடியாதவராய் ஒப்புக் கொள்ளவே, இராமபிரான் படுத்துறங்க பன்பாய் தயாரித்துக் கொடுத்ததுடன் சிறிது நேரம் அவருடைய கால்களை குகன் பிடித்து விட்டான். பின்னர் இலக்குவனும் குகனும், இராமரும் சீதையும் துயில்கொள்ளும் இடத்தைச் சுற்றிச் சுற்றி வந்து காவல் காத்து நின்றனர்.

பொழுது புலர்ந்ததும் கசலரும் கங்கையில் நீராடினர். இராமர் சிவபூசையிலீடு பட்டார். இலக்குவனும் சீதையும் அப்பூசையில் கலந்துகொண்டு பிரார்த்தனையிலீடுபட்டனர். பூசையும் பிரார்த்தனையும் முடிவுற்றதும் குகனும் அவரைச் சார்ந்தவர்களும் பலவகையான உணவுப் பண்டங்களைக் கொண்டு வந்தார்கள். குகனின் கூட்டத்தினரோடு அமர்ந்து, அன்போடு படைக்கப்பட்ட உணவினை உட்கொண்டபின்னர் குகன் கொண்டு வந்திருந்த படகினில் ஏறி மூவரும் புறப்பட்டனர். **(தொடர்ந்து வரும்)**

## இராஜகுமாரி

### இராமாயணப் போட்டி : 20

**சரியானவிடை:- பதின்நான்கு ஆண்டுகள்**

1. செல்வி. எஸ். பத்மாவதி. 115/11 டீன்ஸ் வீதி, கொழும்பு-10.
2. நடராஜா சுதர்ஷினி. அப்புத்தளை தமிர் மத்தியக் கல்லூரி, அப்புத்தளை.
3. ஸுபியா ஹலன். 184, மெயின் வீதி, மாத்தறை.
4. பி. நவரட்ணம். பேராதெனிய வீதி, கண்டி.
5. கந்தையா கருணாகரன். மமா/கொத் இறம்பொடை, த.ம.வி.இறம்பொடை.

**போட்டி இல. 22** கேள்வி:- பரதனின் தாய் மாமனின் நாட்டின் பெயர் என்ன?

மார்ச்.09க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்கப்பட வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி–இல.22, தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

---

விடுதலைப் புலிகளது தலைவர் பிரபாகரனும், புலிகளும் ஜனநாயக வழிக்கு வரவேண்டும் என்று கோரிக்கைகள் எழுகின்றன. அதனை பிரபாகரன் ஏற்றுக் கொண்டு ஜனநாயக வழிக்கு வந்தால் எப்படியிருக்கும்? ஒரு கற்பனை. **காதிலை பூ கந்தசாமி**

# பிரபாவின் இல்லத்தை தாக்கும் முயற்சி

## சுதந்திர கரும்புலிகள் நால்வர் கைது

(யாழ்ப்பாணம்)

நேற்றுக்காலை 10.30 மணியளவில் வடக்கு–கிழக்கு பிராந்திய முதல்வர் வே.பிரபாகரனின் இல்லம்முன்பாகசந்தேகத்துக்கு இடமான முறையில் நான்கு இளைஞர்கள் காணப்பட்டனர்.



பிராந்திய முதல்வர் பிரபாகரனின் புத்திரராவர்.

முதல்வர் பிரபாகரனின் பாதுகாப்புக்கு பொறுப்பான பொலிஸ் கண்காணிப்பாளர் சுந்தரமூர்த்தி தலைமையில் உள்ள பொலிஸார் அந்த நான்கு இளைஞர்களையும் கைதுசெய்து விசாரித்தனர்.

விசாரணையின்போது திடுக்கிடும் தகவல்கள் பல வெளியாகியுள்ளன.

கைது செய்யப்பட்ட நான்கு இளைஞர்களும் சுதந்திர கரும்புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினர் ஜனநாயக அரசியலில் கலந்து கொள்ள முன்வந்ததைக் கண்டித்து அந்த இயக்கத்தில் இருந்து பிரிந்து சென்றவர்களே சுதந்திரகரும்புலிகள்என்பதுகுறிப்பிடத்தக்கது.

சுதந்திர கரும்புலிகள் இயக்கத்தின் முடிவின்படி தமிழீழத்தைக் கைவிட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தேசத்துரோகிகள் என்று கணக்கப்படுகிறார்கள்.

சுதந்திர கரும்புலிகள் இயக்கத்தின் தலைவரான சாள்ஸ் அன்ரனி தற்போது வன்னிக்காட்டில் மறைந்திருப்பதாகவும், அவரது உத்தரவின் பேரிலேயே முதலவரது இல்லத்தை நோட்டமிட நான்கு இளைஞர்கள்அனுப்பப்பட்டதாகவும் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

சாள்ஸ் அன்ரனி வடக்கு–கிழக்கு பிராந்திய முதல்வர் பிரபாகரனின் புத்திரராவர்.

சிலதினங்களுக்கு முன்னர் வன்னிக் காட்டிற்கு சென்ற பி.பி.சி செய்தியாளர் ஆனந்தி சாள்ஸ் அன்ரனியை சந்தித்து பேட்டி கண்டார்.

"உங்கள் தந்தையாரை எதிர்த்து செயற்படுகிறீர்களே. பாசம் குறுக்கிடாதா?" என்று கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த சாள்ஸ் அன்ரனி;

"தமிழீழத்தை கைவிட்டால் அமிர்தலிங்கத்துக்கு மட்டுமல்ல நாளை பிரபாகரனுக்கும் மரண தண்டனைதான் என்று முன்னர் சொன்னவர் எனது தந்தை யார்தான் என்பதை மறந்துவிடாதீர்கள். தந்தைசொல்மிக்க மந்திரமில்லை"

என்று பதிலளித்தார் சாள்ஸ் அன்ரனி.

# பிரபா பதவி விலக வேண்டும்

## கூட்டணித் தலைவர் ஆவேச முழக்கம்

தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் தாங்களே என்று விடுதலைப்புலிகள் கூறுவதை ஆவேசமாக மறுத்துள்ளார் தமிழர் கூட்டணித்தலைவர் மு.சிவசிதம்பரம்.

வடக்கு–கிழக்கு பிராந்திய முதல்வர் பிரபாகரன் பதவி விலகவேண்டும். பிராந்திய சபை தேர்தல் நடத்தப்பட்ட முறை நீதியானதல்ல. நேர்மையானதல்ல என்று வடக்கு–கிழக்கு பிராந்தியம் எங்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி சூறாவளி பிரசாரம் செய்து வருகிறது.



தலைவர் சிவாவிடம் எமது நிருபர் கேட்ட கேள்விகளும் சிவா சொன்ன பதில்களும்.

**நிருபர்:–** பிராந்திய சபைகள் கிடைக்கக் காரணமே புலிகளது தியாகமிக்க போராட்டமும், இராணுவ நடவடிக்கைகளும்தானே? அப்படியிருக்க புலிகள் மீது ஏன் குறை கூறுகிறர்கள்?

**சிவா:–** புலிகள் ஆயுதம் ஏந்திப் போராடினார்கள் என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் அரசியல் தீர்வு உருவாக நாமும் இரவு பகலாக உழைத்தோம். மதிப்புக்குரிய நண்பர் நீலன் மூன்று நாள் தூங்கவில்லை. நான்கு நாள் சாப்பிடவில்லை. ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமைக் கூட்டத்தில் கலந்துகொள்ள ஓசி டிக்கெட் அனுப்பப்பட்டும்கூட அதனை கிழித்துக் குப்பைக் கூடையில் வீசிவிட்டு அரசியல் தீர்வு திட்டத்தை தயாரித்தவர் நண்பர் நீலன்.

**நிருபர்:–** அமைச்சர் பீரிஸ் அவர்கள்தான் அரசியல் தீர்வு திட்டத்தை தயாரித்ததாகக் கூறப்படுகிறதே?

**சிவா:–** அப்பட்டமான பொய். காகிதங்கள், மைக்கூடுகள் மற்றும் குண்டூசிகள் போன்றவற்றை அவர் தந்து உதவியது உண்மை. திட்டத்தை தயாரித்தது நண்பர் நீலன்தான். அவர் அடிக்கடி என்னிடமும் ஆலோசனை கேட்டார். தொலைபேசி மூலமாக நானும், திரு. சம்பந்தனும் ஆலோசனைகளை சொல்லி நீலனை உற்சாகப்படுத்தினோம்.

**நிருபர்:–** தீர்வு திட்ட யோசனையில் சம்பந்தம் இல்லையென்று நீங்கள் முன்னர் மறுத்திருந்தீர்களே?

**சிவா:–** அப்போது புலிகளிடம் ஆயுதம் இருந்தது என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

**நிருபர்:–** புலிகள்மீது ஏன் இத்தனை கோபம்?

**சிவா:–** (மேசையில் ஓங்கிக் குத்திவிட்டு) என் இனிய நண்பர் அமிர்தலிங்கத்தை என் கண்முன்பாக சுட்டார்களே... சுட்டுக் கொன்றார்களே எப்படி மறக்க முடியும். வடக்கு கிழக்கு முழுவதும் அமிர் நினைவுநாள் எழுச்சிக் கூட்டங்கள் நடத்தப்படும். ஏன் அவரைக் கொன்றார்கள்? என்று முதல்வர் பிரபாவிடம் கேள்விகள் எழுப்பப்படும்.

**நிருபர்:–** புலிகள் தான் அமிர் கொலைக்கு காரணம் என்று இப்போதுதானே சொல்கிறர்கள் முன்னர் ஏன் சொல்லவில்லை.?"

**சிவா:–** அதுதான் சாணக்கியம். அப்போது சொல்லியிருந்தால் இந்தக் கேள்வியை எழுப்ப நான் உயிரோடு இருந்திருக்க மாட்டேன்! வீரம் மட்டும் போதாது, விவேகமும் வேண்டும். தம்பிமாருக்கு விவேகம் போதாது. 1948 இல் நண்பர் அமுதரும் அப்படித்தான் சொன்னார் என்று நினைக்கிறேன்.

**நிருபர்:–** சுதந்திர கரும்புலிகள் இயக்கத்தினரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**சிவா:–** நாம் அகிம்சைவாதிகள். ஆயுதம் ஏந்திப்போராடும் தம்பி சாள்ஸ் அன்ரனி ஜனநாயக வழிக்கு வரவேண்டும் என்று வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன். முதல்வர் பிரபாகரன் உடனடியாக சுதந்திர கரும்புலிகள் இயக்கத் தம்பிமாருடன் பேச்சுக்கள் நடத்தவேண்டும்.

**நிருபர்:–** திரு. பரராஜசிங்கம் தங்களைவிட உறுதியாக சொல்லியிருக்கிறார்?

**சிவா:–** என்ன சொல்லியிருக்கிறார்?

**நிருபர்:–** "சுதந்திர கரும்புலிகளோடு முதல்வர் பிரபா பேச்சு நடத்த மறுத்தால் பிராந்திய அரசை கவிழ்க்கவும் தயங்கமாட்டோம்" என்று கூறியிருக்கிறார்.

**சிவா:–** (சிரிப்பை அடக்கிக்கொள்ளும் பொருட்டு கைக்குட்டையால் வாயை பொத்திக்கொள்கிறார்) நாம் மெல்ல நழுவுகிறோம்.

## செய்தித் துளிகள்

புலிகள் அமைப்பினரை ஜனநாயக பாதைக்கு வரவைத்தவர்கள் நாம்தான். சுதந்திர கரும்புலிகள் இயக்கத்தையும் ஒடுக்கியே தீருவோம். எதிர்வரும் மேதினத்துக்கு முன்னர் சுதந்திர கரும்புலிகள் இயக்கம் ஒடுக்கப்படும். **ஜனாதிபதி உரை.**

முதலில் ஜனநாயக பாதைக்கு வந்தவர்கள் நாம்தான். அதனால் முதல்வர் பிரபாகரன் நாம் முன்வைத்துள்ள ஜனநாயக தீர்வுத்திட்டத்தின' ஆறு அம்சக்கோரிக்கைகளைபரிசீலிக்கவேண்டும்.

**ஐந்து தமிழ் கட்சிகள் அறிக்கை.**

வடக்கு–கிழக்கில் எவரும் மூலதனம் போடவேண்டாம். **–பண்டாரவன்னியன் படை –எச்சரிக்கை**

சுதந்திர கரும்புலிகள் கரந்தடிப்படையினர் மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்று வருகின்றனர். பிரபாகரனும் ஏனைய தமிழ் கட்சிகளும் மக்களிடம் செல்வாக்கு இழந்துவருவதாக ஓய்வு பெற்ற ஆசிரியர் ஒருவர் எமது கொழும்பு முகவரிடம் தெரிவித்தார். **–இலண்டன் பி.பி.சி.**

வடக்கு–கிழக்கு பிராந்திய முதல்வர் பிரபாகரன் ஒரு முறை ஜனநாயக அரசியலுக்கு வந்துள்ளது நூறு தடவை ஜனநாயக வழிக்கு வந்தமாதிரி! **தமிழக முதல்வர் ரஜினி.**

அர்ஜென்டினாவில் நடைபெற்ற குண்டு வெடிப்பை சுதந்திர கரும்புலிகள் இயக்கம் மிக வன்மையாகக் கண்டிக்கிறது. பலியான குடும்பங்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள். **–சாள்ஸ் அன்ரனி.**

புலிகளையே ஒடுக்கி விட்டோம். ஓட ஓட விரட்டி ஜனநாயக பாதைக்கு வரவைத்து விட்டோம். இனிமேலும்தமிழ் மக்களுக்கு பிரச்சனை இருப்பதாக வதந்தி பரப்புவோரை கைது செய்து தண்டிக்க அரசு முன்வரவேண்டும். **–மதகுரு பாலதேரோ.**




படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O. (QD/24/NEWS/96)

www.padippakam.com

அருள் ஜுவலர்ஸ்
AROL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
433631
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

# குட்டி-குட்டிக்காரம்மா



இன்றைய திகதி வரை உலகிலேயே மிகச் சிறிய கார் இதுதான். அமெரிக்க நாணயக் குத்திமீது ரவுண்ட் அடிப்பதைப் பார்த்தாலே எத்தனை சிறிசு என்று தெரிகிறதல்லவா. (அமெரிக்க நாணயம் நமது 2 ரூபா குத்தியளவுதான்) இதனை உருவாக்கியவர் பெயர் காரியா. 4.785 மி.மீட்டர் நீளம். 1.730 மி.மீ அகலம். 1.736 மி.மீ உயரம். 1மி.மீட்டர் விட்ட செப்புச் சுருள்தான் எஞ்ஜின். செப்புக் கம்பியில் மின்சாரத்தை செலுத்தக் கார் ஓடித் திரியும். உச்ச வேகம் மணிக்கு 0.118 கி.மீட்டர். கின்னஸ் சாதனைக் கார்.

அம்மன் ஜுவல்
AMMAN JEWEL
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
332033
29 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

# அன்புப் பரிசு



உலகிலேயே ஒரு மரத்தில் பெரும் தொகையாக பூத்த-பூங்கொத்து இதுதான். மொத்தம் 4041 பூக்கள் பூத்தன. பூமரத்தின் உயரம் எட்டரை அடி. ஃபிரான்ஸ் நாட்டில் இந்திரே. என்-டொயிர் என்னுமிடத்தில் இதனை பாடுபட்டு வளர்த்தவர் ஃபிராங்கொயில். கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளது.

'வளர்த்தவருக்கு பூமரம் கொடுத்த அன்புப் பரிசு உலக சாதனைப் புகழ்.

# காலம் வரும்



உலகக் கோப்பை போட்டியில் முதன் முதலாக களம்புகுந்த அணி கென்யா. முதலாவது போட்டியே கிரிக்கெட் உலக ஜாம்பவான்களில் ஒன்றான இந்தியாவுடன்தான். ஆரம்பத்தில் சற்று தயங்கினாலும் பின்னர் உற்சாகமாக ஆடத்தொடங்கியது கென்யா. பந்து தடுப்பதிலும் அணி முழுவதும் துடிப்போடு செயற்பட்டது. டெண்டுல்கரையே சற்று திணறவைக்குமளவுக்கு பந்துவீசினார் ஆசிப் கரீம். இடதுகை சுழல்பந்து வீச்சாளர். வயது 32. (படத்தில் இருப்பவர் அவர்தான்) விக்கெட்டுக்களை சாய்ப்பதில் இன்னமும் முன்னேற்றமும், அனுபவமும் தேவை என்றபோதும், விஷயமுள்ள ஆளாக இருக்கிறார் என்று பாராட்டுக்கிடைத்தது.

அடுத்த உலகக் கோப்பை போட்டிக்கு முன்னர் கென்யா அணி உலகின் சிறந்த அணிகளில் ஒன்றாக வரமுடியும்.

ஆரம்பமே சூரத்தனத்தை காட்டுவதால், அனுபவமும் பெற்றுக்கொண்டால் கென்யா அணி புகுந்து தூள் கிளப்புப் கட்டத்தை எதிர்காலத்தில் எட்டக்கூடும் என்று நம்பமுடிகிறது.

கென்யா அணியின் மற்றொரு நம்பிக்கை நட்சத்திரம் பிரிஜ்ஜல் பட்டேல். வயது 19. இடதுகை சுழல் பந்து வீச்சாளர். 13 வயதில் முதல் தர கிரிக்கெட்டில் நுழைந்தவர். வயதிருப்பதால் வளர இடமுண்டு. அணியில் இளைஞர்கள் பலர் இருப்பதால் துடிப்புத் தெரிகிறது.

# நினைத்தால் ஜெயிக்கலாம்




83 இல் உலகக் கோப்பையை வென்றது இந்தியா. இந்திய அணி முழுவதும் ஒன்றாகப் போராடியதால் கிடைத்த பரிசு' என்ற பாராட்டும் கிடைத்தது.

இம்முறை 96 இல் எப்படி? உலகக் கோப்பையை வென்றெடுத்தால் இந்திய அணியின் வீரர்கள் ஒவ்வொருவருக்கும் கிட்டத்தட்ட தலா நாலேகால் இலட்சம் ரூபா பரிசாகக் கிடைக்கும். கால் இறுதிவரை சென்றால் ஒவ்வொரு வீரருக்கும் கிட்டத்தட்ட தலா 40 ஆயிரம் கிடைக்கும். அரை இறுதிவரை சென்றால் தலா ஒரு இலட்சம். சாதித்தால் சம்பாதிக்கலாம்.

Optica
வீடியோ கசெட்ஸ்
&
ஸ்பூல்ஸ்
உயர்தரம்
VHS
E180
Optica
E180,E120,E150 Etc.
RBW Industries (Pvt) Ltd.
503105, 730257 Fax: 733649

# கவரும் சின்னம்




இது கிரிக்கெட் உலகக் கோப்பை ஆண்டு. உலகக் கோப்பை போட்டியின் சின்னம்தான் மேலே இருக்கிறது. மாபெரும் பொருட் செலவில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய மூன்று நாடுகளும் நடத்தும் உலகக் கோப்பை திருவிழா மார்ச் 17 இல் முடிந்துவிடும். உலகெங்கும் உள்ள கிரிக்கெட் ரசிக, ரசிகைகளின் இதயத்துடிப்பை மார்ச் 17 இல் இறுதிப்போட்டி நடக்கும்போது துல்லியமாக கேட்கலாம்.

# முரசின் பரிசு



வாரம் ஒரு பட்டுச் சேலைப் போட்டியில் குதிக்கும் பல்லாயிரம் வாசகிகளில் இதுவரை அதிஸ்டசாலிகளாக தெரிவானவர்களில் ஒருவர் திருமதி சுகுணா ஜஸ்டின். 19, அல்விஸ் பிளேஸ். கொழும்பு-13. முரசின் உதவி ஆசிரியர்களில் ஒருவரான கலைமணி இரா.பத்மநாதன் பட்டுச்சேலைப் பரிசை வழங்குகிறார்.



படிப்பகம்